விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆவணி 29 புதன்கிழமை (14.09.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 270

## பேரறிவாளன் தாக்கப்பட்டார்

(வேலூர்)

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளன், வேலூர் மத்திய சிறைச்சாலையில், வட மாநில ஆயுள் தண்டனை கைதி ஒருவர் இரும்புக்கம்பியால் நடத்திய தாக்குதலில் படுகாயமடைந்துள்ளார்.

வடமாநிலத்தைச்சேர்ந்த ஆயுள் தண்டனை அனுபவிக்கும் ராஜேஸ் கண்ணா 23ஆம் பக்கம் பார்க்க....

## காணாமல்போனோர்; நாளை ஜெனிவாவில்

(ஜெனிவா)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், இலங்கையில் காணாமற்போகச் செய்யப்பட்டோர் விவகாரம் தொடர்பாக நாளை ஆராயப்படவுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 33 ஆவது கூட்டத் தொடர் நேற்று ஜெனிவாவில் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 30ஆம் திகதி வரை இந்தக் கூட்டத்தொடர் தொடர்ந்து 23ஆம் பக்கம் பார்க்க....

### தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில்

# முத்தமிழ் விழா நாளை ஆரம்பம்

### வடக்கு - கிழக்கு முதலமைச்சர்கள் பங்கேற்கின்றனர்

(மட்டக்களப்பு)

தமிழ் மக்கள் பேரவையின் கலை கலாசார உப குழுவின் ஏற்பாட்டில் வடக்கு-கிழக்கு மற்றும் மலையக தமிழ் கலைஞர்கள் ஒன்றாக இணைந்து சிறப்பிக்கும் மிகப்பிரமாண்டமான முத்தமிழ் விழா நாளை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பமாகவுள்ளது. உலகமயமாக்கல் சூழலில் ஈழத்து கலை இலக்கிய கலாசார போக்கும் சவாலும் எனும் தொனிப்பொருளில் நாளை 15 ஆம் திகதி, நாளை மறுதினம் 16 ஆம் திகதி, மறுநாள் 17 ஆம் திகதிகளில் நடை பெறவுள்ள இந்த மாபெரும் முத்தமிழ் விழாவில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணசபை முதலமைச்சர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்ற வளாகத்தில் நேற்று மூவர் கைது

### வெள்ளைவானில் வந்ததால் பதற்றம்

## சம்பூரில் அனல்மின் நிலையம் நிர்மாணிக்கப்படமாட்டாது!

### அரசாங்கம் அறிவிப்பு

(திருகோணமலை)

சம்பூர் அனல்மின் உற்பத்தி நிலையத்திற்கு எதிராக வரை

## கேணல் கலையழகனின் மனைவிக்கு அழைப்பாணை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் வடபோர் முனையின் கட்டளைத்தளபதியாக இருந்து

விவகாரம் தொடர்பாக நாளை ஆராயப்படவுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 33 ஆவது கூட்டத் தொடர் நேற்று ஜெனிவாவில் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 30ஆம் திகதி வரை இந்தக் கூட்டத்தொடர் தொடர்ந்து 23ஆம் பக்கம் பார்க்க....

மலையக தமிழ் கலைஞர்கள் ஒன்றாக இணைந்து சிறப்பிக்கும் மிகப்பிரமாண்டமான முத்தமிழ் விழா நாளை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பமாகவுள்ளது. உலகமயமாக்கல் சூழலில் ஈழத்து கலை இலக்கிய கலாசார போக்கும் சவாலும் எனும் தொனிப்பொருளில் நாளை 15 ஆம் திகதி, நாளை மறுதினம் 16 ஆம் திகதி, மறுநாள் 17 ஆம் திகதிகளில் நடை பெறவுள்ள இந்த மாபெரும் முத்தமிழ் விழாவில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணசபை முதலமைச்சர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (23ஆம் பக்கம் பார்க்க)

# நீதிமன்ற வளாகத்தில் நேற்று மூவர் கைது

## வெள்ளைவானில் வந்ததால் பதற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதவான் நீதிமன்றில் வழக கினை நிறைவு செய்து வெளியில் வரும் போது, கொழும்பு குற்றப்பிரி வினர் மூவரை வெள்ளை வானில் ஏற்றி சென்றதனால் நீதிமன்ற வளாகத்தில் பதற்றநிலை ஏற்பட்டி ருந்தது.

யாழ். நீதிமன்ற கட்டடத் தொகுதி தாக்கப்பட்ட சம்பவத்தோடு தொடர் புடைய வர்கள் என்ற குற்றச்சாட்டி லேயே மேற் 23ஆம் பக்கம் பார்க்க....

# சம்பூரில் அனல்மின் நிலையம் நிர்மாணிக்கப்படமாட்டாது!

## அரசாங்கம் அறிவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை - சம்பூரில் அனல் மின் நிலையத்தை அமைக்கப் போவதில்லை என மின்சக்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுரேன் பட்டகொட தெரிவித்துள் ளார்.

சம்பூர் அனல்மின் உற்பத்தி நிலையத்திற்கு எதிராக வரை யறுக்கப்பட்ட சுற்றாடல் மன்றம் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு நேற்று பரிசீலனைக்கு எடுத் துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே சட்டமா அதிபர் சார்பாக பிரதி சொலிசிட்டர் ஜென ரல் சஞ்சய 23ஆம் பக்கம் பார்க்க....

# கேணல் கலையழகனின் மனைவிக்கு அழைப்பாணை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் வடபோர் முனையின் கட்டளைத்தளபதியாக இருந்து மரணமடைந்த லெப் கேணல் கலையழகனின் மனைவிக்கு கொழும்பு பயங்கரவாத தடுப்பு பிரி வினர் அழைப் 24ஆம் பக்கம் பார்க்க....

# இலங்கை குறித்து குறிப்பிடவில்லை!



(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 33 ஆவது கூட்டத் தொடர் நேற்று 23ஆம் பக்கம் பார்க்க....

# "ஓர் அங்குலம் கூட விடுவிக்கப்படாது"

## வலம்புரி செய்திக்கு இராணுவம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

4419 ஏக்கர் நிலத்தில் ஓர் அங் குலம் கூட விடுவிக்கப்படாது; யாழ் படைகளின் தளபதி உறுதி என நேற்றைய வலம்புரி பத்திரிகையில் பிரசுரிககப்பட்ட செய்திக்கு இரா ணுவ தரப்பினால் தன்னிலை விளக்கக்கடிதம் அனுப்பி வைக் கப்பட்டுள்ளது.

குறித்த செய்தி தொடர்பாக பலாலி பாதுகாப்பு படைத்தலைமையக ஊட கப்பிரிவு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கையில், கொழும் பில் இருந்து வருகை தந்த சுமார் 38 பேரைக்கொண்ட ஊடகவிய லாளர்கள் குழு கடந்த 7 ஆம் திகதி யாழ் கட்டளைத்தளபதி மகேஸ் சேன நாயக்கவை சந்தித்திருந்தது.

அவர்களால் எழுப்பப்பட்ட கேள்வி களுக்கு கட்டளைத் தளபதி கீழ் வருமாறு 23ஆம் பக்கம் பார்க்க....


க.பொ.த (சா/த)

பரீட்சை

மாதிரி வினாத்தாள்

விஞ்ஞானம் II

வரலாறு I



உள்ளே...


# மோ.சைக்கிள் விபத்து;

## இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)

மன்னார் - யாழ்ப்பாணம் பிர தான வீதி நாயாத்து வழி பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் யாழ்ப்பாணம் ஆறுகால் மடம் புதுவீதியை சேர்ந்த தவராஜா நிரோசன் (வயது-20) என்ற இளை ஞன் உயிரிழந்துள்ளார். குறித்த இளைஞன் யாழ்ப்பாணத தில் இருநது மன்னாரில் உள்ள தனது உறவினர் வீட்டிற்கு வந்து விட்டு மீண்டும் யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போதே குறித்த விபத்து இடம்பெற்றுள்ள தாக தெரியவருகின்றது.

மன்னாரில் இருந்து யாழ். பிர தான வீதியூடாக பயணித்துக் கொண்டிருந்த போது நாயத்து வழி பிரதான வீதியில் மோட்டார் சைக்கிள வேக 24ஆம் பக்கம் பார்க்க....

# விடுதலைப்புலி உறுப்பினரை கொலை செய்த செயல் குற்றமென கூறமுடியாது

## இராணுவத்தை தண்டிக்க எதிரணி எதிர்ப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த ஒருவரை சுட்டுக் கொன்றமைக்கு பிரதிவுப காரமாக 20 இலட்சம் ரூபாயை உயி ரிழந்த நபரின் நெருங்கிய உறவி னர்களுக்கு வழங்குமாறு இராணுவ உறுப்பினருக்கு உத்தரவிட்டுள்ளமை அவரை தண்டிப்பதற்கு சமனானது என கூட்டு எதிர்க்கட்சி குற்றம் சாட்டி யுள்ளது. 23ஆம் பக்கம் பார்க்க....

# கண்ணீர் அஞ்சலி



மல்லாகம் நீதிமன்றத்தின்
நன்னடத்தைப்
பிரிவில் கடமையாற்றும்
நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு
சேவைகள் திணைக்களத்தின்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
திருமதி ஸயிந்தவி டெனேசன் புஸ்பகரன்
அவர்களின் தந்தையாரான

**திரு.தாமோதரம்பிள்ளை அமிர்தகுலசிங்கம்**
**(உட்துறைமுக வீதி, திருகோணமலை)**

அவர்கள் 09.09.2016 அன்று அமரத்துவம் அடைந்ததையிட்டு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-5753)

**நன்னடத்தை அலகு, நீதிமன்றம், மல்லாகம்.** **நன்னடத்தை உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.**

## திட்ட இணைப்பாளர் பதவிக்கான வேலைவாய்ப்பு

**தகமைகள் :-**

திட்டங்களில் குறைந்தது
05 வருடம் கடமையாற்றியோர்,
ஆங்கிலத்தில் தொடர்பாடவும்,
அறிக்கையிடவும், திட்டமொன்றை
கண்காணித்து

**பணியாளர்களை முகாமை செய்யும் அனுபவமுடையோர்.**

E mail மூலம் விண்ணப்பிக்கலாம் :-
**senthu@eureka.lk**

**விண்ணப்ப முடிவுத்திகதி :- 17.09.2016**


உலகெங்குமுள்ள உறவு
களுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD, VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்

ஸ்ரீமுருகன்
தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No : 021 222 5392

(C-5742)


## தேவை

நல்ல நிலையில் உள்ள
கொங்கிறீட் கலவை இயந்திரம்
உடன் விலைக்குத் தேவை.

(சி-5756)

**தொடர்பு :- 077 436 6704**

## வாகனம் விற்பனைக்கு

TATA Buddy ஒன்று
விற்பனைக்குண்டு. நேரில்
பார்வையிடலாம்.
முகவரி: 18/10, வைமன் வீதி, நல்லூர்.

**தொலைபேசி :- 077 2242394**


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் (சமுர்த்தி) போட்டிப் பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு

யாழ்.நகரில் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவிலும் (021 222 3382)
கிளிநொச்சியில் எடிசன் கல்லூரி (0775483470) நடைபெறுகின்றன.
மேலதிக தொடர்புகளுக்கு:-
0766883394

(சி-5754)

# கண்ணீர் அஞ்சலி



**பொன்னையா சபாரட்ணம்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர் -
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)

எமது கல்லூரியின் ஓய்வுபெற்ற முன்னாள் ஆசிரியர் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரி சமூகம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

(சி-5747)

## பணியாளர் தேவை



நல்லூர் பகுதியில் உள்ள பிரபல சைவ உணவகத்துக்கு கீழ்க்காணும் பணிவெற்றிடம் காணப்படுகின்றது.

- சமையல் உதவியாளர்
- உணவு பரிமாறுவோர் (நிரந்தரம், பகுதிநேரம்)



தகுதியானவர்கள்
கீழ்க்காணும் முகவரிக்கு
உடன் நேரில் சமுகமளிக்கவும்.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

(சி-5748)

**250, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**021 222 5556, 0773620708**

## மரண அறிவித்தல்

**திருமதி புஸ்பநாதன் தவமணிதேவி (K.K.அன்ரி)**



யாழ்.நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி புஸ்பநாதன் தவமணிதேவி (K.K.அன்ரி) நேற்று (13.09.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ந.புஸ்பநாதனின் அன்பு மனைவியும், திருமதி யோ.சுகிர்தாதேவி (யாழ்.மாநகர சபை, சோலைவரி பகுதி), திருமதி அ.சசிகலா (முள்ளியவளை), திருமதி ந.ஜெயந்தி (கொழும்பு), திருமதி சி.மாலதி (லண்டன்), காலஞ்சென்றவரான ஜெகன், சுரேஷ், திருமதி ஜெ.சுகன்யா (உடுப்பிட்டி), திருமதி எ.வாசுகி (அரியாலை), மயூரன் (Tilko hotel) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவரான செ.ஜோசப்குமார், வே.அருணோதயம் (கிராம அலுவலர்-முள்ளியவளை), மு.நமநாதன் (கொழும்பு), மு.சிவராசலிங்கம் (லண்டன்), திருமதி சுதாமதி, காலஞ்சென்றவரான ஜெயரதன், ஸ்ரீஸ்கந்தராஜா, எரிக்ரவீந்திரன், திருமதி சுயானி ஆகியோரின் ஆசை மாமியாரும், திருமதி ரோ.தமிழினி (வயம்ப பல்கலைக்கழகம்), ரோசன் (கொழும்பு), சங்கீதா (ஆசிரியை-கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்), சரண்யா (சட்டத்தரணி), செந்துயன் (யாழ்/இந்துக் கல்லூரி), அஞ்ஜதி (வயம்ப பல்கலைக்கழகம்), அஞ்சயன், அஞ்சிகா, அருஞ்சிகா (மு/வித்தியானந்தாக் கல்லூரி), சஞ்சைகாந் ஜெயவினோத், சஜித்ரா (கொழும்பு), அபிசந்தியா, செந்தியா, நிந்தியா (லண்டன்), விதுசகன், அபிராமி, சுஜிந்தன்ராஜ் (கிளிநொச்சி கொமர்ஷல் வங்கி), ரேணுயன், ரேணுயா, தானுயா (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இளங்கீரன் (யா/உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாசாலை), கிங்ஸ்லிறோய் (யா/ஸ்டான்லி கல்லூரி), அபர்ணா (யா/சுண்டுக்குளி), ஆர்னோல்ட், கான்சன் (சென்.ஜோன்ஸ்), சௌத்யன் (யா/ஸ்டான்லி கல்லூரி), சௌத்ரிதன் (கல்வியங்காடு இ.த.க பாடசாலை) ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியும், ஆரோனாவின் (லண்டன்) பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (15.09.2016) வியாழக்கிழமை முற்பகல் பத்து மணியளவில் கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் அமைந்துள்ள அவரின் மகனின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு.
0775100300/0772354928/0770711758 (சி-5749)

தகவல்:
குடும்பத்தினர்

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **சின்னத்தம்பி மகேஸ்வரன்**
(ஆயுள்வேத வைத்தியர் D.A.M)



அமைதியாய் ஓர் ஆண்டு
நகர்ந்து போனது
உமை இழந்து ஓர் யுகம்
போல் ஆனது!
நினைவில் உம் திருமுகம்
நிழலாய் ஆடியது
கனவிலும் உம் அன்புமுகம்
காண மனம் ஏங்கியது!
விண்ணுலகில் உம் ஆன்மா
இன்பமாய் இளைப்பாற
மண்ணுலகில் இருந்து நாம்
இறையருள் வேண்டுகின்றோம்.

தோற்றம் :- 31.01.1945
மறைவு :- 14.09.2015

**797, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.** - குடும்பத்தினர்

(5813)

# மோட்டார் சைக்கிள் விபத்தால் 50சதவீதமானோர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் கடந்த ஏழு மாதங்களில் இடம்பெற்ற விபத்துகளில் 50 சதவீதமானவர்கள் மோட்டார் சைக்கிள் விபத்துகளால் உயிரிழந்துள்ளனர் என வீதி பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.


இதனை வீதி பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சிசிர கொட தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த காலப்பகுதியில் 666 பேர் மோட்டார் சைக்கிள் விபத்தினால் உயிரிழந்துள்ளனர்.

குறித்த விபத்துகளில் பகல் வேளைகளில் இடம்பெற்ற விபத்துகளில் 355 பேர் உயிரிழந்துள்ளதுடன், இரவு வேளைகளில் இடம்பெற்ற விபத்துகளில் 311 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை இரவு வேளைகளில் விபத்து ஏற்படுவதற்கன பிரதான காரணம் மது பாவனை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை மோட்டார் சைக்கிள் விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புக்கு மற்றுமொரு பிரதான காரணியாக தரமற்ற மோட்டார் சைக்கிள் தலைக்கவசம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7-10)




# விசமப் பிரசாரம்

(கொழும்பு)

**வடக்கிலிருந்து சிங்களவர்களை வெளியேற்ற துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக தெற்கு சிங்கள ஊடகமொன்று விசமப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளது.**

வடக்கு மாகாணத்திலிருந்து அனைத்து சிங்களவர்களையும் விரட்டியடித்து. வடக்கினை தமிழர் தாயக பூமியாக மாற்றி அமைக்க ஒன்றிணையுமாறு இந்த துண்டுப்பிரசுரத்தில் கோரப்பட்டுள்ளது எனவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு தரப்பினர் இந்த துண்டுப் பிரசுரங்களை வடமாகாணம் முழுவதிலும் விநியோகம் செய்துள்ளனர். தமிழர் தாயக பூமிக்காக போராடுவோம் என்ற தொனிப் பொருளில் எதிர்வரும் 24ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் போராட்டமொன்று நடத்தப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு குறித்த துண்டுப்பிரசுரம் மூலம் மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கிலிருந்து சிங்களவர்களை முழுமையாக வெளியேற்றி. பௌத்த விகாரைகளை அகற்றி. தமிழர் தாயக பூமியை பாதுகாக்க வேண்டுமென துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# வரவு-செலவுத்திட்டத்துக்கு மக்களிடம் யோசனைகள்

(கொழும்பு)

அடுத்த வருடத்துக்கான புதிய வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடங்க வேண்டும் எனக் கருதப்படும் யோசனைகளை சமர்ப்பிக்குமாறு பொதுமக்கள். சிவில் அமைப்புக்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் என்பவற்றிடம் நிதி அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி வரையில் இந்த யோசனைகளை முன் வைக்க முடியும் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

புதிய வருடத்துக்கான வரவுசெலவுத் திட்ட யோசனைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் இரண்டாம் வாரம் பாராளுமன்றத்தில் முன் வைக்கப்படவுள்ளதாகவும் நிதி அமைச்சு கூறியுள்ளது. (இ-7-10)

# மகிந்த அணி முக்கியஸ்தர்களுடன் மைத்திரி தொலைபேசி மூலம் பேச்சு!

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியின் முக்கிய உறுப்பினர்களுடன் ஜனாதிபதி.மைத்திரிபால சிறிசேன தொலைபேசி மூலம் பேச்சு நடத்தியுள்ளார். தனது தனிப்பட்ட தொலைபேசியிலிருந்து குறித்த உறுப்பினர்களது தனிப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் அழைப்பு மேற்கொண்டு கலந்துரையாடியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



நாடாளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும. மஹிந்தானந்த அலுத்கமகே. குமார வெல்கம. கெஹெலிய ரம்புக்வெல. பந்துல குணவர்தன. பியல் நிஷாந்த. ஜானக்க வக்கும்புர ஆகியோருடன் தொடர்பு கொண்ட ஜனாதிபதி. தன்னுடன் கலந்துரையாடுவதற்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார். (இ-7-10)

# அதிகாரத்தை ஒழிக்கும் நோக்கிலே இலங்கையைப் பிரிக்கும் யோசனை


## மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் போர்வையில் நாட்டைப் பிரிக்கும் யோசனைகளை நிறைவேற்ற முயற்சிப்பதை எதிர்க்கின்றோம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஐ.தே.கட்சியின் கொள்கைகளை எதிர்த்து எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டார நாயக்க அக்கட்சியை விட்டு வெளியேறி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை உருவாக்கினார். இன்று சுதந்திரக் கட்சியை உருவாக்கிய ஸ்தாபகத்தலைவரின் மகள் ஐ.தே. கட்சியின் 70 ஆவது சம்மேளனத்தில் கலந்து கொண்டுள்ளார். பண்டாரநாயக்க. ஸ்ரீமாவோ ஆகியோர் சுதந்திரக்கட்சியின் கொள்கைகளைப் பாதுகாத்தனர். அதன் பின்னர் நாம் கட்சியைப் பாதுகாத்து பலப்படுத்தினோம்.

ஆனால் இன்று சுதந்திரக்கட்சியின் முக்கியஸ்தர்கள் ஐ.தே.கட்சியுடன் இணைந்து கட்சியின் கொள்கைகளைக் காட்டி கொடுத்துள்ளனர். ஐ.தே.கட்சியிடம் சுதந்திரக் கட்சி இன்று மண்டியிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 65 ஆவது சம்மேளனம் ஐ.தே.கட்சிக்காரர்களுடன் இணைந்து கொண்டாடப்பட்டது. அதே போன்று ஐ.தே.கட்சியின் 70 ஆவது சம் மேளனம் சுதந்திரக் கட்சியினருடன் இணைந்து கொண்டாடப்பட்டுள்ளது.




எனவே இவ்விரண்டு கட்சிகளையும் கலைத்து விட்டு புதிய கட்சியை இவர்கள் உருவாக்க வேண்டும். அதற்கு ஸ்ரீலங்கா ஐக்கிய தேசிய சுதந்திரக் கட்சியென பெயரிடலாம். விடுதலைப்புலிகளை நாம் ஒழித்தோம். ஆனால் தேசிய பாதுகாப்பில் கவனம் செலுத்தினோம். படை முகாம்களை அகற்றவில்லை. படையினரைக் குறைக்கவில்லை. ஏனென்றால் புலிகள் மீண்டும் எப்போதாவது தலையெடுப்பார்கள் என்றே பாதுகாப்பை பலப்படுத்தினோம். ஆனால் இன்றைய அரசாங்கம் தேசிய பாதுகாப்பு தொடர்பில் அக்கறை செலுத்த வில்லை. இன்று புலிகள் மீண்டும் தலை தூக்குவதை மலேசியாவில் கண்டு கொண்டோம்.

வடக்கில் பல்கலைக் கழகங்களிலிருந்து சிங்கள மாணவர்கள் அடித்து விரட்டப்படு கின்றனர். மலேசியாவில் இலங்கைத் தூது வர் தாக்கப்படுகின்றார். எனவே அரசு பாதுகாப்பில் அக்கறை செலுத்த வேண்டும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதில் எதுவிதமான பிரச்சினையும் எமக்கில்லை.

ஆனால் இதன் போர்வையில் நாட்டைப் பிரிக்கும் யோசனைகள், திருத்தங்களை முன்வைப்பதை கடுமையாக எதிர்க்கின்றோம். நான் 9 ஆயிரம் மில்லியன் ரூபா கடன் வாங்கியதாக அரசு எந்த நாளும் குற்றம்சாட்டுகிறது. ஆனால் இன்றைய அரசு இப்போதே 9 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக கடனைப் பெற்றுள்ளது என்றும் மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# ஹோலியிடமிருந்து கற்றுக் கொள்கிறேன் நியூசிலாந்து தலைவர் கேன் வில்லியம்ஸன்

இந்திய டெஸ்ட் அணியின் கப்டன் விராட் ஹோலியின் ஆட்டத்தைப் பார்த்து கற்றுக் கொள்கிறேன் என்று நியூசிலாந்து அணியின் கப்டன் கேன் வில்லியம்ஸன் கூறியுள்ளார்.




இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் வருகின்ற 22-ம் திகதி தொடங்குகிறது. இதற்காக கேன் வில்லியம்ஸன் தலைமையிலான நியூசிலாந்து அணி இந்தியா வந்துள்ளது.

தற்போதைய காலகட்டத்தில் விராட் ஹோலி, அவுஸ்திரேலிய அணியின் கப்டன் ஸ்மித், இங்கிலாந்து அணியின் ஜோ ரூட் மற்றும் நியூசிலாந்து அணியின் கேன் வில்லியம்ஸன் ஆகியோர்தான் சிறந்த வீரர்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது. இந்த நான்கு பேர்களில் யார் சிறந்தவர் என்ற விவாதம் தற்போது நிலவி வருகிறது.

இந்நிலையில் விராட் ஹோலி குறித்து கேன் வில்லியம்ஸன் கூறுகையில், "விராட் ஹோலி சிறந்த வீரர். அவருடைய திறமையால மூன்று வகை கிரிக்கெட்டிலும் பந்து வீச்சாளர்களுக்கு எதிராக ஆதிக்கம் செலுத்துவது மிகவும் சிறப்பு வாய்ந்தது. விராட் ஹோலி விளையாடுவதை நான் பார்க்க ஆசைப்படுவேன். அவரது விளையாட்டில் இருந்து நான் கற்றுக கொள்கிறேன். இதை உறுதியாகச் சொல்கிறேன். அவரை நான் பாராட்டுகிறேன்.

அதேபோல் ஸ்மித் மற்றும் ஜோ ரூட் ஆகி




யோரும் சிறந்த வீரர்கள்தான். நாங்கள் அனைவரும் மாறுபட்ட வீரர்கள். அதேபோல் மாறுபட்ட திறன்களை உடையவர்கள். எங்களுடைய சொந்த ஆட்ட நுணுக்கங்களை கொண்டு விளையாட முயற்சி செய்கிறோம். ஒவ்வொருவரும் மாறுபட்ட விஷயங்களை செய்ய முடியும். அதன மூலம் வெற்றி பெற முடியும்" என்றார். (க)

# தேர்வில் வெற்றி அமீர் கருத்து

எனது வாழ்க்கையில் கடினமான தேர்வில் வெற்றி பெற்று சற்று நிம்மதி அடைந்துள்ளேன் என்று இங்கிலாந்து தொடர் குறித்து அமீர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் அணி சமீபத்தில் இங்கிலாந்து சென்று மூன்று வகை கிரிக்கெட் தொடரிலும் விளையாடியது. இந்த தொடருக்கான பாகிஸ்தான் அணியில் மொகமட் அமீர் இடம்பிடித்திருந்தார்.

கடந்த 2011-ம் ஆண்டு மேட்ச் பிக்சிங்கில் ஈடுபட்டு தண்டனை பெற்றவர் அமீர். இங்கிலாந்தில் விளையாடும் போதுதான் இந்த சம்பவம் நடைபெற்றது. மீண்டும் அதே நாட்டிற்குச் செல்லும்போது அங்குள்ள ரசிகர்கள் அவரை ஏற்றுக்கொள்வார்களா?, பத்திரிகைகள் வரிந்து கொண்டு எழுதாமல் விட்டுவிடுமா? என்ற கேள்வியெல்லாம் எழுந்தது. மேலும், பாகிஸ்தான் அணி எந்தவித பிரச்சினையிலும் சிக்காமல் தப்பித்து விடுமா? என்ற கேள்வியும் முன்வைக்கப்பட்டது.



ஆனால், பாகிஸ்தான் அணி எந்தவித சச்சரவிற்குள்ளும் சிக்காமலும், அமீருக்கு எந்தவொரு தொந்தரவு ஏற்படாமலும் தொடர் சிறப்பாக முடிவடைந்தது.

இந்த தொடர் குறித்து அமீர் கூறுகையில், "இங்கிலாந்து தொடரின் போது மீடியாவின் பார்வை என்னை சுற்றியே இருந்தது. இதனால் எனது மனதில் பயம் ஒட்டிக்கொண்டிருந்தது. இதனால் சிறப்பாக விளையாட வேண்டும் என்ற நெருக்கடி இருந்தது. ஆனால், அணி வீரர்கள் மற்றும் ரசிகர்கள் கொடுத்த ஆதரவால் என்னுடைய வாழ்நாளில் ஒரு கடினமான தேர்வில் வெற்றி பெற்று சற்று நிம்மதி அடைந்துள்ளேன்.

லோர்ட்ஸ் மைதானத்தில் பட்டிங் செய்ய புறப்படும்போது கொஞ்சம் பதற்றம் இருந்தது. ஆனால், மைதானத்தில் இறங்கியதும் ரசிகர்கள் கைதட்டி என்னை வரவேற்றனர். இது எனக்கு சற்று ஆறுதலை தந்தது.

இங்கிலாந்து அணியைச் சேர்ந்த எவரும் என்னை தொந்தரவு செய்யவில்லை. அவர்களுக்கு நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மொயீன் அலி எனது அருகில் வந்து பழைய விஷயத்தை மறந்து விடுங்கள். வருங்காலத்திற்காக சிறப்பாக விளையாட தயார் படுத் திக்கொள்ளுங்கள் என்று அறிவுரை வழங்கினார்." என்றார். (க)

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சட்டத்தரணி சர்மினிக்கு பிணை

மல்லாகம் நீதவான் நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன் நேற்று செவ்வாய்க்கிழமை தனது சட்டத்தரணி ஊடாக நீதிமன்றில் முன்னிலையானார்.

இவ் வழக்கு மல்லாகம் நீதிமன்றில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட போது சட்டத்தரணி சர்மனி விக்னேஸ்வரன் சார்பில் ஆஜரான ஜனா திபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்ன சிங்கம் பிணை விண்ணப்பத்தை சமர்ப்பித்தார்.

அவ் விண்ணப்பத்தின் பெயரில் சர்மினியை இரண்டு நபர்களின் ஆட்பிணையில் செல்வதற்கு மல்லாகம் நீதவான் ஏ.யூட்சன் அனுமதித்துக் கட்டளையிட்டார்.

பிணையாளிகள் ஒவ்வொருவரும் தலா ரூபா ஒன்றரை இலட்சத்துக்கு பிணை முறியில கையெழுத்திட வேண்டும் எனவும் நீதவான் மேலும் கட்டளையிட்டார்.

இரண்டு சட்டத்தரணிகள் கையெழுத்திட்டதைத் தொடர்ந்து சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன் பிணையில் விடுவிக்கப்பட்டார். இவ் வழக்கில் கடந்த 2ஆம் திகதி சட்டத்தரணி சர்மினிக்கு எதிராக மல்லாகம் நீதவானினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அன்றைய தினம் நீதிமன்றில் ஆஜராகத் தவறினார் என்ற காரணத்திற்காகவே இப்பிடியாணைக்கு உத்தரவிடப்பட்டது. தனக்கு எதிரான பிடியாணை கட்டளையை மீளாய்வு செய்து இரத்துச் செய்யுமாறும் இடைக்கால நிவாரணமாக பிடியாணையை இடைநிறுத்தி வைக்குமாறு கோரி சட்டத்தரணி சர்மினி யாழ்.மேல் நீதிமன்றில் கடந்த 5ஆம திகதி திங்கட்கிழமை மீளாய்வு மனு தாக்கல் செய்தார்.

சட்டத்தரணி ரி.பிரதீபன் ஊடாக தாக்கல் செய்யப்பட்ட குறித்த மனுவில் தனக்கு எதிராக சம்மன்ஸ் எனப்படும் அழைப்பாணைக்கு உத்தரவிடப்படாமலேயே பிடியாணை பிறப்பிக்கப்பட்டது சட்டவிரோதமானது என சட்டத்தரணி சர்மினி தெரிவித்திருநதார்.

குறித்த 2ஆம் திகதிக்கு முன்னர் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் தனது வாக்குமூலத்தை அளிக்குமாறு மாத்திரமே மல்லாகம் நீதவான் நீதிமன்றினால் தனக்கு அறிவித்தல் ஒன்று வழங்கப்பட்டது என்றும் தனது வாக்கு மூலம் பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டது என்றும் தனது மனுவில சட்டத்தரணி சர்மினி குறிப்பிட்டிருந்தார்.

மேலும் 2ஆம் திகதி மல்லாகம் நீதிமன்றில் ஆஜராகுமாறு குறித்த அறிவித்தலில தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை என்றும் அவர் கூறியிருந்தார்.

இச்சூழ்நிலையில் குறித்த பிடியாணை முற்றிலும் சட்டவிரோதமானது என அவர் தெரிவித்திருந்தார்.

மல்லாகம் நீதவான் நீதிமன்றப் பதிவாளரை 13.06.2016ம் திகதி அலைபேசி ஊடாக அச்சுறுத்தியதாக பதிவாளரின் முறைப்பாட்டில கூறப்பட்டதை சட்டத்தரணி சர்மினி முற்றாக மறுத்திருந்தார்.

அன்றைய தினம் எச்சந்தர்ப்பத்திலும் அலைபேசியில் கதைததவர் தனது சிரேஷ்ட சட்டத்தரணி என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

பிணையில் செல்ல அனுமதிக்கபட்டிருந்த இருதய நோயாளி ஒருவரின் பிணைமுறி தொடர்பான மேல் நடவடிக்கைகள் தாமதப்படுத்தப்பட்டது சம்பந்தமாகவே, குறித்த சிரேஷ்ட சட்டத்தரணி யாழ்ப்பாண நீதிமன்றில் தன்னிடம் இருந்து அலைபேசியை வாங்கி, அதில் பதிவாளருடன் உரையாடினார் என்று சட்டத்தரணி சர்மினி தனது மனுவில் மேலும் தெரிவித்தார்.

சட்டத்தரணி சர்மினியின் மீளாய்வு மனுவை முதல்நிலை ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், இச்சந்தர்ப்பத்தில் பிடியாணை தொடர்பில் தான் தலையிட முடியாது என்றும், முதலில் மல்லாகம் நீதிமன்றில் சரணடைந்துவிட்டு, அதன்பின் ஏதாவது நிவாரணங்கள் தேவைப்படின் மேல்நீதிமன்றினை நாடலாம் எனவும் தெரிவித்து மீளாய்வு மனுவை அன்றைய தினமே நிராகரித்தார்.

இதைனை அடுத்தே சட்டத்தரணி சர்மினி நேற்று மல்லாகம் நீதிமனறில் ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் மற்றும் சட்டத்தரணி பார்த்தீபன்ஆகியோர்ஊடாக முன்னிலையானார். அவருக்குபிணைஉத்தரவை வழங்கிய நீதவான்ஏ.யூட்சன்வழக்கை அடுத்த மாதம் 16ம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (செ)


## மரண அறிவித்தல்

### முருகேசு ஜெயச்சந்திரன்
(தும்பையா மனேச்சர்)



அல்வாய் வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு ஜெயச்சந்திரன் (தும்பையா மனேச்சர்) நேற்று (13.09.2016) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-சின்னம்மா தம்பதியரின் கனிஷ்ர புதல்வனும், காலஞ்சென்ற கோவிந்தசாமி-சொர்ணபாக்கியத்தின் மருமகனும், காலஞ்சென்ற சிவலோகநாயகியின் அன்புக்கணவரும், காசிநாதன், நவரத்தினம், பாலச்சந்திரன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.09.2016) மு.ப 11.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:-
இரகுநாதன் சியாமளா
குடும்பத்தினர்

அல்வாய் வடக்கு,
அல்வாய்.

(சி-5756)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
திரு. யோகேஸ்வரன் நிஷாந்தன் அவர்களின்
அன்புத் தந்தை

### பொன்னுத்துரை யோகேஸ்வரன்
(ஓய்வுபெற்ற லிகிதர் - கல்வித்திணைக்களம் - தீவகம்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதுடன் அவரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(6814)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

# முத்தமிழ் விழா-2016

## "உலக மயமாக்கல் சூழலில் ஈழத்து கலை இலக்கிய கலாசார போக்கும், சவாலும்!"

### மீன்பாடும் மட்டு மாநகரில்

## செப். 15,16,17 அன்று நடைபெற இருக்கின்ற நிகழ்வுக்கு

### அனைத்து தமிழ் உள்ளங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்

**தமிழ் மக்கள் பேரவையின் கலை, கலாசார உபகுழு ஏற்பாட்டில் வடக்கு–கிழக்கு மற்றும் மலையக தமிழ் கலைஞர்கள் ஒன்றாக இணைந்து சிறப்பிக்கும் வரலாற்றுப் புகழ்மிக்க மிகப்பிரமாண்டமான முத்தமிழ் விழா!**

### நிகழ்வுகள்

நான்கு வகை நிகழ்வுகளைக் கொண்ட மூன்று நாள் நிகழ்வுகள்: தினமும் மாலை 5 மணி முதல் இரவு 10 மணிவரையான அரங்க நிகழ்வுகள்- பாட்டாளி விளையாட்டரங்கம். சமகாலத்தில் தினமும் மாலை 5 மணி முதல் நள்ளிரவு வரையான கள நிகழ்வுகளான வடமோடி, தென்மோடி கூத்துகள், புலிக்கூத்து, பறைச்சமர், சிறுவர் கலை விளையாட்டு நிகழ்வுகள், தமிழர் உணவுகள், ஓவியக்கண்காட்சி, குறும்படம் மற்றும் ஆவணப்படக் காட்சிகள் உள்ளடங்கிய பல கள நிகழ்வுகள். பாட்டாளி விளையாட்டரங்கத்தைச் சூழவுள்ள கோட்டை சிறுவர் பூங்கா பகுதி, மட்டு வாவிக்கரைப் பகுதி அடங்கிய சூழல். காலை உள்ளக நிகழ்வாக தமிழ் சார்ந்த ஆய்வரங்கம்- மட்டு மாநகராட்சி மன்ற கேட்போர் கூடம் காலை நிகழ்வாக, பல்வேறுபட்ட அருகிவரும் தொன்மை வாய்ந்த தமிழ் கலைஞர்களுக்கிடையிலான கலந்துரையாடல்கள் (அண்ணாவியர்கள், மருத்துவிச்சிகள், புலவர்கள் போன்றோர்) மட்டு வாவிக்கரை மரத்தடி நிழலில்.

## முதலாம் நாள் நிகழ்வுகள்

**15.09.2016 மாலை 4.00 மணி:**
**தமிழர் கலை, கலாசாரத்தை சித்தரிக்கும் பலவித ஊர்திகள், நடனங்களுடனான பண்பாட்டு ஊர்வலம்.**

**ஆரம்பம்: கல்லடிப் பாலம்** **நிறைவு: பாட்டாளி அரங்கம்**

பிரதான நிகழ்வுகள்

இடம்: பாட்டாளி விளையாட்டரங்கமும் அதனைச் சூழவுள்ள மட்டு வாவிக்கரை, சிறுவர் பூங்கா, கோட்டைப்பகுதி

பிரதம விருந்தினர்: **நீதியரசர், கௌரவ சி.வி.விக்னேஸ்வரன்**
(முதலமைச்சர், வடக்கு மாகாண சபை)

ஸ்ரீமத் சுவாமிஜீ பிரபு பிரேமானந்தா, தலைவர், இராமகிருஷ்ணமிஷன், மட்டக்களப்பு.
அதிவணக்கத்துக்குரிய **ஆண்டகை கலாநிதி யோசெப் பொன்னையா**
(மட்டக்களப்பு மறை மாவட்டம்) ஆகியோரின் அருளாசியுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

காலம்: 15.09.2016, மாலை 5 மணி
அரங்கு: சுவாமி விபுலானந்தர் அரங்கு
சிறப்பு விருந்தினர்: திரு.மா.உதயகுமார்
(மாநகர ஆணையாளர், மட்டக்களப்பு)

### முதல்நாள் – 6.00 மணி: கலை நிகழ்வுகள் ஆரம்பம்

♦வரவேற்பு நடனம்: நிருத்திய கலாலயம் (ஸ்ரீமதி வசந்தி நேரு) வழங்கும் "நிருத்திய ஆகுஞ்சனம்"
♦கிராமிய நடனம்: நர்த்தன பவனம் நாட்டியாலயம் (திருமதி ஷர்மிலதா பிரபாகரன்) வழங்கும் "கலை தரும் மண் வாசனை"
♦மிருதங்க இசை: நல்லை G.கண்ணதாஸ் வழங்கும் "நாத லய சமர்ப்பணம்"
(மிருதங்கம், வயலின், புல்லாங்குழல், வீணை, கீபோட், தபேலா, தவில், கெஞ்சிரா, முகர்சிங்)
♦வில்லுப்பாட்டு: தேற்றாதீவு தேனுகா கலை கழகம் வழங்கும் "ஆண்டாள் கல்யாணம்"
♦வயலின் இசை: யாழ்ப்பாணம் இணுவையூர் திரு.சுந்தரமூர்த்தி கோபிதாஸ் குழுவினர் வழங்கும் நாத சங்கமம் (வயலின், கெஞ்சிரா, முகர்சிங், தவில், மிருதங்கம், கீபோட், பேஸ் கிட்டார்)
♦பரத நாட்டியம்: பரத கலாலயா (பரத சூடாமணி ஸ்ரீமதி சுபித்திரா கிருபாகரன்) வழங்கும் 'தாண்டவம்'
♦பட்டி மன்றம்: "தமிழர் பண்பாடு சிதைந்து விட்டது, சிதையவில்லை"
♦இசை விருந்து: வன்னி சுரங்கள் வழங்கும்– "நவரசம்"
♦நன்றியுரை

## இரண்டாம் நாள் நிகழ்வுகள்

இடம்: பாட்டாளி விளையாட்டரங்கமும் அதனைச் சூழவுள்ள மட்டு வாவிக் கரை. சிறுவர் பூங்கா.கோட்டைப் பகுதி
காலம்: 16.09.2016 மாலை 5மணி
அரங்கு: பேராசிரியர் வித்தியானந்தன் அரங்கு
பிரதம விருந்தினர்: **பேராசிரியர் சி.மௌனகுரு**
சிறப்பு விருந்தினர்: திரு.ரி.அருணகிரிநாதர் (முன்னைநாள் மேலதிக அரசாங்க அதிபர், மட்டக்களப்பு)

### இரண்டாம் நாள்–5.30 மணி:கலை நிகழ்வுகள் ஆரம்பம்

♦வரவேற்பு நடனம்: கலார்ப்பணா நாட்டிய நிலையம் (*கலா வித்தகர் திருமதி சசிகலா ராணி ஜெயராம்*) வழங்கும் "வக்ர துண்ட நிருத்தியம்"
♦கிராமிய நடனம்: நிருத்திய கலாலயம் (*ஸ்ரீமதி வசந்தி நேரு*) வழங்கும் "வயல் வெளிப் பூங்கா"
♦புல்லாங்குழல் இசை: இசைஞானமணி.புல்லாங்குழல் வித்துவான் திரு.வை.பு.நக்கீரன் வழங்கும் "காற்றினிலே வரும் கீதம்" (*வேணுகான இசை நிகழ்ச்சி*)
♦கவியரங்கு:பொருள்: "இழப்பே இனியெம் பலமாய்!"
பரதநாட்டியம்:நர்த்தன பவனம் நாட்டியாலயம் (*திருமதி ஷர்மிலதா பிரபாகரன்*) வழங்கும் "சர்வேஸ்வர சமர்ப்பணம்"
♦நாடகம்: மட்டக்களப்பு மங்கையர்க்கரசியார் மகளிர் இல்லம் வழங்கும் "காத்தவராயன்" (*சிந்துநடை*)
பரதநாட்டியம்:செல்வ இசை நடன சபா திருமதி கோகிலா சரீஸ்குமார் வழங்கும் "பதம்" (*மன்னவனைக் கண்டேன்*)
♦இசை விருந்து: இசை விருந்து–ஆதவன் இசைக்குழு வழங்கும் "அன்றும்,இன்றும்,என்றும்!"
♦நன்றியுரை ♦நிறைவு

## மூன்றாம் நாள் நிகழ்வுகள்

இடம்: பாட்டாளி விளையாட்டரங்கமும் அதனைச் சூழவுள்ள மட்டு வாவிக் கரை, சிறுவர் பூங்கா , கோட்டைப் பகுதி
காலம்: 17.09.2016 மாலை 5 மணி
அரங்கு: தவத்திரு தனிநாயகம் அடிகள் அரங்கு
பிரதம விருந்தினர்: **கௌரவ ஹாபிஸ் நசீர் அகமது**
(*முதலமைச்சர் , கிழக்கு மாகாண சபை*)
சிறப்பு விருந்தினர்: திருமதி.பி.எஸ்.எம். சார்ள்ஸ்
(*அரசாங்க அதிபர் ,மட்டக்களப்பு*)

### மூன்றாம் நாள் 5.30 மணி: கலை நிகழ்வுகள் ஆரம்பம்

♦வரவேற்பு நடனம் :
♦கிராமிய நடனம் : நர்த்தன பவனம் நாட்டியாலயம் (*திருமதி ஷர்மிலதா பிரபாகரன்*) வழங்கும் "குரத்தி நடனம்"
♦வீணாகான வாத்திய விருந்து:
♦இசை விருந்து :
♦பரத நாட்டியம் : நர்த்தன க்ஷேத்திரா தயாரித்து வழங்கும் நர்த்தன ஆதலராங்கம்
♦நாதஸ்வர கானம் :
♦நாடகம்: மாமாங்கம் தமிழ்க்கலை மன்றம் வழங்கும் அப்புச்சி புகழ் சிதம்பரப்பிள்ளையின் "திருந்தாத உள்ளம்"
♦நன்றியுரை
♦நிறைவு

**தமிழ் மக்கள் பேரவை**

# இராணுவத் தேவைக்கு நிதி வழங்கியதால்

# தென்பகுதி நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யத் தயக்கம்

## வடக்கு அமைச்சர் விளக்கம்

வடபகுதியில் முதலீடு களை மேற்கொண்ட தென் பகுதி வணிக நிறுவனங்கள் பல முன்னைய காலங்களில் தமது சமூக கடப்பாட்டு நிதி களை இராணுவத் தேவை க்காகவே செலவளித்துள்ளன. இதன் காரணமாகவே தென் பகுதி நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொள் வதற்கு தயக்கம் காட்டி வந்துள் ளோம் என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங் கரநேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் 19 ஆயிரத்து 200 விவசாயக் கிணறுகள் பாழடைந்து காண ப்படுகின்றன. அவற்றை தொட ர்ச்சியான முறையில் புனர மைப்பு செய்யும் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள் ளார். வடக்கு மாகாண விவ சாய அமைச்சினால் யாழ். குடாநாட்டில் உள்ள சேத மடைந்த விவசாயக் கிண றுகளைப் புனரமைக்கும் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். பொது நூலக கேட்போர் கூடத் தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாம் ஆட்சிக்கு வந்த புதிய கால கட்டத்தில் தென்னி லங்கையை சேர்ந்த நிறுவ னங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி அபிவிருத்திப் பணி களை செய்வதில் தயக்கம் இருந்தது. பலருடைய ஆலோ சனைகளைப்பெற்றே ஒப்பந் தங்களை நிறைவேற்றக்கூடி யதாக இருந்தது.

ஏனெனில் எமக்கு தென் னிலங்கை நிறுவனங்கள் சிலவற்றினால் கசப்பான அனுபவம ஏற்பட்டிருந்தது. அதாவது முன்னைய ஆட் சிக்காலத்தில் மிகப்பெரிய சொகுசு வீதிகளை அமைத்த மஹா நிறுவனத்தினர் வீதி களை அமைப்பதற்கு முல் லைத்தீவில் இருந்தே கருங் கற்களை உடைத்து எடுத்தி ருந்தார்கள். அதிகளவு எடு த்ததால் வீடுகளில் வெடிப்பு ஏற்பட்டது.

இதை நாம் நேரில் சென்று பார்வையிட்டு அந்த நிறுவ னத்திடம் குழிகளை நிரவி விடுமாறு கேட்டிருந்தோம். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை. பின்னர் வணிக நிறுவனங்களுக் கான சமூக கடப்பாடு எனும் திட்டம் உள்ள நிதியினை செலவளித்து அவற்றை நிர வுமாறு கேட்டிருந்தோம். (அதாவது வணிக நிறுவன ங்களினால் சமூக மேம்பாட் டுத் தேவைகளுக்கு உபயோ கிப்பதற்கென நன்கொடை யாக வழங்கப்படும் நிதி) அதை பயன்படுத்தி விட்டதாக கூறினார்கள். அதற்குரிய பட்டியலை கேட்ட போது மிகப்பெரும் பட்டியலை தந்தி ருந்தார்கள். அதில் இராணுவ முகாம்களுக்குள் வீதிகளை போடுவதற்கும் இராணுவ முகாம்களின் நுழைவாயில் களை அழகுபடுத்துவதற்கும் அந்த கருங்கல் மற்றும் நிதி பயன் படுத்தப்பட்டுள்ளது என்பது தெரிய வந்தது. அதையே எமது சமூகத்து க்கு செய்யவும் அன்பளிப் பாக கணக்கு காட்டியிருந்தா ர்கள். இதனால் தான் நாம் தென்பகுதிநிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்வதில் தயக் கம் காட்டினோம்.

பல்வேறு கலந்துரையாடல் களின் பின்னர். யூல் பவர் மற்றும் பீற்றா பவர் காற்று மின் ஆலைகள் வணிக நிறு வனங்களுடன் 20 வருட ஒப் பந்தம்மேற்கொண்டுள்ளோம். முதல் 10 வருடங்களுக்கு ஆண்டுதோறும் 20 மில்லி யன் ரூபாய் தருவதாக இண ங்கிக்கொண்டார்கள். அடுத்த 10 வருடங்களுக்கு 23 மில் லியன் தருவதாகவும் கூறி யுள்ளார்கள். அதேபோல 2 வருடங்களில் 40 மில்லியன் தந்துள்ளார்கள். அவற்றுக் கான வேலைத்திட்டங்கள் நடைபெறுகின்றன.

நீதி நேர்மையான ஆட் சியை எமது முதலமைச்சர் செய்கிறார். வடமாகாணத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தவறு முறைகேடு இடம்பெ றாத வகையில் எமது மாகா ணசபை நிர்வாகம் உள்ளது.

யாழ். மாவட்டத்தில் மாத் திரம் 19 ஆயிரத்து 200 கிண றுகள் பாழடைந்து இருப்பதாக கூறப்படுகிறது. அவற்றை புனரமைப்பு செய்வதற்காக விண்ணப்பப்படிவங்களை விவசாய போதனாசிரியர் ஊடாக அனுப்பி விவசாயி களிடம் சேகரித்தோம். 3 ஆயிரத்துக்கு அதிகமான விண்ணப்பப் படிவங்கள் கிடைத்துள்ளன. அதை பரி சீலித்து முன்னுரிமை அடிப் படையில் 242 கிணறுகளை தெரிவு செய்து புனரமைப்பு பணிகள் இடம்பெறவுள்ளன. ஏனைய கிணறுகளும் பல் வேறு நிறுவனங்களின் உத வியுடன் தொடர்ச்சியாக புனர மைப்பு செய்யப்படும். எமது மண்ணின் நிலத்தடி நீர் மாசுபடக்கூடாது என்பதில் ஒவ்வொருவரும் அக்கறையு டன் இருக்க வேண்டும். நீரை யும் மண்ணையும் விவசாயி கள் பாழாக்குகிறார்கள் என்ற குற்றச்சாட்டில் இருந்து விவசா யிகள் விடுபட வேண்டும். அத ற்கான நடவடிக்கைகளை மேற் கொள் வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## சந்நிதி ஆலய சூழலில் இன்று

தொண்டைமானாறு செல் வச்சந்நிதி முருகன் ஆலய மஹோற்சவத்தை முன்னி ட்டு தினமும் மாலை 4 மணி முதல் 6 மணிவரை ஆலய முன்றலில் அமைக்கப்பட்டு ள்ள விசேட மேடையில் நிகழ் வுகள் இடம்பெற்றுவருகின்றன.

இந்நிகழ்வில் இன்று 14 ஆம் திகதி புதன்கிழமை பரு த்தித்துறை பிரதேச செயலர் கவிஞர் த.ஜெயசீலனின் பிரார் த்தனை உரை, தெல்லிப் பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ் தானத்தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திரு முருகனின் சொற் பொழிவு, கொழும்பு இந்துமாமன்ற அற நெறிப் பாடசாலை மாணவர் களின் சிவதொண்டர் அணி அங்குரார்ப்பணம், செல்வச் சந்நிதி ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பஜனை என்பன இடம்பெ றும். (இ-3)

## மாதா வீதி உலாக்காட்சி



துன்னாலை புனித சதா சகாய மாதா ஆலயத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பெருநாளும் கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற போது மாதா வீதி உலா வருவதை படத்தில் காணலாம். (இ-60)

## போதை ஒழிப்பால் கௌரவம்

யாழ்.மாவட்டத்தில் கஞ்சா கடத்தல்களை முறியடித்து அவற்றை கைப்பற்றி வரும் பருத்தித்துறைமதுவரித்திணை க்கள பொறுப்பதிகாரிக்கு ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன வால் கௌரவம் வழங்கப்பட் டுள்ளது. போதையற்ற நாடு எனும் தொனிப்பொருளில்யாழ்ப் பா ணத்தில் இடம்பெற்ற நிகழ் விற்கு அண்மையில் வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பல நிகழ்வுகளில் பங்கு கொண்டிருந்தார்.

போதைப்பொருட்களை ஒழிக்கும் திட்டத்தில் யாழ்.குடா நாட்டில் கஞ்சா கடத்தல்களை முறியடித்தமை, பருத்தித் துறை மதுவரித் திணைக்கள பொறுப் பதிகாரி சமிந்த சிறிமன்னுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன சான்றிதழ் வழங்கிக் கௌரவித்தார். (இ-60)



## நினைவுப்பரிசு வழங்கல்



கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு அண்மையில் விஜயம் மேற்கொண்ட பிரம்மகுமாரிகள் பிரதேச செயலர் எஸ்.சிவ சிறிக்கு நினைவுப் பரிசு வழங்கி வைத்தனர். (இ-60)


## பொலிஸ் பாதுகாப்பிலிலுள்ள மாட்டினை உரிமை கோரவும்



நெல்லியடி பொலிஸ் பாதுகாப்பில் உள்ள மாடு ஒன் றினை உரிமையாளர் யாராவது இருந்தால் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.பி.ஏ.பிரியந்த அறிவித் துள்ளார். துன்னாலைப் பகுதியில் ஆட்கள் அற்ற வீடு ஒன்றில் மாடு கட்டப்பட்டிருப்பதாக நெல்லியடிப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் நேற்று முன்தினம் இம் மாடு மீட்கப்பட்டது. வரணி சுரங்கப்பகு தியில் இருந்து இறைச்சிக்காக களவாக கொண்டு வந்து கட்டப் பட்டிருக்கலாம் எனவும் இம்மாட்டின் உரிமையாளர் தகுந்த ஆதாரத்தோடு நெல்லியடிப் பொலிஸ் நிலையம் வந்து மாட்டை பெற்றுக் கொள்ளலாம் எனப் பொலிஸ் பொறுப் பதிகாரி தெரிவித்தார். (இ-60)



கடந்த 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தின் போது. உடுவில் பிரதேச செயலர் எஸ்.நந்தகோபாலன். உத்தி யோகத்தர்கள், கிராம நலன் விரும்பி கள், நிர்வாகத்தினர் என பலர் பங்கேற்றி ருந்தனர்.






## நாளை விடுமுறை

நெல்லியடி வர்த்தக சங் கத்திற்குட்பட்ட அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த அனை த்து வர்த்தக நிலையங்களி ற்கும் நாளை வியாழக்கிழமை விடுமுறை அளிக்கப்பட்டுள் ளதாக சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

நாளையதினம் செல்வச் சந்நிதி ஆலய தேர் உற்சவ த்தை முன்னிட்டே இவ் விடு முறை அளிக்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகிறது. (இ-60)

# மிகவும் சந்தோசமான நாடுகளின் பட்டியலில் வல்லரசு நாடுகளை பின்தள்ளியது இலங்கை!

(கொழும்பு)

உலகில் மக்கள் சந்தோஷமாக நீண்ட ஆயுளுடன் வாழ்வதற்கு ஏற்ற நாடுகள் எவை என்ற பட்டியலை Happy Planet Index வெளியிட்டுள்ளது. 140 நாடுகள் இதன்கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.

இந்தப்பட்டியலில் முதல் 30 இடங்களுக்குள் இலங்கை உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும், அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, சீனா, இந்தியா, நியூசிலாந்து உள்ளிட்ட நாடுகள் முதல் 30 இடங்களுக்குள் இடம்பெறவில்லை.

ஆனால் இலங்கை 28 ஆவது இடத்தில் இருக்கிறது. முதல் 30 இடங்களிலுள்ள நாடுகளின் பட்டியல் வருமாறு,

கோஸ்டாரிகா, மெக்சிக்கோ, கொலம்பியா, வனுவாட்டு, வியட்நாம், பனாமா, நிகராகுவா, பங்களாதேஷ், தாய்லாந்து, ஈகுவடோர், ஜமைக்கா, நோர்வே, அல்பேனியா, உருகுவே, ஸ்பெயின், இந்தோனேஷியா, எல்சல்வடோர், நெதர்லாந்து, ஆர்ஜென்டீனா, பிலிப்பைன்ஸ், பெரு, பலஸ்தீன், பிரேசில், சுவிட்சர்லாந்து, தஜிகிஸ்தான், குவாட்டமாலா, பெலீஸ், இலங்கை, வெனிசுலா, அல்ஜீரியா. (இ)

## ஜோதிடத் தகவல்

### மூல நட்சத்திரம் தரும் உண்மை

மூல நட்சத்திரத்தில் பிறந்து லக்கினத்திற்கு மூன்றாம் வீடாகிய மாமனார் வீட்டில் கேது அமர்ந்து இருந்தாலோ மாரக ஸ்தானதமான 4,9 ஆம் வீடுகளில் கேது அமர்ந்து இருந்தாலோ மாமனாருக்கு கண்டத்தை ஏற்படுத்தும். மற்றப்படி மூல நட்சத்திரத்தால் மட்டும் மாமனாருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது.


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>கி.பா: 25<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: B.Eng(Hons) Electrical Teaching & Electronic (UK Citizen English)<br>தொ.இ: B/6279 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: 45 செவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:HNDA முகாமைத்துவ உதவியாளர் (அரச)<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் மிக முக்கியம்<br>தொ.இ: G/1989 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>கி.பா: 69 செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:(HNDA Studying) களஞ்சியப் பொறுப்பதிகாரி (அரச)<br>தொ.இ: B/6280 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா: 7.25<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம் மிக முக்கியம்<br>தொ.இ: G/1990 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா: 26.5 சூரி செவ் 2 இல் உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:O/L சுவிட்சர்லாந்து (NOTPR)<br>தொ.இ: B/6284 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா: 22.5<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L லிகிதர் (தனியார்)<br>தொ.இ: G/2005 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா: 17.5<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L (ஒஸ்திரியாPR)<br>தொ.இ: B/6285 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 26.5 செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/2008 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம்
## பங்குதாரர்களுக்கான முக்கிய அறிவித்தல்

எமது 72 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் 2016 செப்டெம்பர் 17 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது. தவிர்க்க முடியாத சில காரணங்களினால் மேற்படி கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது. மீண்டும் பொதுக்கூட்டத்திற்கான திகதி பின்னர் அனைவருக்கும் அறிவிக்கப்படும். பங்குதாரர்களுக்கு இதனால் ஏற்படும் சிரமங்களுக்கு வருந்துகின்றோம்.

(5907) 13.09.2016

இ.சபேசன்
காரியதரிசி


After A\L
COMPUTER COURSES
விசேட கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்
Diploma in Computerized Accounting — Tally, Quick Book, Accpack, M.Y.O.B
Diploma in Video Editing — Premiere Pro CS6, Adobe Photoshop, Adobe AfterEffet, Pinnacle Studio,
Diploma in Web Designing & Development
Advanced Diploma in Hardware & Networking
Java, C, C++, V.B.NET, PHP
தகவல்தொழில்நுட்ப கல்விக்கு முழுமையான கற்கை நெறி
DiTEC
Diploma in Information Technology
சிறந்த வேலை வாய்ப்புக்கும் உள்நாட்டு/ வெளிநாட்டு உயர் கல்விக்கு
புதிய பிரிவுகள் ஆரம்பம்
15/9/2016 (Thu) - 9.30 am.
19/9/2015 (Mon)- 9.30 am.
(C-5737)
யாழில் முதன்மை நிலை வகிக்கும் Spoken English
DMI COMPUTER EDUCATION
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்
DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| No.113, கன்னாதிட்டி வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) | M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி. NSB வங்கி அருகில் | No.19, A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |


## இராசி பலன்

14.09.2016
(ஆவணி 29, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
திரியோதசி பின்னிரவு 4.15 மணிவரை
திருவோணம் முற்பகல் 9.12 மணிவரை
சுபநேரம் 4.33-6.03 மணிவரை
இராகுகாலம் 12.03-1.33 மணிவரை
பிரதோச விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் | | |
| சந் | பூசம் இரவு 9.05 மணிக்கு கும்-சந் | | சூரி ராகு புத |
| செவ் | சனி | | குரு சுக் |

**மேடம்:** புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், தூரதேசத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்:** குடும்பத்தில் நிலவி வந்த மனஸ்தாபங்கள் அகலும், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு, அரைகுறையான பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**மிதுனம்:** முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம், கூட்டாளிகளை அனுசரித்து செல்வது நல்லது, வேலைச்சுமை கூடும், போசன சுகக்குறைவுகள் ஏற்படலாம்.

**கடகம்:** நட்பால் நல்ல காரியங்கள் இடம்பெறலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், உங்களின் கருத்தை பலரும் ஏற்பர்.

**சிம்மம்:** வழிபாட்டின் மூலம் வளம் காணும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், அரசியல் வாதிகளால் அனுகூல முண்டு.

**கன்னி:** சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள், புண்ணிய காரியங்களுக்கான செலவுகள் ஏற்படலாம், சுற்றத்தாரின் வரவுகள் ஏற்படலாம், சிந்தனை மிகுதியான நாள்.

**துலாம்:** நீண்ட நாட்களாக வாங்க நினைத்த பொருளொன்றை வாங்கும் வாய்ப்புண்டு, பேச்சில் கனிவு பிறக்கும், செல்வ நிலை உயர சிவனை வழிபட வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும், பணத்தேவைகள் பூர்த்தியாகும், பாராட்டும் புகழும் கூடும் நாள், தொழில் மேன்மையுண்டு.

**தனுசு:** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் இடம்பெறலாம், வார்த்தைகளால் பிறரைக் கவர்வீர்கள்.

**மகரம்:** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், உடல் நலன் சீராகும், பேச்சை குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் அலைச்சலும் மனச் சோர்வும் ஏற்படலாம்.

**மீனம்:** நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

# யாழ்ப்பாணத்திற்கு கடத்தப்படவிருந்த 24முதிரைக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன

## சாரதி கைது; வேவுத் தகவல் வழங்கிய நபர் தப்பியோட்டம்



(முல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயப் பிரிவிலுள்ள மாங்குளம் பொலிஸ் பிரிவில கொக்காவில் ஒலிபரப்புக் கோபுரத்திற்கு அண்மையாகவுள்ள வீதியில் மகேந்திரா பிக்கப் வாகனம் ஒன்று பல இலட்சம் ரூபா பெறுமதியான 24 முதிரைக் குற்றிகளை சட்ட விரோதமாககடத்திப்பயணித்துக்கொண்டிருந்தவேளை கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் தெரிய வருவதாவது,

பழைய முறிகண்டி-ஐயங்கன்குளம் காட்டுப்பகுதிகளில் இருந்து சட்டவிரோதமாக வெட்டப்பட்ட மரக்குற்றிகளுடன் பிக்கப் வாகனம் ஒன்று யாழ்ப்பாணம் நோக்கி பயணிக்கவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ். கந்தேவத்தவின் நேரடி வழிகாட்டலின் கீழ் முல்லைத்தீவு மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கருணாரத்தினம் ஜெசிந்தன்தலைமையிலான பொலிஸ் அணியினரின் சுற்றி வளைப்பின் போது மரக்குற்றிகளுடன் பயணித்துக் கொண்டிருந்த பிக்கப் வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டார்.

மரக்கடத்தலில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு மோட்டார் சைக்கிள் மூலமாக வேவுத் தகவலை வழங்கிக் கொண்டிருந்த நபர் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

தப்பியோடிய நபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தின்போது கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் கைதான சாரதியையும் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்காகவும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகமுல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# 73 முன்னாள் போராளிகளுக்கு விச ஊசி மருத்துவப் பரிசோதனை

விச ஊசி விவகாரம் தொடர்பில் முன்னாள் போராளிகளுக்கான மருத்துவப் பரிசோதனையில் இரு தினங்களில் 73 பேர் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விச ஊசி தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் கடந்த 2 ஆம் திகதி வெள்ளிக்கி ழமை மற்றும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை புனர்வாழ்வு பெற்று விடுதலையான முன்னாள் போராளிகளுக்கான மருத்துவ பரிசோதனைகள் அந்தந்த மாவட்ட வைத்தியசாலைகளில் இடம்பெற்றன. அதில் யாழ்.மாவட்டத்தில் 19 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 16 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 29 பேரும், வவுனியா மாவட்டத்தில் 05 பேரும், மன்னார் மாவட்டத்தில் 04 பேருமாக 73 பேர் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதில் 2 ஆம் திகதி 26 பேரும் 9 ஆம்திகதி 47 பேரும் மருத்துவ பரிசோதனையில் பங்கேற்றிருந்தனர். இந்நிலையில், எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு முல்லைத்தீவு வைத்தியசாலையிலும், மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு மன்னார் வைத் தியசாலையிலும் பிற்பகல் ஒரு மணிக்கு வவுனியா வைத்தியசாலையிலும் தொடர் ந்து பிற்பகல் 4 மணிக்கு கிளிநொச்சிவைத்தியசாலையிலும்மருத்துவப் பரி சோதனைகள் இடம்பெற வுள்ளன.

இதேவேளை, எதிர்காலத்தில், வாரத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மேற்படி மருத்துவ பரிசோதனைகள் நடைபெறவுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (2-250)

# பற்றைக்குள் உருக்குலைந்த நிலையில் சடலம்



கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உமையாள் புரம் கெமிக்கல் பகுதியில் உருக்குலைந்த நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சடலம் நேற்று முற்ப கல் மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தெரியவருவதாவது.

உமையாள்புரம்கெமிக்கல்பகுதிக்கு மாடு கட்ட சென்ற பெண் ஒருவர் சடலம் ஒன்று காணப்படுவது தொடர்பில் அப்பகுதியின் கிராம சேவை யாளருக்கு தகவல் வழங்கி யுள்ளார் குறித்த தகவலைபொலி ஸாருக்கு கிராம சேவை யாளர் வழங்கியதை அடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித் தனர்.

பற்றைக்குள் குறித்த சடலம் காணப்பட்டதுடன், உருக்குலைந்த நிலையிலும் காணப்பட்டது. இதுவரை சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2-15-312)

# இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வாள்வெட்டில் முடிந்தது

## வாள்வெட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் வைத்தியசாலையில்

(மல்லாவி)

ஏ-9 வீதி மாங்குளத்தில் இரண்டு குழுக்களுக்கிடையில் நடைபெற்ற மோதலை அடுத்து ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகிய நிலையில் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11:30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

இரண்டு தரப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு பின்னர் மோதலாக மாறியது.

இதன்போது மாங்குளத்தைச் சேர்ந்த காத்திகேசு யோகநாதன் (வயது-50) என்ற குடும்பஸ்தரே வாள் வெட்டிற்கு இலக்கானவர் ஆவார்.

இச் சம்பவத்தை அடுத்து மாங்குளம்பொலிஸார் மூன்று சந்தேக நபர்களையும் கைது செய்து நேற்று செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்திய போது மூவரையும் 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (2-15)




# மீன்பிடிப்பதற்கு தடை செய்யப்பட்ட கூட்டு,தங்கூசி வலைகள் கைப்பற்று

## நீதிமன்ற உத்தரவிற்கமைய அழிப்பு



முல்லைத்தீவு மாவட்டம் இரட்டை வாய்க்கால்,முள்ளி வாய்க்கால், கேப்பாப்பிலவு, புதுக் குடியிருப்பு உள்ளிட்ட பகுதிகளில் காணப்படும் கடல் நீரேரிகளில் மீன்பிடிப்பதற்கு தடை செய்யப்பட்ட பெருமளவிலான கூட்டுவலைகள், தங்கூசிவலைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது..

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, முல்லைத்தீவு மாவட்டத்தின் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் மேற்படி கடல் நீரேரிகளில் அண்மைக்காலமாக சில விசமிகள் மீன் பிடிப்பதற்கு தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி கடல் வளங்கள் சூறையாடப்படுவதாக பொதுக்கள் வழங்கிய தகவலையடுத்து வட்டுவாகல் , நீராவிப்பிட்டி , மல்லிகைத்தீவு ஆகிய மீனவர் சங்கப் பிரதிநிதிகள், முல்லைத்தீவு மாவட்ட நீரியல்வளத்திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கூட்டாக இணை ந்து நடத்திய சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது மேற்படி தடை செய்யப்பட்ட வலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ் வலைகளைப் பயன்படுத்திய நபர்கள் தப்பியோடிய நிலையில் கைப்பற்றப்பட்ட வலைகள் முல்லை. நீதிமன்றில் பாரப்படுத்தியதையடுத்து நீதிமன்ற உத்தரவுக்கமைய அழிப்பதற்காக நீரியல் வள திணைக்கள அதிகாரிகள் வலைகளைக் கொண்டு சென்றுள்ளதாக நீராவிப்பிட்டி மீனவர் சங்கத் தலைவர் அப்துல் கமீது அன்சார் தெரிவித்துள்ளார். (2-310)

# வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் 8.35 மில்லியன் ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்கள் கையளிப்பு



வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் 8.35 மில்லியன் ரூபாய் பெறுமதியான விவசாய உபகரணங்கள் வவுனியா விவசாயிகளுக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்ட விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று வவுனியா விவசாய பண்ணையில் இடம்பெற்றது. வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் வவுனியா மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட சுமார் 40 மில்லியன் ரூபாவில் 8.35 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணத்தொகுதியே இதன் போது வழங்கி வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தை சேர்ந்த 420 பயனாளிகள் பயன்பெறும் வகையில் வழங்கப்பட்ட உபகரணத் தொகுதியில் சிறிய ரக உழவு இயந்திரம், மா அரைக்கும் இயந்திரம், சிறு கைத்தொழில் முயற்சிக்கான உபகரணத் தொகுதிகள் என்பன வழங்கப்பட்டிருந்தன.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான எம். தியாகராசா, செ. மயூரன், ஏ. ஜயதிலக உட்பட விவசாய திணைக்கள அதிகாரிகள், விவசாயிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். (2-250)

# காலபோக நெற்செய்கை தொடர்பான கூட்டங்களின் கால அட்டவணை

## உரமானியக் கொடுப்பனவு உதவித்திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்படும்

(மல்லாவி)

உடையார்கட்டு கமநல சேவை நிலையப் பிரிவிலுள்ள நீர்ப்பாச னக் குளங்களின் கீழ் 2016-2017 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கை தொடர்பான கூட்டங்கள் நடைபெறும் கால அட்ட வணையை உடையார்கட்டு கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் நடராஜா சுந்தரமூர்த்தி அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரி விக்கையில்,


சுதந்திரபுரம்கமக்காரஅமைப்பின் கீழுள்ள சிரட்டை பறிச்சான்குளக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுதந்திரபுரம் பொதுநோ க்கு மண்டபத்தில் நடைபெறும்.

விசுவமடு மேற்கு கமக்கார அமைப்பின் கீழுள்ள நெத்தலியாறு குளக் கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நெத்தலியாறு பகுதியில் நடை பெறும்.

மேற்படி குளங்களுக்குட்பட்ட அனைத்து விவசாயிகளும் குளக் கூட்டங்கள் நடைபெறும்போது தவறாது சமுகமளிக்குமாறும் கூட்டங்களின் போது உரமானியக் கொடுப்பனவு தொடர்பான விபரங்கள் மற்றும் எதிர்காலத்தில் விவசாயிகளுக்கு கிடைக்கவுள்ள உதவித்திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப் படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பப்பெண் நிறுத்தப்பட்டிருந்த டிப்பருடன் மோதுண்டு பலி!

## மூன்றுமுறிப்பு சந்தியில் சம்பவம்



(மல்லாவி)

மாங்குளம்பொலிஸ்பிரிவிலுள்ள வன்னிவிளாங்குளம் மூன்றுமுறிப்பு சந்தியில் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் வாகனத்துடன் வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற குடும்பப் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து பயணித்த அவரது மகன் படுகாயமடைந்த நிலையில் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் மாங்குளம் – வெள்ளாங்குளம் வீதியிலுள்ள மூன்று முறிப்பு சந்திக்கு அண்மையில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

அம்பாள்புரம் வன்னிவிளாங்குளத்திலிருந்து மாங்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தனது மகனை மோட்டார் சைக்கிளில் ஏற்றி பயணித்துக் கொண்டிருந்தவேளை இவ் விபத்து நேர்ந்துள்ளது.

இச் சம்பவத்தில் 4 ஆம் கட்டை அம்பாள்புரம் வன்னி விளாங்குளத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தாயாரான இன்பமலர் ரவிக்குமார் (வயது–38) என்ற குடும்பப் பெண்ணே சம்பவ இடத்தில் உயிரிழந்தவராவார்.

இவருடன் பயணித்த இவரது மகனான மாங்குளம் மகா வித்தியாலயத்தில் தரம் 8 இல் கல்வி பயின்று வரும் ரவிக்குமார் கீதன் (வயது -14) என்ற மாணவனே படுகாயமடைந்த நிலையில் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டவராவார்.

விபத்து தொடர்பில் சம்பவ இடத்திற்கு விரைந்த மாங்குளம்பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (2-15-281)





# குளத்திற்கான அணைக்கட்டு புனரமைப்பு

(குருமன்காடு)

வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராசாவின் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியின் கீழ் செட்டிகுளம் வெடிவைத்த துலாவல் குளத்திற்கான வாய்க்கால் அணைக்கட்டு (முறிப்புகட்டுதல்) அமைக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலம் நீர் பாய்வதற்கான வசதிகள் செய்யப்படாத நிலையில் வெள்ளத்தினால் பல ஏக்கர் நிலங்கள் அழிவுக்குட்பட்டு வருவதாக இப்பகுதி விவசாயிகள் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்து இவ்வாய்க்கால் புனரமைப்புப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பணியை நிறைவேற்றுவதற்கு நீர்ப்பாசனப் பணிமனையினர் மற்றும் இப்பிரதேச விவசாயிகளின் பூரண ஒத்துழைப்புக் கிடைத்தமை குறிப்பிடத்தக்கதாகும். (2-250)



பருத்தியூர் இளந்தளிர் விளையாட்டுக்கழக அமைப்பினர் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் அ.த.க.பாடசாலையில் கல்வி பயிலும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் உப அதிபர் திருமதி சிவகாமி தலைமையில் நடைபெற்ற போது...

(படம்:-கரணவாய் செய்தியாளர்)

# சொந்தக் கிராமத்தில் மீள்குடியேற்றம் செய்வதற்கு மீள்குடியேற்ற அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## பன்னவெட்டுவான் கிராம மக்கள் மகஜர் கையளிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டம் மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பன்னவெட்டுவான் கிராமத்தில் வாழ்ந்து வந்த மக்களை மீண்டும் சொந்த கிராமத்தில் மீள்குடியேற்றம் செய்ய மீள்குடியேற்ற அமைச்சு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என குறித்த கிராமத்தில் இருந்து இடம் பெயர்ந்து வாழ்ந்து வரும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக புராதன பன்னவெட்டுவான் கிராமத்தில் உள்ள புனித அந்தோனியார் அபிவிருத்திச் சங்கம் வடக்கு மாகாணசபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலனிடம் நேற்று முன்தினம் காலை மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

மீள்குடியேற்ற அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரின் பிரதி ஒன்றையே வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலனிடம் வைபவ ரீதியாக கையளித்துள்ளனர்.

குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட பன்னவெட்டுவான் கிராமம் சுமார் 200 வருடங்களுக்கு முன்பாக தோற்றம் பெற்ற புராதன கிராமமாகும்.

குறித்த கிராமத்தில் சுமார் 20 குடும்பங்கள் நிரந்தரமாக வாழ்ந்து வந்த நிலையில் அந்த மக்கள் குறித்த கிராமத்தில் விவசாயச் செய்கை மற்றும் கால்நடைகளை வளர்த்து தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வந்தனர்.

1958 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளம் காரணமாக குறித்த கிராமத்தில் வாழ்ந்து வந்த மக்கள் இடம் பெயர்ந்து மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மீள்குடியேறினர்.

எனினும் காலத்திற்கு காலம் குறித்த கிராமத்தைச் சேர்ந்த மக்கள் தமது கிராமத்திற்குச் சென்று தமது காணிகளில் பயிர்ச் செய்கைகளை மேற்கொண்டதோடு, கால்நடைகள் வளர்ப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட வன்செயல் காரணமாக 1990 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரையிலான 15 வருடங்கள் குறித்த கிராமம் பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்தமையினால் எதுவிதமான அபிவிருத்தியும் செய்ய முடியாத நிலையில் குறித்த கிராமம் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

மேலும் குறித்த கிராமத்தில் கடந்த காலங்களில் காணப்பட்ட பல தடயங்கள் காணப்படுகின்றன.

குறித்த கிராமத்தில் வாழ்ந்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்தக் கிராமத்தில் மீள்குடியேறி வாழ விரும்புகின்றனர்.

எனவே எமது கிராமத்தில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன.

குறிப்பாக எமது கிராமத்திற்கான ஆலயம் திருத்தப்பட்டு விரிவாக்கம் செய்யப்படல், கிராமத்திற்கான குடிநீர் மற்றும் குழாய்க் கிணறு அமைத்தல், காணிகளை புனரமைப்புச் செய்தல், இடம் பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்தல், குறித்த கிராமத்தில் காணப்படும் குளங்கள் புனரமைப்பு செய்தல் மற்றும் வாய்க்கால்கள் திருத்தல், காட்டு மிருகங்களின் தாக்குதல்களில் இருந்து பயிர்ச் செய்கைகளை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்த கிராமத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

எனவே பன்னவெட்டுவான் கிராம மக்களாகிய நாங்கள் முன்வைத்துள்ள சகல பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வைப் பெற்று மீள்குடியேற்றம் இடம்பெறவுள்ள குறித்த கிராமத்திற்கு சகல அபிவிருத்திப் பணிகளையும்மேற்கொள்ளுமாறு குறித்த கிராம மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கின்றோம் என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

# அம்பாள்புரம்-வவுனிக்குளம் வீதியூடான பேருந்து சேவைகள் இடைநிறுத்தம்

## வீதி சீரின்மையே காரணம் என சுட்டிக்காட்டு

(மல்லாவி)

முல்லைத்தீவு அம்பாள்புரம் வவுனிக்குளம் வீதியூடாக போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறாமையினால் இந்தப்பகுதியில் காணப்படும் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பாலிநகர் சந்தியிலிருந்து கொல்லவிளாங்குளம், அம்பாள்புரம் ஆறாம்கட்டை ஆகிய கிராமங்களூடாக வன்னிவிளாங்குளம் சந்தி வரை செல்லும் பிரதான வீதியானது கடந்த பல ஆண்டுகளாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்பட்டமையால் இதனூடாக மேற்கொள்ளப்பட்டு வந்த பேருந்து சேவைகள் நிறுத்தப்பட்டன.

தற்போது குறித்த வீதியானது புனரமைக்கப்பட்டு காணப்படுகின்ற போதும் குறித்த வீதியூடான பேருந்து சேவைகள் எவையும் மேற்கொள்ளப்படுவ்தில்லை. இதனால் இந்தப்பகுதியில் உள்ள மக்கள் தமது அன்றாட அடிப்படைத் தேவைகளை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக இப்பகுதியில் உள்ள பாடசாலை தரம் 5 வரையயான வகுப்புக்களை கொண்டு இயங்குவதனால் உயர்தர வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்கள் ஐந்து அல்லது பத்து கிலோமீற்றர் தொலைவில் உள்ள வன்னிவிளாங்குளம், மாங்குளம், மல்லாவி ஆகிய பாடசாலைகளுக்கே செல்லவேண்டியுள்ளது.

எனவே மல்லாவியிலிருந்து மாங்குளம் ஊடாக செல்லும் பேருந்து சேவையின் குறிப்பிட்ட சேவைகளையும் மாங்குளத்திலிருந்து மல்லாவி செல்லும் பேருந்து சேவையின் குறிப்பிட்டசேவைகளையும் இவ்வீதியூடாக மேற்கொள்ளுமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை இதனூடானபேருந்து சேவையினை மேற்கொள்ளுமாறு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் ஆகியோருக்கு மகஜர்களை வழங்கி வைத்தபோது இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என இப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (2-15)

# புலிகளுக்கு நிதி! மகிந்தவின் பதில் இன்று வெளியீடு



(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கினார் என்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு பதிலளிக்கும் வகையில் இன்று புதன்கிழமை விசேட அறிவிப்பை அவர் விடுக்கவுள்ளார்.**

ஐக்கிய தேசிய கட்சியின் 70 ஆவது சம்மேளனம் கொழும்பு பொறளையில் உள்ள கெம்பல் மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இதில் உரையாற்றிய கட்சியின் தலைவரும், பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கியமை குறித்து கருத்து தெரிவித்திருந்தார்.

அதேபோன்று நல்லாட்சியின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு மாத்தறையில் இடம்பெற்ற கூட்டத்தின் போது மூடி மறைக்கப்பட்ட இரகசியங்களை வெளியிடுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரித்திருந்தார்.

இந்நிலையில் சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பாக விசேட அறிவிப்பை மகிந்த ராஜபக்ஷ இன்று புதன்கிழமை வெளியிட உள்ளதாக அவரது பிரத்தியேக செயலாளர் உதித் லொக்குபண்டார தெரிவித் தார்.

இதன்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் குற்றச்சாட்டு மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கருத்து உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தமது நிலைப்பாட்டை மகிந்த ராஜபக்ஷ வெளியிடுவார் என தெரியவந்துள்ளது. (இ-7-10)



தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசனது வழிகாட்டலின் கீழ் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டு "அரச பணி - உங்களுக்கே" என்ற தொனிப்பொருளில் கிருலப்பனையில் நடைபெற்ற முழுநாள் நடமாடும் சேவை நிகழ்வில் அமைச்சர் மனோகணேசன் மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம், பிரதேச செயலகம், பொலிஸ் திணைக்களம், கொழும்பு மாநகர சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, ஊழியர் சேமலாப நிதி காரியாலயம், அரசகரும மொழிகள் ஆணைக் குழு ஆகிய அரச நிறுவன அதிகாரிகளுடன் கிராம சேவையாளர்கள், மொழி பெயர்ப்பாளர்கள், சமாதான நீதவான்கள் ஆகியவர்களோடு அமைச்சின் அதிகாரிகள் பலரும் பங்குபற்றிய போது...

## மனித உரிமைகளை இராணுவம் மீறவில்லை

# நீதிப் பொறிமுறைகளுக்குட்பட்டே முப்படையினரும் செயற்பட்டனர்

## ஜி.எல்.பீரிஸ் கூறுகிறார்



(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின்போது முப்படையினரும் சர்வதேச நீதிப் பொறிமுறைகளுக்கு உட்பட்டே செயற்பட்டுள்ளனர் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இராணுவத்தினர் ஒருபோதும் மனித உரிமைகளை மீறவில்லை, ஆனால் தற்போதைய நல்லாட்சி இராணுவத்தினரை குற்றவாளிகளாக சித்திரிப்பதாக தெரிவித்தார். இராணுவத்தினர் குற்றங்கள் செய்திருப்பதாகவும் இதை தாம் ஒப்புக்கொள்வதாகவும் நல்லாட்சி கூறி வருகின்றது.

"இவர்கள் குற்றம் செய்திருந்தால் தானே ஒப்புக் கொள்வதற்கு, குற்றமே செய்யாத நிலையில் இவர்கள் எவ்வாறு குற்றத்தை ஒப்புக்கொள்ள முடியும்?" என கேள்வி எழுப்பினார்.

மேலும் யுத்தத்தின்போது பாதிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு நட்டஈடு வழங்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. இதற்கு முன்னரும் ஒரு இராணுவ அதிகாரி பாதிக்கப்பட்ட முன்னாள் போராளிக்கு நட்டஈடு வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இராணுவத்தினரால் பாதிக்கப்பட்ட போராளிகளுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும்என்றால், போராளிகளால் பாதிக்கப்பட்ட இராணுவத்தினருக்கு என்ன பதில்? இவர்களுக்கு நட்டஈடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா, என்றும் இதன்போது பீரிஸ் சுட்டிக்காட்டினார். (இ-7-10)

## உத்தியோகத்தர்களின் பணிப்புறக்கணிப்பால் அபிவிருத்திப் பணிகள் பாதிப்படைகின்றன

# சிவயோகன் சுட்டிக்காட்டு

தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மேற்கொண்டு வரும் பணிப்புறக்கணிப்பால் வடக்கில் இடம்பெற்று வரும் அபிவிருத்திப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வடக்கு மாகாணத்தில் சில திணைக்களங்களுக்கு கடந்த வரவு செலவுத்திட்டத்திலும் பார்க்க இவ்வாண்டு மேலதிகமாக சிறுநிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்று வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவற்றில் கல்வித் திணைக்களம் நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டடங்கள் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சித் திணைக்களம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பங்களிப்பு இன்றியமையாதது. இந்நிதிக்கான வேலைத்திட்டங்கள் அனைத்தும் இவ்வாண்டு இறுதிக்குள் முடிவுறுத்தப்பட வேண்டும்.

அடுத்த ஆண்டு பூச்சியப்பாதீடு என அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டமையால் இவ்வாண்டிற்குரிய நிதியினை அடுத்த ஆண்டில் பயன்படுத்த முடியாது. தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் கடந்த 5 ஆம் திகதியிலிருந்து மூன்று நாட்கள் நடைபெறும்என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் கடந்த 7 ஆம் திகதி இவர்களின் கோரிக்கைகள் சம்பந்தமாக அலரிமாளிகைக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டபோதும் எவ்விதமான தீர்வும் உரியவர்களால் வழங்கப்படவில்லை. அதன் காரணமாக இப்பணி நிறுத்தம் தீர்வு கிடைக்கும்வரை தொடர்ச்சியாக நடைபெறும் என வடக்கு மாகாண தொழில்நுட்ப உத்தியோகத்தர் சங்கம் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக அனைத்து வேலைத்திட்டங்களும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. எமது வடக்கு மாகாணத்திலும் இந்நிலையே காணப்படுகின்றது. இதனால் மாகாண அபிவிருத்தி நிதியும் திரும்பிச் செல்லும் நிலை காணப்படுகின்றது.

இதனை நிவர்த்தி செய்யும் வகையில் அரச சேவைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தொழில்ச் சங்கங்களின் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி உரிய தீர்வினை விரைந்து வழங்க மத்திய அரசும் மாகாண சபையும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றுள்ளது. (இ-7-10)


**தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை**
**நோயாளர் நலன்புரிச் சங்கம்**
**தெல்லிப்பழை**

**பொதுக்கூட்டமும் புதியநிர்வாகத் தெரிவும்**

தலைமை:- Dr. யோ.திவாகர் அவர்கள்
காலம்:- 02.10.2016 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30
இடம்:- புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு கேட்போர் கூடம்

பிரேரணைகளைச் சமர்ப்பிக்க விரும்புவோர் 26.09.2016 ஆம் திகதிக்கு முன்னர் வைத்தியசாலையில் சமர்ப்பிக்கலாம்.

சமூக ஆர்வலர்கள், சேவை நோக்குடையவர்கள் அனைவரையும் எமது நோயாளர் நலன்புரிச் சங்கத்தில் இணைந்து, வைத்தியசாலையின் வளர்ச்சிக்கு தங்கள் மேலான சிந்தனைகளையும் வழங்கிப் பேருதவி புரியுமாறு வேண்டுகின்றேன்.

புதிதாக இணையவிரும்பும் அங்கத்தவர்கள் வைத்தியசாலை அலுவலகத்தில் பொருளாளரிடம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து 26.09.2016 திங்கட்கிழமைக்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

**லயன் சி.ஹரிகரன்**
**செயலாளர்**
(சி-5743) **077 900 5856**



# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## 'பருவகால மாற்றங்களுக்கேற்ற பாரம்பரிய உணவுகள்'



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

யாழ்ப்பாண மக்களில் பலர் பண்டைய காலங்களில் பருவ காலங்களை அனுசரித்து அவ்வக் காலங்களில் தவிர்க்க வேண்டிய உணவு முறைகளைத் தவிர்த்து ஆரோக்கியத்தைப் பேணி வந்தது யாவரும் அறிந்ததே. சூழல் காரணிகள் / சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்கள் மனித உடல் உள நிலைகளில் பாதிப்பை ஏற்படுத்த வல்லன. பருவ காலங்களால் ஏற்படும் மாறுதல்கள் சூழல் மாறுபாட்டை ஏற்படுத்துவதனால் அதற்கு இயைந்து வாழத் தவறும் இடத்து நோய் ஏற்படுவதை தவிர்க்க முடியாது போய்விடும்.

யாழ். கலாசாரமும் பாரம் பரிய உணவுகளில் சூழலியல் சார்பான மூலிகைகளின் பயன்பாடுகளும் மருத்துவ முக்கியத்துவமும்.

சூரியன் சஞ்சரிப்பதை அடிப்படையாகக் கொண்டு ஒரு வருடமானது உத்தராயணம், தட்சணாயனம் என்று 2 ஆகப் பிரிக்கப்படுகின்றது. தை மாதம் முதல் ஆனி மாதம் வரையுள்ள ஆறு மாத காலத்தை உத்தராயணம் என்றும் ஆடி மாதம் முதல் மார்கழி வரையுள்ள ஆறு மாத காலத்தை தட்சணாயனம் என்றும் கொள்வர். இதில் உத்தராயணம் தைப்பொங்கலுடன் ஆரம்பமாகும். தட்சணாயனம் ஆடிப்பிறப்புடன் ஆரம்பமாகும். இவ்விரு காலங்களும் உணவுடன் தொடர்புடையதாய் பண்டிகைகளுடன் ஆரம்பமாவது குறிப்பிடத்தக்கது.

மேலும் ஒரு வருடத்தைப் பின்வருமாறு ஆறு பருவ காலங்களாகப் பிரித்துள்ளனர். ஆறு காலங்களில் இளவேனில் காலமாகிய சித்திரை , வைகாசி ஆகிய மாதங்களில் கபமாகிய நெய்ப்புத்தன்மை, குளிர்ச்சித் தன்மை அதிகரிக்கும். எனவே சீதத்தன்மை சம்பந்த மான நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே அதனை சமநிலைக்கு கொண்டுவர இலகுவானதும் கைப்பு கார்ப்பு சுவை உள்ள உணவுகள் சிறந்தவை.

**வேப்பம் பூ:** மக்களின் உணவுப் பயன்பாட்டில் வேப்பம் பூ முக்கிய இடம் வகிக்கிறது. எமது பாரம்பரிய உணவில் வேப்பம் பூ வடகம், வேப்பம் பூ பச்சடி கட்டாயம் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. வேப்பம் பூவானது கபத்தை சமப்படுத்தும். இரத்தத்தை சுத்திகரிக்கும். கொலஸ்ரோலை கட்டுப்படுத்தும்

**சித்திரைக் கஞ்சி :** சித்திரை மாதத்தில் அந்த பருவகாலத்திற்கேற்ப பௌர்ணமி சித்திரைக் கஞ்சியை பயன்படுத்துவது ஓர் பாரம்பரிய முறை. இது இலகு தன்மை உள்ளது என்பதால் கபமான நெய்ப்புத் தன்மையைச் சமம் செய்யும். அதே சித்திரை மாதத்தில் கோவில்களில் குளிர்த்தி செய்து கூட்டான் சோறு வழங்குவது தனி இனிமையாகும்.

இதில் சிவப்பு பச்சரிசி, பல்வேறு வகையான காய்கறிகள் முதலியன சேரும் . இது சம விகித உணவாக விளங்குகிறது. சமூக ரீதியில் சத்து உணவு முறை வழங்கும் நெறி முறையாக இருந்திருக்கலாம். ஏனெனில் கோவில்களில் இது வழங்கப்படுவதால் ஏழைகள் பணக்காரர்கள் என்ற வித்தியாசம் இன்றி அனைவருக்கும் கிடைக்கும்.

**காய் பிட்டு:** பங்குனி மாதத்தில் சில பிரதேச மக்கள் காய் பிட்டு எனும் ஓர் ஆரோக்கிய உணவைப் பயன்படுத்தியது குறிப்பிடத்தக்கது. இங்கு சிவப்புப் பச்சை அரிசியை வறுக்காது நீரில் நனைத்து காய வைத்து இடித்து மாவாக்கி வழமையான பிட்டுப் போல குழைத்து தேவையான அளவு உப்பும் சேர்த்து அதற்கு வெங்காயம் பச்சை மிளகாய், பயிற்றம் பிஞ்சு , கத்தரிப் பிஞ்சு தேவை எனின் தேங்காய் பூ சேர்க்கலாம் ஆனால் அதனை தவிர்ப்பது நல்லது. பின்னர் அதனை அவிக்க வேண்டும். இதன் போது வெண்டைக் காயையும் தனியே அவித்துவைத்து கொள்ள வேண்டும். பின்னர் பிட்டினைக் கொட்டி கிளறி அதனுடன் வெண்டைக்காயையும் சேர்க்க வேண்டும். இது ஓர் சம விகித உணவாக விளங்கும். சிவப்புப் பச்சரியானது போலிக் அமிலத்தை கொண்டுள்ளது.

**இலுப்பை பூ:** இளவேனில் காலங்களில் இலுப்பைப் பூவும் மிக முக்கிய இடம் வகிக்கிறது. இலுப்பம் பூக்களை சேகரித்து அல்லி தட்டி, வறுத்து, இடித்து, பனைவெல்லம் அல்லது சர்க்கரை சேர்த்து துவைத்து உண்பது மக்களின் பழக்கம்

சிலர் இனிப்பு சுவையை கட்டுப்படுத்தி கார்ப்பினைச் சேர்த்து செத்தல் மிளகாய் சேர்ப்பதுண்டு. இலுப்பைப் பூவானது கபத்தை கட்டுப்படுத்தி இளவேனில் காலத்தில் காலத்தை அடுத்து வரும் முதுவேனில் காலத்தில் வாதத்தைத் தடுக்கவும் உதவுகின்றது.

இலுப்பைப்பூவில் சுக்கு றோசு, பொசுபரசு, கல்சியம், இரும்புச் சத்து உண்டு.

**மூலிகைக் குளியல்:** இன்று மூலிகைக் குளியல் எனும் சிகிச்சை முறை உலக ரீதியில் முக்கியத்துவம் அடைந்து வருகிறது.

சித்திரை வருடப்பிறப்பன்று விஷ புண்ணிய காலத்தில் மருத்து நீர் தேய்த்து தோய வேண்டும் என்று விதித்திருக்கிறார்கள்.

மருத்து நீர் ஒரு மருத்துவ நீராகும். அதில் பல மருத்துவ மூலிகைச் சரக்குகள் இடம்பெறுகின்றன. இவை இருமல், காய்ச்சல் மற்றும் தோல் வியாதிகளைப் போக்க வல்லனவாகவும் தேகத்துக்கு குளிர்ச்சியையும் நறுமணத்தையும் புத்துணர்ச்சியையும் கொடுக்க வல்லனவாயும் உள்ளன. சித்திரை மாத இளவேனில் காலத்தை எதிர்கொள்ள உதவும் மூலிகை குளியலாக இது அமையும்.

**மருத்து நீரில் சேரும் மூலிகைச் சரக்குகள்:** தாழம்பூ, மாதுளம்பூ, தாமரைப்பூ, வில்வம் பூ, விஷ்ணுகிராந்தி, அறுகு, சீதேவியார் செங்கழுநீர், பீர்க்கு இலை, சுக்கு, மிளகு, திப்பிலி, மஞ்சள், பால், கோசலம், கோமயம், கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம்.

**கரும்பணிக் கஞ்சி:** முதுவேனில் காலமாகிய ஆனி– ஆடி மாதம் வெயில் மிகுந்த காலமாகும். இக் காலத்தில் குளிர்ச்சி தன்மையான கபம் விருத்தியடைந்து தன்னிலை அடைய ஆரம்பிக்கும். அதே வேளை வாதம் தன்னிலையிலிருந்து விருத்தியடைய ஆரம்பிக்கும். ஆகவே வாதத்தை கட்டுப்படுத்த இனிப்பு, புளிப்பு சுவையுடைய உணவுகள் பயன்படுத்தப்பட்டன. இதில் முக்கிய இடம் பெறுவது கருப்பணிக்கஞ்சி ஆகும். கருப்பணிக்கஞ்சியில் சேர்வன சிவப்பு பச்சரிசி - 1 கிலோ, பயறு-2 சிரங்கை, வடித்த கருப்பணி-3 போத்தல், சிவப்பு பச்சரிசியை வேகவைத்து பயறு சேர்த்து வெந்து வரும் வேளையில் கருப்பணி யையும் சேர்த்துவேக வைத்து எடுப்பதாகும். கஞ்சியை கலத்தில் விடும்போது தேங்காய்ப்பால் சீனி சேர்த்து வடிக்கவும். இது குளிர்ச்சி கொடுப்பதுடன் உடல் வெப்பத்தை தணித்து உடலுக்கு ஒரு போசணா காரியாக அமையும்.

### அம்மை நோய் உணவு முறை

இக்காலத்தில் அம்மை நோய் (வைரஸ்) உணவு முறை பயன்படுததப்பட்டு வந்தது. இதற்கு வெள்ளைப் பச்சரிசி நன்கு சமைத்து சாதமாக்கப்படவேண்டும். புளிக்காத தயிர், சிறிய வெங்காயம் ( சிறிதாக அரிந்து) கடுகு என்பவற்றை சாதத்துடன் பிசைந்து கொடுக்கப்பட்டது.

இது இலகுவில் சமிபாடடையக் கூடியதும் அகத்துறிஞ்சப்படக்கூடியதும் குளிர்ச்சியைக் கொடுக்கக் கூடியதும் ஆன உணவு முறையாகும்.

**ஆடிக்கூழ்:** ஆடிக்கூழ் , கொழுக்கட்டை என்பன சத்துணவாகும். இரைப்பையில் அக்கினியை (பசித் தீயை) சாந்தப்படுத்தி பசியையும் போக்க வல்லனவாக அமைகின்றன.

**ஆடிக்கூழ்:-** அரிசிமா 200 கிராம், பனங்கட்டி -1 பெரிய குட்டான், பயிற்றம் பருப்பு -50 கிராம், தேங்காய் - 1 , நச்சீரகம் 1 தேக்கரண்டி , உப்பு தேவையான அளவு

இந்த உணவுப் பொருட்கள், காபோவைதரறேற், புரதம், இரும்புச் சத்து என்பனவற்றை கொண்ட ஒரு சமவிகித உணவாக அமைவதுடன் மலமிளக்கிச் செய்கை உடையதாகவும் காணப்படுகிறது.

கொழுப்பு:- பயிற்றம் பருப்பு - 250 கிராம், சர்க்கரை - 250 கிராம், அரிசிமா 500 கிராம், தேங்காய் ஒரு பாதி, நச்சீரகம் ஒரு தேக்கரண்டி ஏலரிசி சிறிதளவு, உப்பு தேவையான அளவு.

**ஒடியற்கூழ்:** ஒடியல் மாவினை எடுத்து நீர் விட்டு கரைத்து தெளிவெடுத்து ஆரம்பத்தில் சிரங்கை அரிசி சேர்த்து கூழாகக் காய்ச்சி பழப்புளி நீர் விட்டு கரைத்து செத்தல் மிளகாய், உள்ளி, மிளகு, நச்சீரகம், மல்லி, தேங்காய்ச் சொட்டு என்பனவற்றை தேவையான அளவு எடுத்து அரைத்து நீர்ப்புளிக் கலவையுடன் சேர்த்து எருமை முன்னை அல்லது முருங்கையிலை இறுதியில் சேர்க்க வேண்டும். இது சளிக்கான சிறந்த உணவு ஆகும். பசியைத் தூண்டும். இலகுவில் சமிபாடடைந்து அகத்துறிஞ்சப்படக் கூடிய உணவு முறை ஆகும்.

குழந்தைகளிலிருந்து வயோதிபர் வரை குறிப்பாக கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மாருக்கு சிறந்த உணவாக அமையும்.

எனவே கூழை இடையிடையே பருகி வருவதால் மலம் நன்கு வெளியேறி வாதம் முதலிய முத்தோஷங்களின் சமநிலை பேணப்படுவதால் ஆரோக்கியம் பாதுகாக்கப்படுகிறது.

உடலுழைப்பை நம்பி வாழ்ந்த காலத்தில் நெய்யை கூடுதலாக உணவில் பயன்படுத்திய போதிலும் மேலதிகமான சக்தி உடலிலிருந்து வெளியேற்றப்படுவதற்கும் வழியிருந்தது. இதனால் கொழுப்பு படிந்து உடற்பருமன் அதிகரிப்பதும் அதனால் பல்வேறு நோய்களுக்கு ஆளாவதும் தவிர்க்கப்பட்டது.

மேலும் எமது மக்கள் வாழைத் தண்டு சுண்டல் செய்து சாப்பிடும் வழக்கத்தை கொண்டிருந்தனர். இவை உடலில் கொழும்பு மிகையா காமல் இருப்பதற்கு உடற்பருமன் அதிகரிக்காமல் இருப்பதற்கு உதவக்கூடியன.

**பனங்காய் பிட்டு:** பனங்காய் பிட்டு மக்களால் பயன்படுத்தப்படுகின்றது. இதில் பிட்டு மாவுடன் பனங்களியைச் சேர்த்து பிசைந்து உருண்டைகளாகச் செய்து ஆலம் இலையில் வைத்து அவித்து ஆலம் இலைகளுடன் சேர்த்து உருண்டைகளாக்கி பிட்டு போல உண்ணப்படுகிறது. இதுவும் மலத்தை இளக்கக்கூடிய சத்துக்களை வழங்கக் கூடிய ஓர் உணவாகும்.

### பனங்காய் சேர் பலகாரம்

பனங்காய் சேர் பணியாரத்தில் பனங்களியுடன் சாமை , அரிசிமா சேர்க்கப்படும். இதில் உயிர்ச்சத்து A,E, கல்சியம், இரும்புச் சத்து, பொஸ்பேற் உள்ளதுடன் மலத்தை நன்கு இளகப் பண்ணி குடலை சுத்தப்படுத்தும் தன்மை கொண்டது. அத்துடன் நார்த்தன்மை அடங்கியுள்ளது. இதுவும். மலத்தை இளக்கச் செய்யும். இது முத் தோஷ சமனியாக செயற்பட்டு உடலிலுள்ள தாதுக்களையும் தோஷங்களையும் சமநிலையில் வைத்திருக்கும்.

ஐப்பசி, கார்த்திகை காலங்களில் வெயிலும் மழையிலும் சேர்த்து காணப்படும். இக் காலங்களில் பிடித்த தோஷம் அதிகரிப்பதாக கருதப்படுகிறது. இலகு குணமுள்ள உணவுகளை உட்கொள்வது உடல் நலத்திற்கு நன்று.

மார்கழி, தை, மாசி, பங்குனி மாதங்கள் குளிஷீம் பனியும் மிக்க காலப்பகுதியாகும். இக் காலத்தில் பசி தீவிரமாக இருக்கும். அதனை கருத்தில் கொண்டு நெய்முதலிய குரு குணமுள்ள உணவுகளை உள்ளெடுக்க வேண்டும்.

### பாரம்பரிய சத்துணவுகள்

உளுந்து, பயறு, கைக்குத்தரிசி ஆகியவற்றை திரித்து மாவாக்கி தேங்காய்ப்பூ, சர்க்கரை அல்லது சீனி சேர்த்து சத்துமாவாக பயன்படுத்தி வந்துள்ளனர்.

இதேபோன்று புளுக்கொடியலை மாவாக்கி அரித்தெடுத்து அதற்கு சிறிதளவு தேங்காய்ப்பூ, சர்க்கரை அல்லது சீனி சேர்த்து குழைத்து உண்ணக்கொடுப்பர். இது குடலை நன்கு சுத்தப்படுத்தி மலத்தை இளக்கி வெளியேற்றும்.

இதேபோன்று மக்களின் பாரம்பரிய உணவாக கூழ், களி, பழஞ் சோற்றுத் தண்ணீர், மோர் இவை வயோதிபர் உண்பதற்கு இலகு வான உணவாகும். இலகுவாக செரிக்கும், சத்துணவாக அமையும். அவ்வாறே இரத்தத்தில் இரும்புச் சத்தை அதிகரிக்க, இரத்தத்தை விருத்தி செய்ய எள்ளுப்பாகு பயன்படுத்தப்பட்டது.

**எள்ளுப்பாகு:** எள்ளு - 1 கிலோ கிராம், உளுத்தமா - 1 சுண்டு, சீனி-500 கிராம், மிளகு, நச்சீரகம், உளுந்து இவற்றை ஒன்றாக சேர்த்து இடித்து சீனிப்பாணியை அதனுள் சேர்த்தெடுத்தல் வேண்டும். குழந்தைகளுக்கு சிறந்தது.

மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் இரத்தத்தை விருத்தி செய்வதுடன் பால் சுரப்பதை கூட்டும். இதில் இரும்புச் சத்து கல்சியம் உள்ளதால் தாய்க்கும் சேய்க்கும் போசாக்கான உணவு ஆகும்.

உளுந்தானது கற்பாசய உறுப்புக்களையும் இடுப்பெலும்புகளையும் உறுதியாக்கும். உளுந்துக் களியை கற்பகாலம், பூப்பெய்து காலம், குழந்தை வளர்ப்புக் காலங்களில் முக்கியமாக உண்ணக் கொடுப்பர். இதில் நல்லெண்ணெய் சேர்வதனால் உறுதியான வளர்ச்சி செயற்பாடு அதிகரிக்கும். உணவில் சில குறிப்பிட்ட இலைகள் சேர்த்து உணவு தயாரிக்கும் முறைகள் உண்டு.

**இலைப்பிட்டு:** பொருத்தமான கொடி இலைகளை சிவப்பு பச்சரிசிமாவுடன் சேர்த்து பிட்டு தயாரிக்கப்படும். இது எலும்பு முறிவு -நெரிவுகளைப் பலப்படுத்தும். பொருத்துமான கொடி இலையில் போலிக் அமிலம் அதிகமாகவுள்ளது.

இது செல்களின் முதிர்வுக்கு தேவையானது. எனவே கற்பாசய நோய்களில் பெரும்பாட்டில் மாதவிடாய் வலிகளின் போது இது பயன்படுகிறது.

### குளிரான காலங்களில் பயன்படுத்தக்கூடிய உணவு முறைகள்.

**தூதுவளை சூப்:-** தூதுவளை சூப் செய்வதற்கு வெண்ணை, தூதுவளை வெங்காயம், தக்காளி, சீரகம் , ஓமம், தேங்காய் துருவல், துவரம் பருப்பு, உள்ளி, மல்லி, உப்பு, மிளகு ஆகிய பொருட்கள் தேவையாகும். முதலில் மல்லியை அரைத்து தேங்காய்ப் பால், தூதுவளை என்பவற்றை சேர்த்து வேகவிடவும். வெண்ணையுடன் ஓமம் சீரகம் சேர்த்து உலர்த்தி கிளறி விடவும். மிளகு சேர்த்து உண்ணலாம்.

**மொசு மொசுக்கை அடை:-** மொசு மொசுக்கை அடை செய்யத் தேவையான பொருட்கள்:- மொசு மொசுக்கை இலை, மிளகு, வெங்காயம், உப்பு, அரிசி ஆகும். அரிசியை இடித்து மாவாக்கி மொசுமொசுக்கை இலைகளை வெங்காயம் சேர்த்து அரைத்து உப்பு, மிளகு சேர்த்து அரைத்து அதனை தோசைபோல வார்த்து உண்ணலாம்.

பாரம்பரிய உணவு முறைகளில் பல மூலிகைகள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. ஆனால் இப்போது மூலிகைகளின் பயன்பாடு குறைந்தமையால் அவற்றை பாதுகாத்து வருவதும் குறைந்து அழிவு நிலை அதிகரித்துள்ளது. இவ் அரிய இயற்கை கொடைகளை அழிவடையாது பாதுகாத்து அவற்றின் உயர்ந்த பக்க விளைவற்ற பலனைப் பெற்று நோயற்ற ஆரோக்கியமான வாழ்வைப் பெறலாம்.

(தொடரும்)

# காவிரியால் கர்நாடகாவில் கொளுந்து

## மக்கள் அமைதி காக்க வேண்டும்; பிரதமர் மோடி வேண்டுகோள்

(டில்லி)

காவிரி விவகாரத்தில் கர்நாடகம் மற்றும் தமிழக மக்கள் அமைதி காக்க வேண டும் என பிரதமர் நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கர்நாடகத்தில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்று வரும் வன்முறை சம்பவங்கள் கவலை அளிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழகத்தில் கன்னடர்களுக்கு எதிராக நடைபெற்றுள்ள வன்முறை சம்பவங்களும் கவலை அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

பொறுப்புகளை மனதில் வைத்து இரு மாநில மக்களும் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள பிரதமர், பிரச்சினைக்கு வன்முறை தீர்வாகாது என்பதை உணர வேண்டும் என்றார்.

மேலும் இருதரப்பு பேச்சு வார்த்தை மூலம் காவிரி விவகாரத்திற்கு தீர்வு காண வேண்டும் என்று கூறியுள்ளார்.

பிரச்சினைகளுக்கு சட்ட ரீதியாக மட்டுமே தீர்வு காண முடியும் என்றார். மேலும் நல்லிணக்க சூழ்நிலையை உருவாக்குவதற்கு வழிவகுக்க வேண்டும் என மோடி வலியுறுத்தியுள்ளார். (இ-7-10)



## விஜயகாந்த் உண்ணாவிரதம்



காவிரி விவகாரத்தில் கர்நாடக கன்னட அமைப்பினர் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினம் வரலாறு காணாத வன்முறையில் ஈடுபட்டு மைசூர், மாண்டியா, பெங்களூர் உட்பட பல மாவட்டங்களில் கலவரத்தில் ஈடுபட்ட கன்னடர்கள் தமிழ்நாடு பதிவு கொண்ட வாகனங்களை அடித்து நொறுக்கி, தீவைத்துக் கொளுத்தினர்.

பெங்களூரிலுள்ள தமிழர்கள் கடைகள் அடித்து நொறுக்கி சொத்துகளை சேதப்படுத்தினர். இதனால் தமிழர்களின் பல நூறு கோடி ரூபாய் சொத்து நாசம் அடைந்தது.

இதற்கு பல்வேறு தமிழ் அமைப்பினர் கண்டனம் தெரிவித்து வரும் வேளையில், தே.மு.தி.க., தலைவர் விஜயகாந்த், நாளை மறுதினம் 16ம் திகதி, சென்னை கோயம்பேட்டிலுள்ள தே.மு.தி.க. அலுவலகம் முன்பு உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்துள்ளார். (இ-7-10)

## கர்நாடகத்தைக் கண்டித்து தமிழகத்தில் கடையடைப்பு

### நாளை நடைபெறும்

(நாகபட்டினம்)

கர்நாடக அரசைக் கண்டித்து நாளை மறுதினம் தமிழகத்தில் பந்த் நடத்த போவதாக விவசாய சங்க கூட்டியக்கம் அறிவித்துள்ளது.

காவிரியில் இருந்து விநாடிக்கு 15 ஆயிரம் கன அடி வீதம் 10 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என கர்நாடக அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனைக் கண்டித்து கர்நாடகாவில் போராட்டம நடைபெற்றது. இந்த நிலையில் 15 ஆயிரம் கன அடியை 12 ஆயிரம் கன அடியாக குறைத்து மேலும் 3 நாட்களுக்கு காவிரியில் தண்ணீர் திறக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் நேற்றுமுன்தினம் புதிய உத்தரவிட்டது.

காவிரியில் தண்ணீர் திறந்து விட்டதை கண்டித்து கர்நாடகாவில் நேற்று முன்தினம் பயங்கர வன்முறை ஏற்பட்டது. தமிழகத்தைச் சேர்ந்த பேருந்துகள், லொறிகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

தமிழர்களின் கடைகள், ஹோட்டல்கள் சூறையாடப்பட்டன.

கர்நாடகாவில் தமிழர்கள் தாக்கப்பட்டதை கண்டித்து நாளை 15ஆம் திகதி தமிழகத்தில் முழு அடைப்பு நடத்தப் போவதாக விவசாய சங்க கூட்டியக்கம் அறிவித்துவுள்ளது. (இ-7-10)

## வன்முறையைத் தடுத்து நிறுத்தவும் சித்தராமையாவுக்கு அறிவுறுத்தல்

(டில்லி)

கர்நாடகாவில் வன்முறையைத் தடுத்து நிறுத்துமாறு சித்தராமையாவுக்கு பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார். கர்நாடக முதல்வர் சித்தராமையாவுடன் நேற்று முன்தினம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய பிரதமர் மோடி சித்தராமையாவுக்கு அறிவுறுத்தியுள்ளார். (இ-7-10)





## காவிரி பிரச்சினை;கர்நாடகாவில் கலவரத்தை ஒடு[...] துணை ராணுவப்படையை மத்திய அரசு அனுப்பிய[...]

காவிரிப் பிரச்சினை தொடர்பாக கர்நாடகாவில் கலவரத்தை ஒடுக்க மத்திய அரசு 10 கம்பனிகள் கொண்ட கலவரத்தடுப்பு சிறப்புப் பிரிவை உடனடியாக நேற்று முன்தினம் அம் மாநிலத்திற்கு அனுப்பியது.

காவிரி பிரச்சினையால் கர்நாடகாவில் பல இடங்களில் போராட்டம் நடந்து வருகிறது. இதில் தமிழர்களின் வாகனங்கள், கடைகள் அடித்து நொறுக்கப்பட்டன. தமிழர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதையடுத்து மத்திய அரசு 10 கம்பனிகள் கொண்ட கலவர தடுப்பு சிறப்பு பிரிவைச் சேர்ந்த துணை ராணுவ படையை கர்நாடக மாநிலத்துக்கு உடனடியாக நேறறு முன்தினம் அனுப்பியது. ஒரு கம்பனியில் 100 பேர் என ஆயிரம் பேர் கர்நாடகாவில் கலவரத்தை ஒடுக்கும் பணிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மேலும் 5 முதல் 10 கம்பனி எல்லை பாதுகாப்பு படையினர், இந்திய திபெத் எல்லை பாதுகாப்பு படை பொலிஸார் தயாராக இருப்



பதாகவும், கர்நாடகா, தமிழக அரசு கேட்டுக் [...] டால் அந்த படைகளை அனுப்பத் தயாராகவு[...] வும் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-[...]

## கர்நாடகாவில் போராட்டம் நடக்கின்ற இடங்களுக்கு யாரும் செல்லாதீர்கள்

### அமெரிக்கர்களுக்கு தூதரகம் அறிவுரை

(சென்னை)

கர்நாடகாவில் தமிழக வாகனங்கள் தீயிட்டுக் கொளுத்தப்படும் நிலையில், அங்கு வசிக்கும் அமெரிக்கர்களுக்கு அமெரிக்கா நேற்று முன்தினம் அறிவுரை வழங்கியது.

இதுகுறித்து சென்னையிலுள்ள அமெரிக்க துணைத்தூதர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'கர்நாடகாவில் பதற்றம் நிலவுவதாக செய்திகள் வருகின்றன. அமைதியான நோக்கத்தில் நடத்தத் திட்டமிடப்படும் போராட்டங்கள் கூட மோதலாகவும், வன்முறையாகவும் மாறிவிடக்கூடும். ஆகவே, போராட்டங்கள் நடக்கும் இடங்களுக்கு செல்வதை அமெரிக்கர்கள் தவிர்க்க வேண்டும்.

போராட்டங்கள் நடக்கும் இடங்களில் நீங்கள் இருந்தால, எச்சரிக்கையுடன் செயறபடுங்கள். உங்கள் சுற்றுப்புறத்தில் நடப்பதை கவனத்துடன் பாருங்கள். உள்ளூர் நிகழ்வுகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளுங்கள். இதன்மூலம், உங்கள் தனிப்பட்ட பாதுகாப்பை நீங்களே மேம்படுத்திக் கொள்ளுங்கள்' என்று கூறப்பட்டுள்ளது. (இ-7-10)

# ந்துவிட்டெறியும் தமிழக சொத்துக்கள்









## காவிரி: தேவை ஒரு மத்திய அமைப்பு!

தமிழகத்தின் நெற்களஞ்சியமான காவிரிப் படுகை தண்ணீருக்குப் பரிதவித்திருக்கும் சூழலில், கர்நாடகம் மிகக் கசப்பான வார்த்தைகளோடு தண்ணீர் திறந்துவிட்டிருக்கிறது. கர்நாடகத்தில் நடந்தேறி வரும் வன்முறைகளும், போராட்டங்களும் கவலை தருகின்றன.

தண்ணீர் திறக்கப்பட்ட கிருஷ்ணராஜசாகர் அணையைச் சிலர் தீப்பந்தங்களுடன் முற்றுகையிட்டிருக்கிறார்கள்.

அந்த அணை உட்பட மாநிலத்தில் நான்கு அணைகளுக்குத் துணை ராணுவப்படையின் பாதுகாப்பு அளிக்கும் அளவுக்குக் கொந்தளிப்பான சூழல் நிலவுகிறது.

தமிழக, கர்நாடக முதல்வர்களின் உருவப் பொம்மைகள் எரிக்கப்படுகின்றன. லொறிகள் உள்ளிட்ட தமிழக வாகனங்கள் மீது தாக்குதல் நடந்திருக்கிறது. தற்கொலை முயற்சிகள், வீதி மறியலைத் தொடர்ந்து முழு அடைப்புப் போராட்டமும் நடத்தப்பட்டுள்ளது.

இந்தக் காட்சிகள் உருவாக்கும் தோற்றம் என்ன? உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ஏதோ கர்நாடகத்தை வஞ்சித்துவிட்டதுபோல அல்லவா இருக்கிறது? உண்மையில், தமிழகம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது கர்நாடகமும் அறிந்த உண்மை. தமிழகத்துக்கு ஜூன் 12ஆம் திகதி திறக்கப்பட வேண்டிய தண்ணீர், செப்டெம்பர் 6 ஆம் திகதி திறக்கப்பட்டிருக்கிறது. அதுவும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதால். அதுவும் 10 நாட்களுக்கு மட்டும். ஏற்கனவே, நாம் குறுவைச் சாகுபடியை இழந்துவிட்டோம். இப்போது சம்பா சாகுபடிக்கும் மொத்தமே 13 டி.எம்.சி. தண்ணீர்தான் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. நியாயமாக ஜூன், ஜூலை, ஒகஸ்ட் மூன்று மாதங்களில் தமிழகத்துக்கு வர வேண்டிய காவிரி நீரின் அளவு 94 டி.எம்.சி. ஆனால், கால்வாசித் தண்ணீரை, அதுவும் கால்தாமதமாகத் திறந்துவிட்டுவிட்டு 'கனத்த இதயத்துடன்' என்று அம்மாநில முதல்வர் கூறுவதும், தமிழகத்துக்கு எதிராக நடத்தப்படும் போராட்டங்களும் துளியும் நியாயமற்றவை.

காவிரி நீரில் தமிழகத்துக்கு 419 டி.எம்.சி., கர்நாடகத்துக்கு 270 டி.எம்.சி., கேரளத்துக்கு 30 டி.எம்.சி., புதுவைக்கு 7 டி.எம்.சி., ஆற்றின் இயற்கையான சுற்றுச்சூழலைப் பாதுகாக்க 10 டி.எம்.சி., கடலில் கலக்கும் அளவு 4 டி.எம்.சி. இதில் கர்நாடகம் தமிழகத்துக்குத் தர வேண்டியது 192 டி.எம்.சி. என்று தன்னுடைய இறுதித் தீர்ப்பில் ஒதுக்கீடு செய்தது காவிரி நடுவர் மன்றம். சம்பந்தப்பட்ட மாநிலங்கள் அனைத்துமே இது தமக்குப் போதாது என்ற குறையோடு மேல்முறையீடு நோக்கி நகர்ந்திருக்கின்றன என்றாலும், இந்த விவகாரத்தில் இறுதி முடிவு எட்டப்படும் வரையில், காவிரி நடுவர் மன்றம் முன்னதாக அளித்திருக்கும் தீர்ப்பைக் கடைப்பிடிக்க வேண்டிய தார்மீக அறம், இதில் சம்பந்தப்பட்ட எல்லா மாநிலங்களுக்குமே உண்டு. கடந்த நூற்றாண்டுகளில் கர்நாடகத்தால் அடுத்தடுத்து சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட அணைகள், பல மடங்கு அது விரிவாக்கிய சாகுபடிப் பரப்பு ஆகியவற்றையெல்லாம் கருத்தில் கொண்டும்தான் காவிரி நடுவர் மன்றம் தன்னுடைய இறுதித் தீர்ப்பில் இந்த ஒதுக்கீட்டை அளித்தது என்பதை கர்நாடக மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதுபோன்ற விடயங்களைச் சாதாரண மக்களிடம் ஆக்கபூர்வமாக விளக்கிக் கொண்டு செல்லும் பொறுப்பு ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகளுக்கு உரித்தானது. துரதிர்ஷ்டவசமாக அரசியல் கணக்குகளுக்காகவும் சுயலாபங்களுக்காகவும் மக்களை உணர்வுரீதியாகத் தூண்டிவிடும் அரசியல்வாதிகளையுமே நாம் பெற்றிருக்கிறோம்.

நாளுக்கு நாள் இது போன்ற நதிநீர்ப் பிரச்சினைகளில் மாநிலங்கள் இடையேயான உறவுகள் நாசமடைந்துவரும் நிலையில், மத்திய அரசு இது தொடர்பாக தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்கான அமைப்புகளை உருவாக்குவது காலத்தின் கட்டாயம். மாநிலங்கள் இடையேயான சிக்கல்களை வேடிக்கை பார்த்துக்கொண்டு அது வாளாவிருக்கலாகாது!

**ஆசிரியர் தலையங்கம்**
**நன்றி:-த ஹிந்து**



## த ஒடுக்க
## புப்பியது



சு கேட்டுக் கொண் தயாராகவுள்ளதாக தனர். (இ-7-10)

# பெங்களூரில் ஊரடங்கு உத்தரவு ; பல பகுதிகளில் 144 தடை உத்தரவு

### பொலிஸார் துப்பாக்கிச் சூடு; ஒருவர் உயிரிழப்பு

(சென்னை)

காவிரி விவகாரத்தால் போராட்டம் வெடித்ததால் பெங்களூர் மாநகரின் 16 பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிகக்ப்பட்டுள்ளது. மேலும் பல பகுதிகளில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பகுதிகளில் பாடசாலை, கல்லூரி உள்ளிட்ட கல்வி நிலையங்கள் மட்டுமல்லாது பொது சேவைகள் அனைத்தும் முடக்கப்படும். அத்தியாவசியத் தேவைக்கு மட்டும் அனுமதி அளிக்கப்படும். பொதுமக்கள் தங்கள் வீடுகளில் இருந்து வெளிவர அனுமதி அளக்கப்படமாட்டாது. பொலிஸ மற்றும் பாதுகாப்புப் படையினர் கொடி அணிவகுப்பு சீரான இடைவெளியில் நடத்தப்படும்.

அதே நேரம் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பகுதிகளில் பொது மக்கள் வெளியில் வர அனுமதிக்கப்படுவர், ஆனால் 4 பேருக்கு மேல் கூடுவதற்கு அனுமதி கிடையாது.

மேலும், வன்முறையில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.



காவிரி விவகாரத்தால் பெங்களூரில் ஏற்பட்டுள்ள கலவரத்தில் 50 இற்கும் மேற்பட்ட பேருந்துகள் மற்றும் 30 இற்கும் மேற்பட்ட சரக்கு லொறிகள் தீக்கீரையாக்கப்பட்டன. போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டார் மற்றும் 3 பேர் காயமடைந்துள்ளனர்.(இ-7-10)

## சமாதானம் நிலைக்க வேண்டுமாயின்

# வடக்கிலிருந்து படையினர் குறைக்கப்பட வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த வலியுறுத்து

(கொழும்பு)

**வடக்கில் இருந்து படையினரை குறைக்கவேண்டும் என்ற கோரிக்கையை தாம் ஏற்றுக்கொள்வதாக ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.**



ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இந்தக் கருத்தை வெளியிடுள்ளார்.காவிந்த ஜெயவர்த்தன, ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய இளைஞர் முன்னணியின் தலைவராகவும் செயற்படுகிறார்.

இந்த நிலையில், தேசிய அரசாங்கம், முழுமையாக கடந்தகால காயங்களை ஆற்றி நல்லிணக்கத்தை ஏற்படுத்த முனைகிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் இருந்து எந்த அதிகாரி வந்தாலும் வராவிட்டாலும் மக்களின் அபிலாஷைகளை இந்த அரசாங்கம் நிறைவேற்றும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தை பொறுத்தவரையில் ஏற்கனவே வடக்கு,கிழக்கு மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டுள்ளதாகவும் காவிந்த சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு- கிழக்கு மக்களை பொறுத்தவரை அவர்கள் கடந்த 30 வருடங்களால் தென்னிலங்கையில் இருக்கும் இராணுவத்தினரையே பகலும் இரவும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

எனவே, சமாதானம் ஏற்பட்டு வருகின்ற நிலையில் அவர்களும் சுதந்திரமாக செயற்பட வழியேற்படுத்தப்பட வேண்டும் என்று காவிந்த மேலும் தெரிவித்தார்.(இ-7-10)

# மாலியில் ஐ.நா.அமைதிப் படையில் பணியாற்ற இலங்கைப் படைகளை அனுப்புவதற்கு தீர்மானம்



ஐ.நா.அமைதிப் படையில் இலங்கை படையினரின் பங்களிப்பு அதிகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார். ஆபிரிக்க நாடான மாலிக்கு படையினர் விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

லண்டனில் நடைபெறும் ஐ.நா.அமைதிப்படையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களின் கூட்டத்தில், இது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது, மாலியில் பணியாற்றவுள்ள இலங்கை படையினருக்கு நவீன கருவிகளைக் கொள்வனவு செய்வதற்கு உதவுமாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கோரியதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கு ஐ.நா.அமைதிப் படை அமைச்சரவைக் குழு சாதகமான பதிலை அளித்துள்ளது.

படையினர் தமது திறமைகளை பயன்படுத்திக் கொள்வதற்கு இது பொன்னான வாய்ப்பாக அமையும் என்றும் ருவான் விஜேவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார்.(இ-7-10)

# முதுகெலும்பு உள்ள ஜனாதிபதியே நாட்டுக்குத்தேவை-ஹெல உறுமய

முதுகெலும்பு உள்ள ஜனாதிபதியே இலங்கைக்கு தற்போது அவசியம் என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

முதுகெலும்புடன் கூடிய பலம் பொருந்திய,ஒழுக்க நெறியுடைய தலைவர் ஒருவர் இலங்கைக்கு அவசியம்,

அவ்வாறான தலைவரை உருவாக்குவதற்கு ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் தேவை எனவும் இந்தக் கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

மேலும் இவற்றிற்கு முன்னுதாரணமாக இன்று பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திகழ்வதாகவும் அவர் தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸில் அதிகரித்துள்ள போதையினை ஒழிப்பதற்கு பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பலஅதிரடி வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளமைக்கு அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளும், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பும் எதிர்ப்புக் குரல் வெளியிட்டு வந்தாலும் அதற்கு செவி மடுக்காது பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி முன்னெடுத்துள்ள வேலைத் திட்டங்கள் பாராட்டப்பட வேண்டியது என்றும் ஓமல்பே சோபிததேரர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி போன்ற ஜனாதிபதியே எமது நாட்டுக்கு அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.(இ-7-10)

## இன்று ஒரு தகவல்

### உதவி செய்பவர்களை உபயோகப்படுத்திக்கொள்ளும் முறைகள்

பொன் முட்டை இடுகிற வாத்தை ஒருவன் வெட்டிக் கொன்று இருப்பதையும் இழந்ததாக ஒரு கதை உண்டு.

அப்படி நமக்கு அமயஞ்சமயத்திற்கு உதவுபவர்களை ஏகமாய்த் தொடங்கி , தொல்லை கொடுத்துக் கொடுத்துக் கெடுத்துக் கொள்வார்கள் சிலர், கிணற்றில் விழுந்து விட்டவன் தன்னை வெளியே எடுத்துக் காப்பாற்றக் கயிறு விட்டவனை உள்ளே இழுத்துப்போட்ட கதையாகவும் சிலர் நடந்து கொள்வார்கள்.

சிலருக்கு உதவுபவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் எல்லை தெரியாது. தண்ணீரில் விழுந்து விட்டவர்களைக் காப்பாற்றும் போது , நீச்சல் தெரிந்தவன் தலை முடியைப் பிடித்துத் தான் தூக்குவான். அது தான் காப்பாற்றும் முறையும் கூட. உயிருக்குப் போராடும் நீச்சல் தெரியாதவனோ , நிதானம் தெரியாமல் அப்பாடி ! கிடைத்ததே பிடிப்பு என்று காப்பாற்ற வந்தவனின் கையையும் காலையும் கட்டிப் பிடித்துக் கொள்வான். காப்பாற்றுபவனால் எப்படி நீந்த முடியும்?

இந்தக் கதைகளைப் போல் நமக்கு உதவ முன்வருபவர்களின் கதையை ஆக்கிவிடக் கூடாது.

எனக்கு ஒரு நண்பர் இருக்கிறார். இவரிடம் உதவி என்று போய்க் கேட்டால் செய்ய மாட்டார். இவனோட பெரிய நியூசென்சாப் போச்சு என்பார். ஆனால் அவருக்கு மனதில் பட்டுவிட்டால் சுயநலத்தை மறந்து மித மிஞ்சி உதவுவார்.

இப்படிப் பலர் இருக்கிறார்கள். இவர்களிடத்தில் ஐயோ காப்பாத்துங்க என்று போய்ப் புலம்பக் கூடாது. ஆனால் விடயத்தை மட்டும் காதில் போட்டுவிட வேண்டும். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், நான் இந்த ரயிலைப் பிடித்தாக வேண்டும். என்ன செய்யிறது என்றே புரியலை என்று சொல்ல வேண்டுமே தவிர , கொண்டு போய் இறக்கிவிடு என்று கேட்கக் கூடாது. இவர்களிடத்தில் அப்படிக் கேட்டால் காரியம் நடக்காது.

என்னென்ன உதவிகள் என்றால் இன்னினவர்களிடத்தில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வரையறை வேண்டும். உடலால் உழைத்து உதவி செய்பவர்களிடம் பணம் கேட்கக் கூடாது.பணம் கொடுத்து உதவுபவர்களிடம் வேறு உதவிகளைக் கேட்கக் கூடாது.

உதவியைப் பெற்றதும் நம் மகிழ்ச்சியை , உற்சாகத்தை வெளிப்படையாகக் காண்பித்துக் கொள்ள வேண்டும். இந்த உணர்ச்சிகளைப் பூட்டிவைக்கக் கூடாது.

மாறாக , நன்றியுணச்சியைப் பூட்டி வைத்துத் தருணம் வரும் போது (எவ்வளவு காலம் கழிந்தாலும் சரி ) காட்ட வேண்டும்.

நாம் செய்யும் உதவிகள் ஒருவழிப் பாதையாக இருக்காது என்று உதவுபவர்கள் நம்பும் வகையில் நடந்து கொள்வதும் செயற்படுவதும் முக்கியம்.

ஒருவர் தச்சு வேலை செய்யும் மனிதர் ஒருவரை அறிமுகப்படுத்தி உதவினார். இறுதியில் கூலியில் தகராறு. இரண்டு பேரும் உதவி செய்தவரிடம் மாறி மாறிப் புகார் செய்தார்கள்.ஏண்டா இதில் தலையைக் கொடுத்தோம் என்று ஆகிவிட்டது உதவியவருக்கு.

இத்தகைய இக்கட்டான நிலையை உதவுபவர்களுக்கு ஒருபோதும் வைக்கக் கூடாது. வைத்தால் அவர்களுடைய வீட்டுக் கதவும் மனக் கதவும் சாத்தப்படும்.

**லேனா தமிழ்வாணன்**

விஞ்ஞானம் பகுதி-II தொடர்ச்சி...

08.

(A) மனிதனின் உட்சுவாச, வெளிச்சுவாச செயன்முறைகளின்போது பிரிமென்றகடுத் தசைகள் சுருங்கித் தளர்வதை அறிந்திருப்பீர்கள்.

(i) பிரிமென்றகட்டுத் தசைகள் சுருங்குவதன் விளைவாக நெஞ்சறைக் குழியினுள் ஏற்படும் மாற்றங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(ii) காற்றுச்சுவாசத்தின்போது சக்தியின் ஒரு பகுதி வெப்பமாக விடுவிக்கப்படும். மிகுதி இரசாயனச் சக்தியாக சேமிக்கப்படும்.

a) உயிர் அங்கியினுள் இரசாயனச் சக்தி எச்சேர்வை வடிவில் சேமிக்கப்படுகின்றது?

b) காற்றுச் சுவாசத்திற்கான சமப்படுத்தப்பட்ட இரசாயனச் சமன்பாட்டை எழுதுக.

(B) அனுசேபச் செயன்முறைகளின்போது உருவாகும் தேவையற்ற பொருள்கள் உடலிலிருந்து வெளியேற்றப்படுதல் கழிவகற்றல் எனப்படும். சிறுநீரகம் கழிவகற்றும் அங்கமாகும். அதன் மூலம் சிறுநீர் உற்பத்தியாக்கப்படுகின்றது.


(i) சிறுநீரில் உள்ள கழிவுப்பொருளொன்றைக் குறிப்பிடுக.

(ii) சிறுநீர் வடிகட்டலின்போது முற்றாக மீள அகத்துறிஞ்சப்பட வேண்டிய கூறு யாது?

(iii) சிறுநீரகத்தில் அல்லது சிறுநீரக வழியில் கல்சியம் ஒட்சலேற்று போன்ற உப்புகள் பளிங்காவதால் ஏற்படும் விளைவு யாது?

(iv) இந்நிலைமையை இழிவளவாக்குவதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் இரண்டைக் குறிப்பிடுக.

(C) ஒழுங்கற்ற திண்மப் பொருளொன்றின் திணிவையும் கனவளவையும் அறிந்து கொள்ளச் செய்யப்பட்ட செயற்பாடொன்றின் நிலைகளைக் கீழே காணலாம்.
(நீரின் அடர்த்தி $=1000\ kg\ m^{-3}$, தேங்காயெண்யின் அடர்த்தி $=900 kg\ m^{-3}$, $g=10\ m\ s^{-2}$ ஆகும்)





(i) a) மேற்தரப்பட்டுள்ள தகவல்களுக்கு ஏற்ப, பொருளின் கனவளவையும் திணிவையும் தீர்மானிக்கக் கூடிய நிலைகளை ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

b) ஒழுங்கற்ற பொருளின் அடர்த்தியைக் கணிக்குக.

(ii) II, IV ஆகிய நிலைகளில் பொருளின் அமைவிடம் வேறுபட்டிருப்பதற்கான காரணம் யாது?

(D) நான்கு இசைக்கருவிகள் இசைக்கப்படும்போது தோன்றும் அலைகளின் வடிவங்கள் கீழே தரப்பட்டுள்ளன.





(i) A, B ஆகிய அலை வடிவங்களை ஒப்பு நோக்கும்போது கிடைக்கும் ஒலியின் சிறப்பியல்பு யாது?

(ii) புல்லாங்குழலில் "ச" ஸ்வரத்தை இசைக்கும் போது உருவாகும் அலையின் கோலம் A வடிவில் தரப்படும். வேறு இழைக்கருவியில் அதே ஸ்வரத்தை இசைக்கும் போது கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் அலைக் கோலம் யாது?

(iii) அதிகூடிய உரப்புடைய ஒலியலை எது? அதனை இனங்காண்பதற்கு உதவிய பௌதிகக் கணியம் எது?

09.

(A) செப்புசல்பேற்று உப்பின் நீர்க்கரைசலை மின்பகுப்புச் செய்வதற்காக தயார்செய்யப்பட்ட அமைப்பைக் கீழே உருவில் காணலாம்.




(i) X, Y என்பவை ஒரே பதார்த்தத்தினால் செய்யப்பட்ட தாக்கு திறனற்ற இரண்டு மின்வாய்களாகும். இம் மின்வாய்களாகப் பயன்படுத்தப்படுவதற்குப் பொருத்தமான பதார்த்தமொன்றைக் குறிப்பிடுக.

(ii) செப்புசல்பேற்று நீர்க்கரைசலில் உள்ள அயன் வகைகளின் சூத்திரங்களை எழுதுக.

(iii) Y மின்வாயிற்கு அருகில் நடைபெறும் அரைத்தாக்கத்திற்கான சமப்படுத்தப்பட்ட இரசாயனச் சமன்பாட்டை எழுதி, அத்தாக்கம் ஒட்சியேற்றமா? தாழ்த்தலா? எனக் குறிப்பிடுக.

(iv) மேற்குறித்த அமைப்பில் அனோட்டைக் குறிப்பிடுக.

(v) இம்மின்பகுப்புச் செயன்முறையின்போது பெறப்படும் இரண்டு அவதானிப்புக்களை எழுதுக.

(vi) மின்பகுப்புச் செயன்முறை கைத்தொழில் ரீதியில் பயன்படுத்தப்படும் இரண்டு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

(B) ஓடும் நீரூற்றுக்குக் குறுக்காக நீர்த்தாங்கியொன்று அமைக்கப்பட்டு நீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. அந்நீரை கொண்டு நீர்ச்சுழலியைச் சுழலச் செய்து மின்னுற்பத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. முற்றாக நீரினால் நிரப்பப்பட்ட தாங்கியிலுள்ள நீரின் திணிவு 6000 kg ஆகும். தாங்கியானது நீர்ச்சுழலி அமைந்துள்ள மட்டத்திலிருந்து 10 m உயரத்தில் உள்ளது. ($g=10\ ms^{-1}$)

(i) தாங்கியில் சேமிக்கப்பட்டுள்ள நீரின் ஈர்ப்பு அழுத்தச் சக்தி எவ்வளவு?

(ii) மின்னைப் பிறப்பிக்கும்போது தாங்கி முற்றாக வெறுமையாக 10 நிமிடங்கள் எடுத்தது. நீரிலிருந்து நீர்ச்சுழலிக்கு சக்தி வழங்கப்படும் வீதத்தை நியம அலகுகளைப் பயன்படுத்திக் கணிக்குக.
(நீர் வடிந்தோடும் போது சக்தியிழப்பு நடைபெறவில்லை எனக் கருதுக)

(iii) இங்கு மின்பிறப்பாக்கியிலிருந்து கிடைக்கும் வோல்ற்றளவு 240 V ஆகும். இவ்வோல்ற்றளவு நிலைமாற்றியைக் கொண்டு 12 V வரை குறைக்கப்பட்டு இழை மின்குமிழ்களை ஒளிரச்செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது.

a) இதற்குப் பயன்படுத்தப்பட்ட நிலைமாற்றியின் வகை யாது?

b) இழை மின்குமிழில் 12V, 2 A எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விழை மின்குமிழின் வலு எவ்வளவு?

(iv) இவ்வாறான 5 மின்குமிழ்கள் நாளொன்றுக்கு 5 மணித்தியாலம் வீதம் ஒளிர்ந்தன எனின், 10 நாட்களில் செலவாகும் மின்னலகின் பெறுமானத்தைக் கணிக்குக.
(மின்னலகொன்று ஒரு கிலோவாற்று மணித்தியாலம் ஆகும்.)

◆◆◆

# க.பொ.த.(சா/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

★ வலம்புரி கல்விப்பிரிவு ★

## வரலாறு பகுதி-I (பயிற்சிக்குரியது)

01. இலங்கையில் மிகப் பழைமை வாய்ந்த நூலாக விளங்குவது
1) மகாவம்சம் 2) தீபவம்சம் 3) போதிவம்சம் 3) தாதுவம்சம்

02. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பகுதிக்குரிய தகவல்களைக் கற்றுக் கொள்வதற்கு உதவும் முக்கியத்துவம் வாய்ந்த மூலாதாரம் பின்வருவனவற்றுள் எது?
1) வம்சக் கதைகள் 2) கல்லாயுதங்கள்
3) கல்வெட்டுக்கள் 4) கட்டடங்களின் சிதைவுகள்

03. இலங்கையின் முன் வரலாற்றுக்கால மனித நடத்தைகளின் அடிப்படை மாற்றம் ஏற்படுவதற்கான காரணமாக அமைந்தது
1) இரும்புப் பாவனையின் ஆரம்பம்
2) உணவுக்காக விலங்குகளை வேட்டையாடுதல்
3) வாழ்விடமாகக் கற்குகைகளைப் பயன்படுத்துதல்
4) உணவை சுட்டு உண்ணுதல்

04. பண்டைக்கால கல்வெட்டுக்களில் 'கமிக' எனக் குறிப்பிடப்படுபவர்
1) குடும்பத்தின் தலைவன்
2) கொத்தணிக் குளங்களின் தலைவன்
3) கோத்திரத் தலைவன்
4) கிராமத்தின் தலைவன்

05. பாதிகாபய மன்னனுடைய ஆட்சிக் காலத்தில் எந்த நாட்டிலிருந்து 'மணிகள்' கொள்வனவு செய்யப்பட்டன?
1) உரோம் 2) சீனா 3) இந்தியா 4) கிரேக்கம்

06. இலங்கையில் முதன்முதலாகப் பாரிய அளவிலான குளங்கள் அமைக்கும் பணி எந்த மன்னனுடைய ஆட்சிக்காலததில் ஆரம்பிக்கப்பட்டது?
1) சத்தாதிஸ்ஸ மன்னன் 2) வசப மன்னன்
3) மகாசேன மன்னன் 4) தாதுசேன மன்னன்

07. பழங்காலத்தில் சர்வதேச வர்த்தகத்தின் மையமாக இலங்கை வளர்ச்சியடைவதற்குப் பங்களிப்புச் செய்த காரணிகளுள் முக்கியத்துவம் வாய்ந்த காரணியாக அமைவது
1) கிழக்கு-மேற்குக் கடல் வணிகப் பாதையின் மையத்தில் அமைந்திருப்பது
2) தென்னிந்தியாவிற்கு அண்மையில் அமைந்திருப்பது
3) நாட்டைச் சூழ இயற்கைத் துறைமுகங்கள் அமைந்திருப்பது
4) இந்து சமுத்திரத்தில் ஒரு தீவாகக் காணப்படுவது

08. பின்வருவற்றுள் எது தொடர்பாக 'கெதி-அட' எனும் வரி அறவிடப்பட்டது?
1) தனியார் குளங்களுக்கு 2) வீட்டுத்தோட்டங்களுக்கு
3) நெல் வயல்களுக்கு 4) சேனைப்பயிர் செய்கைக்கு

09. எந்தத் துறைமுகத்தினூடாக வெள்ளரசு மரக்கிளை இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது?
1) மாதீத்த 2) ஜம்புகோளப் பட்டணம்
3) கோகண்ண 4) கொடவாய

10. 'தற்போதைய மாதுறு ஓயா நீர்த்தேக்க அணையின் மடைக்கதவை அமைப்பதற்குப் பொருத்தமான இடம் தெரிவு செய்யப்பட்டபோது அந்த இடத்தில் பண்டைக் காலத்தில் அமைக்கப்பட்டிருந்த மடைக் கதவு சிதைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது'
இதன் மூலம் நாம் விளங்கிக் கொள்ளும் மிக முக்கியத்துவம் வாய்ந்த தகவலொன்றாக அமைவது
1) மடைக் கதவை அமைப்பதற்குத் தற்காலத்தைப் போன்ற பொருட்களே பயன்படுத்தப்பட்டுள்ளன.
2) அளவீட்டு முறைகள் பண்டைக் காலத்திலும் நவீன காலத்திலும் ஒரே விதமாக அமைந்துள்ளன.
3) பண்டைக் காலத்தில் நீர்ப்பாசன தொழில்நுட்ப அறிவு மிக உயர்வான நிலையில் காணப்பட்டுள்ளது
4) பண்டைக் காலத்தில் மடைக்கதவுக்கு அருகில் பழைய நீர்த்தேக்கம் ஒன்று இருந்துள்ளது.

11. பண்டைக்காலத்தில் இரும்பைப் பிரித்தெடுப்பதற்கு இயற்கையாக வீசும் காற்றினைப் பயன்படுத்தும் தொழில்நுட்பம் காணப்பட்டமைக்கு ஆதாரமாக விளங்கும் இரும்புச் சூளை கண்டுபிடிக்கப்பட்ட இடம்
1) சமனல வெவ 2) பெரகல 3) அளகொல வெவ 4) அலிகல

12. முதலாம் பராக்கிரமபாகு மன்னன் தான் பிறந்த இடத்தில் அமைத்ததாக அறியப்படும் தூபி
1) உதகனாவ தூபி 2) அபயகிரி
3) சூத்திகர சைத்தியம் 4) தெமல மஹாசாய

16 ஆம் பக்கம் பார்க்க...

## வரலாறு பகுதி-I தொடர்ச்சி...

13. பண்டைக்கால நீர்ப்பாசனத் தொழில்நுட்பவியலாளர்கள் அமுக்கத்தின் காரணமாக குளக்கட்டுக்கு ஏற்படும் ஆபத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவும் நீரைப் பிரதான கால் வாய்க்கு திறந்து விடுவதற்காகவும் அமைத்தது.
   1) அலைதாங்கி 2) வான்கதவு
   3) மடைக்கதவு 4) கலிங்கத் தொட்டி
14. பண்டைக் காலத்தில் இலங்கையில் விருத்தியடைந்த வெளிநாட்டு வர்த்தகம் நிலவிய மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது
   1) நாட்டின் எல்லாப் பகுதியிலும் குடியேற்றங்கள் பரவலடைந்தமை
   2) குடியிருப்புக்களை இணைக்கும் வகையில் பாதைகள் அமைக்கப்பட்டமை
   3) பிரதான நகரங்களில் வெளிநாட்டு வர்த்தக நிலையங்கள் நிறுவப்பட்டிருந்தமை
   4) முக்கிய நதிகளுக்கு அருகில் துறைமுக நகரங்கள் அமைந்திருந்தமை
15. பண்டைக் காலத்தில் "கலந்த" என்பதன் மூலம் அறியப்பட்டது
   1) தூரத்தை அளப்பதற்கு அலகு 2) நேரத்தை அளப்பதற்கான அலகு
   3) நீரை அளப்பதற்கான அலகு 4) நிறையை அளப்பதற்கான அலகு
16. பொலநறுவை இராசதானி வீழ்ச்சியடைவதற்கு உடனடிக்காரணியாக விளங்குவது
   1) கலிங்கருக்கும் பாண்டியருக்குமிடையே காணப்பட்ட ஆதிக்கப் போட்டி
   2) கலிங்க மாகனுடைய படையெடுப்பு
   3) பலவீனமான மன்னர்கள் ஆட்சிக்கு வந்தமை
   4) இராஜராஜ சோழனுடைய படையெடுப்பு
17. முதலாம் விமலதர்மசூரிய மன்னன் எதிர்நோக்கிய சவால்களில் ஒன்றாக அமையாதது
   1) போர்த்துக்கேயரிடமிருந்து கண்டி இராசதானியைப் பாதுகாக்க நேர்ந்தமை
   2) சீதாவாக்கை இராசதானியின் செல்வாக்கிலிருந்து கண்டி இராசதானியை விடுதலை பெறச் செய்தமை
   3) ஒல்லாந்தரிடமிருந்து கண்டி இராசதானியைப் பாதுகாக்க நேர்ந்தமை
   4) கண்டி இராசதானியின் பொருளாதாரத்தை மேலும் விரித்தியடையச் செய்ய வேண்டியிருந்தமை

   பின்வருவனவற்றுள் கண்டி இராசதானி ஆட்சியாளனாக விளங்குபவர் கடைப் பிடிக்க வேண்டிய கொள்கைகளின் சரியான விடைத்தொகுதி?
18. A-பாரம்பரியங்களையும் வழக்காறுகளையும் முறையே கடைப்பிடித்தல்
   B-தவறு செய்வோருக்கு மரண தண்டனை விதித்தல்
   C-தலதா மாளிகையின் தந்ததாதுவின் பாதுகாவலனாக விளங்குதல்
   D-அனைத்து வழக்குகளுக்கும் தீர்ப்பு வழங்குதல்
   1) A யும் B யும் 2) B யும் D யும் 3) A யும் C யும் 4) C யும் D யும்
19. மறுமலர்ச்சிக் காலத்தில் புதிய கடல்வழிப் பாதை கண்டுபிடிக்கப்படுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டது. இதற்குரிய பிரதான காரணங்களைக் கொண்ட விடைத்தொகுதி?
   A-திசையறி கருவி, வடதுருவ நட்சத்திர கருவி என்பன கண்டுபிடிக்கப்பட்டமை
   B-உலகம் உருண்டை வடிவமானது என நிரூபிக்கப்பட்டமை
   C-மாகாண அதிகாரிகள் ஆதரவு வழங்கியமை
   D-படவரை கலையில் ஏற்பட்ட அபிவிருத்தியின் மூலம் உலகம் பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெற்றுக் கொண்டமை
   1) A,B,C 2) B,C,D 3) C,D,A 4) A,B,D
20. போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பாண இராசதானியைக் கைப்பற்றுவதில் கவனம் செலுத் தியமைக்குரிய காரணிகளாக விளங்குபவை
   A-நாடு முழுவதும் வாசனைத் திரவிய வர்த்தக்கத்தில் ஏகபோக உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு
   B-வடபகுதியில் துறைமுகமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு
   C-கத்தோலிக்க சமயத்தை பரப்பும்நடவடிக்கைகளுக்கு யாழ்ப்பாணப்பிரதேசத்தில் ஏற்பட்ட தடைகளை நீக்குவதற்கு
   D-யாழ்ப்பாண-கண்டி ஆட்சியாளர்களுக்கிடையிலான தொடர்பைத் தடைசெய்தல்
   1) A யும் B யும் 2) B யும் C யும் 3) C யும் D யும் 4) A யும் C யும்

பின்வரும் கண்டுபிடிப்புக்களைக் கொண்டு 21 ஆம் 22 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.
   A-பறக்கும் நூனாளி B-பாதுகாப்பு விளக்கு
   C-மெக்கடம் முறை D-மியுல் இயந்திரம்
   E-நீராவி இயந்திரம்

21. புடைவைக் கைத்தொழிலோடு தொடர்புடைய கண்டுபிடிப்புக்களின் விடைத் தொகுதி
   1) A யும் C யும் 2) B யும் E யும்
   3) C யும் D யும் 4) A யும் D யும்
22. நிலக்கரி கைத்தொழிலோடு தொடர்புடைய கண்டுபிடிப்புக்களின் விடைத் தொகுதி
   1) A யும் C யும் 2) B யும் E யும்
   3) C யும் D யும் 4) A யும் D யும்
23. பிரத்தானியர்கள் இலங்கையைக் கைப்பற்றுவதில் தமது கவனத்தைச் செலுத்துவதற்குப் பிரதான காரணியாக விளங்கியது
   1) இந்தியாவில் மொகலாய ஆட்சியை பலவீனமடையச் செய்ய முடியும் என்பதால்
   2) இந்தியாவைச் சுற்றியுள்ள வர்த்தக வலயத்தில் நடைபெறுகின்ற வர்த்தக நடவடிக்கைகளை நிர்வகிக்க இயலும் என்பதால்
   3) இந்து சமுத்திரத்தில் நடைபெறுகின்ற கடல்போக்குவரத்துச் செயற்பாடுகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம் என்பதால்
   4) பெருந்தோட்ட பயிர்ச்செய்கைக்கு தேவையான நிலத்தைப் பெற்றுக் கொள்ள இயலும் என்பதால்

   பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள A தொடக்கம் J வரையிலான தகவல்களைப் பயன்படுத்தி 24 ஆம் 25 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| வருடம் | பிரித்தானிய ஆளுநர்கள் | வரலாற்று நபர்கள் |
|---|---|---|
| A 1815 | D பிறெடறிக் நோர்த் | G முத்துச்சாமி |
| B 1848 | E ரொபட் ப்ரேளன்றிக் | H புரன் அப்பு |
| C 1803 | F டொரிங்டன் பிரபு | J ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னன் |

24. கண்டி இராசதானியைப் பிரித்தானியர்கள் கைப்பற்றியமையுடன் தொடர்புடைய தக வல்கள் அடங்கும் தொகுதி
   1) AEJ 2) AFJ 3) ADH 4) BEG
25. கண்டி இராசதானி கைப்பற்றப்பட்ட பின்னர் பிரித்தானியருக்கு எதிராக இடம்பெற்ற கிளர்ச் சியுடன் தொடர்புடைய தகவல்களின் விடைத் தொகுதி
   1) CFH 2) BFH 3) AFH 4) BFG

◆பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள A தொடக்கம் J வரையான தகவல்களைப் பயன்படுத்தி 26 ஆம், 27 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| தலைவர்கள் | வெளியீடுகள் | பாடசாலைகள் |
|---|---|---|
| A ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் | D சரசவி சந்தரச | G கொழும்பு சாஹிராக் கல்லூரி |
| B ஹென்றி ஸ்ரீல் ஒல்கொட் | E முஸ்லிம் நேசன் | H வண்ணார் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை |
| C எம். சீ. சித்திலெப்பை | F உதயபானு | J கொழும்பு ஆனந்தாக் கல்லூரி |

26. பௌத்த சமய மறுமலர்ச்சி இயக்கத்தோடு தொடர்புடைய சம்பவங்களின் விடைத் தொகுதி
   1) ADH 2) BDJ 3) CFJ 4) BFJ
27. இந்து சமய மறுமலர்ச்சி இயக்கத்தோடு தொடர்புடைய தகவல்களின் விடைத் தொகுதி
   1) AEH 2) CFG 3) BEJ 4) AFH

◆கோல்புறூக், கமரூன் சீர்திருத்தக் குழுவினரால் முன்வைக்கப்பட்ட சில சீர்திருத்த சிபார்சுகள் கீழே தரப்பட்டுள்ளன.
   இத்தகவல்களைக் கொண்டு 28 ஆம், 29 ஆம் வினாக்களுக்கு விடை தருக.
   A-சட்டசபை, சட்டநிரூபண சபை ஆகியவற்றை அமைத்தல்.
   B-மலைநாடு, கரையோரப் பிரதேசங்கள் ஆகியவை இணைந்த வகையில் நிர்வாக அமைப்பொன்றை அறிமுகம் செய்தல்.
   C-புதிய நீதி பரிபாலன முறையொன்றை அறிமுகம் செய்தல்.
   D-இராஜகாரிய கட்டாய சேவை முறையை இல்லாதொழித்தல்.
   E-அரசின் வர்த்தக ஏகபோகத் தன்மையை இல்லாதொழித்தல்

28. மேற்குறித்தவற்றுள் அரசியல் துறையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களின் விடைத் தொகுதி
   1) Aயும் Bயும் 2) Aயும் Dயும் 3) Cயும் Dயும் 4) Dயும் Eயும்
29. பொருளாதாரத் துறையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களின் விடைத்தொகுதி
   1) Aயும் Bயும் 2) Cயும் Dயும் 3) Dயும் Eயும் 4) Aயும் Cயும்

◆இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சியால் ஏற்பட்ட விளைவுகள் சில கீழே தரப்பட் டுள்ளன. இவ்விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு 30 ஆம், 31 ஆம் வினா க்களுக்கு விடைதருக.
   A-மத்திய வகுப்பினர் தோற்றம் பெறல்
   B-ஏற்றுமதி வர்த்தகப் பயிர்களின் அறிமுகம்
   C-மேலைத்தேய வழக்காறுகள் பரவலடைதல்
   D-தொழிலாளர் வர்க்கம் தோற்றம் பெறல்
   E-ஆங்கிலக் கல்வியின் அறிமுகம்.

30. பிரித்தானியர் ஆட்சியால் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் இரண்டினைக் குறிக்கும் விடைத்தொகுதி
   1) Aயும் Bயும் 2) Bயும் Cயும் 3) Dயும் Eயும் 4) Aயும் Dயும்
31. இந்நாட்டில் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றங்கள் இரண்டினைக் குறிக்கும் விடைத் தொகுதி
   1) Aயும் Cயும் 2) Bயும் Dயும் 3) Cயும் Eயும் 4) Aயும் Eயும்

◆ பின்வரும் 32 ஆம், 33 ஆம், 34 ஆம் வினாக்களுக்கு புள்ளிக்கோட்டில் வரவேண்டிய மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தினைக் குறிப்பிடுக.

32. சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் பிரித்தானிய முடியின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட அலுவலர்..........என அழைக்கப்பட்டார்.
   1) ஆளுநர் 2) தேசாதிபதி 3) பிரதம மந்திரி 4) சபாநாயகர்
33. 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்புக்கு அமைவாக இலங்கையின் முதலாவது பெயரளவு ஜனாதிபதியாக.............நியமிக்கப்பட்டார்.
   1) ஜே.ஆர்.ஜயவர்த்தன 2) வில்லியம் கோபல்லாவ
   3) ஆர்.பிரேமதாச 4) டீ.பீ.விஜேயதுங்க
34. 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டமுறைக்கு அமைவாக இலங்கையில் அமைக்கப்பட்ட அதியுயர் சட்ட நிறுவனமாக ..................... விளங்குகின்றது.
   1) மேன்முறையீட்டு நீதிமன்றம் 2) உயர் நீதிமன்றம்
   3) மாவட்ட நீதிமன்றம் 4) மீயுயர் நீதிமன்றம்

◆கீழே A,B,C,D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள சோடிகள் ஒவ்வொன்றையும் வாசித்து 35 ஆம், 36 ஆம், 37 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.
   A-1 சோல்பரி அரசியல் யாப்பு 2 பாராளுமன்ற முறை
   B-1 அரசியல்கட்சி முறை 2 பாராளுமன்ற ஜனநாயகம்
   C-1 சட்ட சபை 2 சட்டவாக்கம்
   D-1 அடிப்படை மனித உரிமைகள் 2 நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி

35. இரண்டாவது விடயத்தின் வெற்றிக்கு முதலாவது விடயம் காரணமாக இருந்தமையைப் புலப்படுத்தும் சோடி.
   1) A 2) B 3) C 4) D
36. முதலாவதற்கும் இரண்டாவதற்கும் இடையே தொடர்பின்மையைக் காட்டும் சோடி
   1) A 2) B 3) C 4) D
37. இரண்டாவதின் செயற்பாட்டுக்கு முதலாவது அத்தியாவசியம் என்பதைக் காட்டும் சோடி
   1) A 2) B 3) C 4) D

◆கீழே தரப்பட்டுள்ள A,B ஆகிய இரு கூற்றுக்களைக் கொண்டு 38 ஆம், 39 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.
   A-தேயிலைக் கொள்கலன்கள் கடலில் வீசப்பட்டமை
   B-பஸ்ரீல் சிறைச்சாலை தாக்கப்பட்டமை

38. அமெரிக்க சுதந்திரப் போருடன் தொடர்புடையது பற்றிய சரியான விடை
   1) A சரியானது, B தவறானது 2) A தவறானது, B சரியானது
   3) A யும் B யும் சரியானவை 4) A யும் B யும் தவறானவை
39. பிரான்சியப் புரட்சியின் தொடர்புடையது பற்றிய சரியான விடை
   1) A சரியானது, B தவறானது 2) A தவறானது, B சரியானது
   3) A யும் B யும் சரியானவை 4) A யும் B யும் தவறானவை

◆கீழே தரப்பட்ட A,B ஆகிய இரு கூற்றுக்களையும் வாசித்து வினாவுக்கு விடையளிக்குக.
   A-பிரான்சிஸ் பேர்டினட் கொலை செய்யப்பட்டமை
   B-ஜேர்மனியில் ஹிட்லரின் செயற்பாடு

40. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் ஆரம்பத்துடன் தொடர்புடையது
   1) A சரியானது, B தவறானது 2) A தவறானது, B சரியானது
   3) A யும் B யும் சரியானவை 4) A யும் B யும் தவறானவை

◆◆◆

# வடக்கு விவசாயிகளிடம் முதலமைச்சர் வேண்டுகோள்

குறைந்த அளவு நீர்ப்பாவனையுடன் அதிகளவு அறுவடையை பெறக்கூடிய விதத்தில் விவசாய நடவடிக்கைகள் அமைதல் வேண்டும் என விவசாயிகளிடம் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விவசாய கிணறுகள் புனரமைப்பு தொடர்பாக முதலாம் கட்டம் விளக்கமளிப்பு நிகழ்ச்சி நேற்று முன்தினம் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்.

விவசாயம் என்பது வடபகுதி மக்களின் வாழ்வாதார மூலோபாயமாகும். இப்பகுதியில் உள்ள மக்கள் விவசாய நடவடிக்கைகளையே பெரிதும் நம்பியிருப்பவர்கள். நெற்பயிர்ச் செய்கைக்கு எங்கள் மக்கள் முதல் முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். மேலும் வடபகுதி மரக்கறி உற்பத்திகளுக்கும் பழ உற்பத்திகளுக்கும் நாடளாவிய ரீதியில் நல்ல வரவேற்பு உண்டு.

வடக்கு மாகாணத்தில் யாழ்.மாவட்டத்திலும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலும் நீர்ப்பாசன குளங்கள் அருமை. இப் பகுதி மக்கள் தோட்டக் கிணறுகளின் மூலமாகவே விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். சிறிய மற்றும் நடுத்தர விவசாய செய்கைகளில் ஈடுபடுகின்ற போதிலும் இவர்களின் விவசாய பொருட்களுக்கு நல்ல சந்தைப் பெறுமதிகள் உண்டு. இவர்கள் நீண்ட காலமாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற போதிலும் அண்மைக்காலமாக நிலத்தடிநீர் மாசு தொடர்பான விடயம் பூதாகரமாகக் கிளம்பி இப் பகுதி மக்களை குழப்பத்திற்கு ஆளாக்கியுள்ளது.

இங்குள்ள விவசாயக் கிணறுகளில் பல யுத்த நிகழ்வுகளில் அழிவடைந்து அதன் மேற்கட்டு பகுதிகள். கிணற்றின் ஏனைய பாகங்கள் சிதைவடைந்த நிலையில் உள்ளன. கிணறுகளின் முழு உபயோகமும் அவற்றின் சிதைவடைந்த தன்மையால் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மாரி காலங்களில் இவற்றைச் சுற்றியுள்ள நிலங்களினூடாகப் பாய்கின்ற மழை நீர் அந் நிலங்களில் காணப்படும் உரக்கலவைகளையும் அள்ளிக்கொண்டு சென்று இவ்வாறான கிணறுகளில் சேர்ப்பதால் அதன் மூலமாகவும் நிலத்தடி நீர் மாசுக்கள் நிரம்பியதாக மாற்றப்படுகின்றன.

விவசாயிகளுக்கு ஓர் அன்பான வேண்டுகோள். நிலத்தடி நீரினைப் பயன்படுத்தும் போது மிக அவதானமாகக் குறைந்த அளவு நீர்ப்பாவனையுடன்கூடிய அறுவடையை பெறக்கூடிய விதத்தில் விவசாய நடவடிக்கைகள் அமைதல் வேண்டும். நீர்த் தூறல் அமைப்பு மற்றும் சொட்டுநீர் விவசாய முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் மீண்டும் எம்மக்கள் சுத்தமான நீரைத் தமது கிணறுகளில் இருந்து பெற நீங்கள் உதவி செய்ய வேண்டும். அண்மையில் நீர்மாசடைவது பற்றிய ஆராய்ச்சியின் போது அளவுக்கதிகமாக பசளை. கிருமிநாசினி போன்றவற்றின் விச இரசாயனக் கலவைகள் நீருடன் கலந்திருப்பது காணப்பட்டது. எனவே விவசாயிகள் எமது சந்ததியினரின் எதிர்காலத்தினை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என மேலும் தெரிவித்தார். (இ-9)

## தேசிய வனத்தை அசுத்தமாக்க முயற்சித்தவர்கள் கைதாகினர்

பொலநறுவை - கல்லெல்ல தேசிய வனத்திற்குள் லொறி ஒன்றின் மூலம் குப்பை கொட்ட முனைந்தவர்கள். வனஜீவராசிகள் அதிகாரிகளால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த லொறியானது சட்டவிரோதமாக குறித்த வனப்பகுதிக்குள் நுழைந்த போதே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த வனத்திற்குள் சட்டவிரோதமாக குப்பைகளை கொட்டும் நடவடிக்கை பல வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் இதன்போது மற்றுமொரு ட்ரக் வண்டியொன்றில் குப்பை கொட்டுவதற்கு வந்தவர்களும் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7-10)

## புதிய நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் 12 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. இதில் புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக பேராசிரியர் திருமதி சி.குகநாதனும் உப தலைவர்களாக எம். அல்போன்ஸ் மற்றும் ஏ.கதிர்காமநாதனும் இணைச் செயலாளர்களாக சி.சுகுமார் மற்றும் இ.குகானந்தனும் பொருளாளராக எம்.ஈஸ்வரதேவன். உப பொருளாளராக என்.உலகநாதனும் பத்திராதிபராக எஸ். சத்தியநாராயணனும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-7-10)

## திரிபோஷா சத்துணவுக்கு தற்போது தட்டுப்பாடில்லை

### சுகாதார அமைச்சு

(கொழும்பு)

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும்போஷாக்கு உணவான திரிபோஷா நாட்டில் தட்டுப்பாடு இன்றி வழங்கும் அளவுக்கு கையிருப்பு இருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுமார் 700 மில்லியன் ரூபா செலவில் நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்டு வரும் நிலையில் பழைய இயந்திரங்களை கொண்டு தொடர்ந்து திரிபோஷா உற்பத்தி நடைபெறுவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

நவீன இயந்திரங்களுடனான புதிய தொழிற்சாலை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் திறக்கப்படவுள்ளது.

நிலமட்டத்திலிருந்து சுமார் அறுபது அடி உயரத்தில் இத்தொழிற்சாலை அமையப் பெறவுள்ளது.

சுமார் 100 வீதம் திரிபோஷா தேவையை பூர்த்தி செய்ய முடியுமென்று அமைச்சு தெரிவிப்பதுடன் சுமார் 750 மெற்றிக் தொன் மேலதிக உற்பத்தியும் கிடைக்குமென்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் மேலதிக உற்பத்தியை சந்தையில் விற்பனை செய்வது தொடர்பாகவும் அமைச்சு ஆராய்ந்து வருகின்றது.

உற்பத்தி செய்யப்படும் திரிபோஷாவை களஞ்சியப்படுத்துவதற்காக 200 மில்லியன் ரூபா செலவில் இரண்டு களஞ்சிய சாலைகள் அமைக்க அமைச்சு தீர்மானித்துள்ளது. (இ-7-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 835

மதன்




தர்சி




சிந்து




சர்மி சர்மி




ஜிவி




றொகான்





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# துறைமுக நகரம்: உருவாகிவரும் சீனப்பூதமொன்று

மற்றுமொரு பேச்சுவார்த்தை யினூடாக தற்போது கொழும்பு சர்வதேச நிதி நிர்வாக மையம் என்ற புதிய பெயர் மாற்றத்துடன் நடைபெற்று வரும் கொழும்பு துறைமுக நகரத் திட்டம் கைச் சாத்தாவதற்கு குறிப்பிடப்பட்ட தினத்திற்கு முன்னரே அவசர அவசரமாக அதற்கான அந்த திகதி முன்னோக்கி விரைந்து நகர்த்தப்பட்டது. அதாவது ஓகஸ்ட் 16 ஆம் திகதிக்கென்று ஒதுக்கப்பட்ட அந்நிகழ்வு அதற்கு முந்திய வெள்ளிக்கிழமைக்கு நகர்த்தப்பட்டதற்கான அவசரம் என்னவென்று எவருக்குமே தெரியாது. பெயர் மாற்றத்திற்கான அவசியம் என்ன என்பது போன்ற கேள்வியொன்றும் எழாமலில்லை.

ஏனைய நறுமணங்கள் போன்றே ரோஜா மலரும் இனிய நறுமணம் கொண்டதே ஆனால் நாற்றமென்பது எப்போதும் நாற்றமே தான் என்பதிலும் மாற்றமில்லை.



கொழும்பில் மேற்படி திட்டம் கைச்சாத்தாகும் அன்றைய தினமே அதற்கிணையாக மேற்கொள்ளப்பட்ட பிரதமரின் சீன விஜயத்திற்கான உடனடிப் பயணம் அந்நாட்டு கைத்தொழில் வலயங்கள் பற்றி ஆய்ந்தறிவதற்கான ஓர் அவதானிப்பு சுற்றுலா என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஒரு நாடகத்தின் காட்சியோட்டம் பின்னோக்கி நகர்வது போன்ற ஓர் பிரமிப்பையே அது ஏற் படுத்துகிறது. 1960 ஆம் ஆண்டினைப் பின்னோக் கிப் பார்த்தால் சிங்கப்பூர் பிர தமர் லீ குவான் யூ ஒரு பெரு நகரம் எனப்படக்கூடிய தனது நாட்டினை சுறுசுறுப்பான தொரு பொருளாதார பரிமாற்ற மையமாக மாற்றுவதற்காக இலங்கையையே எடுத்துக்காட்டாகக் கொண்டு அன்று ஆராய்ந்ததுடன் அதற்குப் பின்னர் அப்போதைய சீனத்தலைவர் டெங்சியா ஓ பிங்கும் இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயங்களை ஆராய் வதற்காக 1980 களில் தூதுக் குழுவொன்றை அனுப்பியது போன்ற விடயங்களை நாம் காணலாம். இப்போதோ நாம் அவர்களது வழிமுறைகளை ஆராய்கிறோம். நாட்டினது கொழும்பு துறைமுக நகர அல்லது சர்வதேச பொருளாதார பரிமாற்ற மையத்திட்டம் பற்றிய அரசாங்கத்தினது நிலைப்பாடு பற்றி பாராளுமன்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரொருவர் எழுப்பிய பிரச்சினைகளின் போது ஏற்பட்ட சூடான வாதப்பிரதிவாதங்கள் பற்றி எமது ஆசிரியருக்கான அரசியல் கண்ணோட்டத்தில் கூந்த வாரம் குறிப்பிடப்பட்டிருந்தது. பிரதமர் உட்பட அனைத்து அமைச்சர்களும் சூடான விவாதங்களில் ஈடுபட கலந்துரையாடல்களில் தீர்க்கமான முடிவெதுவும் எட்டப்படாமலே அது நீண்டுகொண்டு போகும் போது ஜனாதிபதி குறுக்கிட்டு அமைதிப்படுத்தியதுடன் விடயங்கள் சீராகியது மட்டுமல்லாது இவ்விதமாக அமைச்சரவை அங்கீகாரமும் பெறப் பட்டது.


அரசாங்கம் எதுவிடயமாக கைச்சாத்திடவிருக்கிறது என்பது பற்றிய பிரசித்த கலந்துரையாடல்கள் இடம்பெறாதது துரதிர்ஷ்டவசமானதாக இருந்ததுடன் அவர்கள் மத்தியிலான பேச்சுக்களனைத்திலும் முழுமையான சந்தேகமே தொனித்துக்கொண்டிருந்தது மட்டுமல்லாது நம்பிக்கைக் குறைபாடே அங்கே ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தது. மேற்படி திட்டங்கள் மூலம் பொதுவாக மக்களுக்கோ அல்லது தனியாட்களுக்கோ ஏற்படக்கூடிய தாக்கங்கள்- பாதிப்புக்கள் பற்றிய அனைத்து தகவல்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்துவது புதிதாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருந்த தகவலறியும் சட்ட மூலத்தின்கீழ் அத்திட்டத்திற்கான அமைச்சரது பொறுப்பேயாகும். தகவலறியும் உரிமைகளுக்கான ஆணைக் குழுவை ஏற்படுத்து வதற்கு அவ்வித தகவல்கள் எப்படி வழங்கப்படவிருக்கிறது என்பதற்கான வழிகாட்டி அறிவுறுத்தல்கள் வழங்கப் படுவது அவசியமாகிறது. பரந்துபட்ட பல்வேறு தகவல்களும் இலங்கையுடனான வேறு நாடுகளதும் உறவுகளை மிகமோசமாக பாதிப்ப தாயிருக்குமானால் புதிய அரசாங்கத்தின் அடிநாத மாயிருக்கும் வெளிப்படைத்தன்மை மற்றும் நல்லாட்சி கொள்கைகளின் பொருட்டு திட்டத்தை ஏற்பதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடு முன்னரே அத்தகைய பாதகமான தன்மை இலங்கை மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இப்படியான வெளிப்படைத்தன்மை அற்றவிதத்தில் இத்திட்டத்திற்கான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டதன் விளைவுகளுக்கானவிலையை முன்னாள் அரசு செலுத்த வேண்டியிருந்தது. இந்தப்புதிய அரசாங்கமும் அதே தவறை இழைக்கப்போகிறதா? நாட்டு மக்களும் அதனையே ஏற்றுக்கொள்ளப் போகிறார்களா?

புதிய அரசாங்கத்தினால் இடைநிறுத்தப்பட்டிருந்த இந்த துறைமுக நகரத்திட்டத்தின் காரணகர்த்தாக்கள் அதனை மீளவும் ஆரம்பிப்பதற்காக எடுத்துக்கொண்ட இடைவிடாப் பெருமுயற்சியை வெளிப்படையாணதொரு இரகசியமென்றே கூறவேண்டும். மிகப்பிரபல்யமான புகழ் வாய்ந்த முன்னாள் அமெரிக்க இராஜதந்திரியாகிய ஹென்றி கிஸ்ஸிஞ்சர் சீனர்கள் பற்றி அன்று குறிப்பிடு கையில், “ஆண்டாண்டு காலம் காத்திருந்து சாதிக்கும் சீன மக்களது அந்த நீடித்த பொறுமையையும் சகிப்புத் தன்மையையும் ஒப்பற்ற ஓர் எடுத்துக் காட்டு...” என்று கூறிய வார்த்தைகளை எண்ணிப்பார்த்தால் அவரது இக்கூற்று இத் தருணத்தில் பொய்த்துப் போனதாய் அவர்களது பொறு மையற்ற தன்மைக்கான அறிகுறியே வெளிப் படுத்துவதாயிருக்கிறது. நாடுகளுடனான உறவுகளைப் பேணும் பாரிய வேலைத் திட்டங்களின் பொருட்டும் தமது தெரிவுக்கான அமைச்சுப் பிரதிநிதிகளை பயன்படுத்திக் கொள்வதற்கும் வகை தொகையின்றி செலவு செய்கின்றனர்.

தொழில் ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட MBA பட்டதாரியும் சீனக் கம்பனிகளுக்கான உள்ளூர் முகவரும் 80 வயதிற்கு மேற்பட்ட அனுபவஸ் தரும் பிரதமரது பொருளாதார ஆலோசகருமான ஒருவரே பேச்சுவார்த்தைகளின்போது இலங்கைத் தரப்பிற்குப் பொறுப்பேற்றிருந்தார். இலங்கையில் இட பெறும் சீன வேலைத்திட்டங்கள் சம்பந் தமான பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடுவதற்கு சீனத்தூதுவர் அமைச்சரவைக் கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டிருந்தது முன்னேற்பாடற்ற நிகழ்வுகளாகவே இருந்தன. பேச்சுவார்த்தைகளில் அவர்களது போக்கு கடின





மானதாகவே காணப்பட்டதுடன் 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கும் பின்னர் புதிய அரசினால் வேலைத் திட்டம் இடைநிறுத் தப்பட்ட காலப்பகுதிக்கான நட்டஈட்டையும் அவர்கள் கோரியிருந்தனர். இது விடயமாக நட்டஈடு கோருவதற்கு சட்டப்படியான உரிமையெதுவும் சீனர்களுக்கு கிடையாது என்ற சட்டமா அதிபரின் கருத்தினைத் தொடர்ந்து தமது கோரிக்கைகளிலிருந்து அவர்கள் பின்வாங்கியிருந்தனர். ஆனாலும் எமது ஜனாதிபதி மற்றும் பிரதமர் மீது அவர்கள் கொண்டிருக்கும் நல்லெண்ண அடிப்படையிலேயே இந்த விட்டுக் கொடுப்பு அமைவதாகவே எமது அரசு கூறுகிறது. ஒரு நகரு க்குள்ளாகவே அமைகின்ற மற்றுமொரு நகருக்கான சுதந்திர உரிமைப் பிரயோகத்தை தக்க வைத்துக்கொள்ளும் முழுமையான உரிமையையே முன்னைய அரசு சீனர்களுக்கு தாரை வார்த்துக் கொடுத்திருப்பதாக கூறப்படுவதும் தற்போது அதற்குப் பதிலாக குறிப்பிட்ட அந்த நகரப்பகுதியை அத்திட்ட உரிமையாளருக்கும் எந்தவொரு மூன்றாம் தரப்பு முதலீட்டாளருக்கு 99 வருட குத்தகைக்கு கொடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் பிந்திய பேச்சுவார்த்தையூடாக ஓர் அதிசய திருப்பத்தை தாம் ஏற்படுத்தியிருப்பதாக புதிய அரசு கூறுவதும் ஏறக்குறைய ஒரே தன்மையதே. மீளவும் செய்துகொள்ளப்பட்ட அன்றைய அந்த வெள்ளிக்கிழமை உடன்படிக்கைக்குப் பின்னர் விடுக்கப்பட்ட ஊடக அறிக்கையொன்றின்படி 2015 ஆம் ஆண்டிற்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்ப சூழ்நிலையிலும் அத்திட்டத்தை மேற்கொண்டுவரும் அக்கம்பனி 99 வருடங்களுக்கு மேற்பட்ட கால குத்தகைக்கு மற்றுமொரு அல்லது மேலுமொரு காணியைப் பெற்றுக்கொள்ளப் போவதில்லை என்று கூறப்பட்டுள்ளது. திட்டத்திற்கான பிரேரணையில் ஏற்கனவே காட்டப்பட்டதுபோல் அந்தக் காணியை 99 வருடங்களின் பின்னர் இலங்கை அரசு கொள்வனவு செய்வதை விரும்பாத விதத்திலும்கூட 99 வருடங்களுக்கான மற்றுமொரு குத்தகை ஒழுங்கு செய்வதற்கு இடமேற்படாதுஎன்பது தெளிவா?

இத்திட்டத்தின் இக்கட்டான நிலை பற்றிய உண்மை விபரங்களை மறைப்பதன் மூலம் எதிர்கால விளைவு களுக்குள் மக்களை தள்ளி விட அரசு விரும்பாவிடின் காலங்கடந்துவிட்ட இந்த இறுதிக் கட்டத்திலாவது இந்த உடன்படிக்கையின் முழு விபரங்களையும் மக்களுக்கு ஏன் தெளிவுபடுத்தக்கூடாது. இவ்விடயங்கள் எமதுநாட்டின் இறையாண்மை மற்றும் பிரதேச ஒருமைப்பாடு சம்பந் தப்பட்ட விதத்தில் மிகவும் முக்கியமானவையாக இருப் பதால் பொறுப்பற்ற விதமாக கையாளப்படத்தகாதவை என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

கொழும்பு துறைமுக நகர (சர்வதேச பொருளாதார பரிமாற்ற மையம்) திட்டம் இப்போது முடிந்த முடிவாகி விட்ட ஓர் நிஜம். முன்னைய அரசினால் உருவாக்கப்பட்டு சர்வதேச ரீதியில் அது சம்ப ந்தப்பட்டிருக்கும்தற்போதைய நிலையில் புரையோடிப்போன புண்ணாக இருப்பது வெளிப்படையே என்பதுடன் இதற்கு வேறு மாற்று எதுவும் கிடையாதென்பதால் திட்டம் தொடரப்படவேண்டிய ஒன்றாகவே உள்ளது. தற்போது இது மட்டில் இலங்கை முகங்கொடுத்துக்கொண்டிருந்தாலும் பெரிதுபடுத்தாமல் இருக்க வேண்டிய உடனடிப் பிரச்சினைகள் சில: சுற்றாடலிய லாளர் மற்றும் பொறியிய லாளர்களது நச்சரிப்புகள், கரையோரப் பாதுகாப்பு இலாகா முன்வைத்துள்ள 70 நிபந் தனைகள் இவற்றுடன் இத் திட்டம் சம்பந்தமாக தேசிய ஒருமைப்பாட்டு அரசாங்கத்தின் ஒரு பகுதியினருக்கு இருக்கும் தீர்த்து வைக்கப்ப டவேண்டிய சந்தேகங்கள் (உண்மையில் அவர்கள் அறியாதவையும் அறிவதற்கு விரும்பாதவையும்) போன்றவை. திட்ட உடன்படிக்கையின்படி அதனாலாகும் நலன்களின் பெரும் பாகம் சீனர்களுக்கே சாதகமாக இருப்பதாக பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டிருக்கும் பிர த்தியேக சமூகப் பிரதிநிதிகள் கூறுகின்றனர். 2014 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் விசேடித்த அம்சமாக தாம் மாற்றியமைத்திருக்கும் ஒரு சிறப்பு உடன்படிக்கையாக தம்பட்ட மடிக்கும் புதிய அரசு இதனை தனது சொந்த சாதனை ஒன்றாகவே தூக்கி நிறுத்தியுள்ளது. எதேச் சதிகார சக்திகளுக்கு நாடு காட்டிக்கொடுக்கப்பட்டு விலை போகாது என்ற நம்பிக்கையை வளர்த்துக்கொள் வது மட்டுமே எங்களால் முடிந்த விடயமாகும்.



இந்தியாவுடனான உத்தேச எட்கா (ETCA) உடன்படிக்கை கைச்சாத்தாகுமுன் அதற்கான பிரேரணைகளை பாராளுமன்றத்தில் முன்வைக்கப் படுமென்று கடந்த வாரம் பிரதமர் கூறியிருந்தார். அப்படியானால் அதன் உள்ளடக்கம் எதற்காக இன்றும் இரகசியமாக வைக்கப் பட்டுள்ளது.

பொருளாதார ரீதியில் அரசாங்கம் பெருமளவில் கையறு நிலையிலேயே இருந்து கொண்டிருக்கிறது என்பது வெளிப்படையான ஒரு உண்மையே. ஏற்கனவே அது அமிழ்ந்து போயிருக்கும் வெளிநாட்டுக் கடன் சுமையிலிருந்து அது மீளுவதற்குதிக்கு முக்காடிக்கொண்டிருக்கும் நிலையில் மேற்கு நாடுகளிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட ஆதரவும் பெருமளவில் குறைபாடாகவே இருக்கும் காரணத்தினால்சீனாவின்தயவிலேயே அரசு தங்கியி ருப்பதைவிட வேறு வழியுமில்லை. முன்னாள் அரசாங்கமானது உயிரோட்ட மேயில்லாத பயனற்ற வேலைத் திட்டங்களில் நாட்டின் பொருளாதாரத்தை கட்டிப்போட்டு முடமாக்கி வைத்துள்ளது. பெருஞ்செலவில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ்விததிட்டங்களை இயங்கவைப் பதிலும் தொடர்ந்து நடத்திச் செல்வதிலும் தனது முயற்சிகளில் பெரும்பங்கினை புதிய அரசு செலவிட வேண்டிய நிர்ப்பந்தமுள்ளது. எம்மைப் பொறுத்தமட்டில் உயர் பெறுமதியற்ற பெரும்பாலான திட்டங்கள் பீஜிங் நலன்களின் பொருட்டு உரு வாக்கப்பட்டு கேள்விக்கிடமில்லாத விதத்தில் மகிந்த ராஜபக்ஷ நிர்வாகத்தினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டவையுமேயாகும்.

துறைமுக நகரம்... எனும் தலைப்பில் சண்டே லீடர் ஆசிரியர் தலையங்கத்தில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது.

மத்திய வங்கியின் புள்ளி விபரப்படி 2015 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்தக் கடன் தொகையா னது வெளிநாட்டுக் கடனா கிய 3.5ட்ரில்லியன் உள்ள டங்கிய 8.5 ட்ரில்லியன் ரூபாய்களாகும். புதிய அர சாங்கமும் 2015 ஆம் ஆண்டுபதவியேற்றதிலிருந்து பெருமளவில் கடன்பட்ட தாகவே உள்ளது. அதாவது 2015 ஆம் ஆண்டில் 700 பில்லியனும் 2016 ஆம் ஆண்டின் முதற்காலா ண்டுப் பகுதியில் மற்றுமொரு 300 பில்லியனும் கடன்பட்டுள்ளது. மகிந்த ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட இராஜாங்கப் பாவங்களுக்கு பரிகாரமாக எவ்வளவு கடன்படவேண்டியிருந்ததோ? தவறான முகாமைத்துவம், சாதாரண அளவிலான அமைச்சரவை உறுப்பினர்களுக்கான (MPs) தீர்வையற்ற கார் இறக்குமதி அரசாங்கப் பொது சேவையினருக்கு உரிய சம்பள உயர்வு போன்ற வேறு பல செலவீனங்களும் உள்ளன.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, இலங்கை விமான சேவைகள் போன்ற நிறுவனங்களில் நிலுவையிலுள்ள கடன் தொகைகள் 1.4 ட்ரில்லியன் ரூபாய்கள். ஆனாலும் நிதியமைச்சிலோ மத்திய வங்கியிலோ கணக்குகளில் பற்று வைக்கப்படாத “கடன்” தொகைக்கு அரசாங்கத்தின் உத்தரவாதமே பொறுப்பு. மேற்படி நிறுவனங்கள் கடனை செலுத்த முடியாது போகும் இறுதி நிலையில் மட்டுமே அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் கணக்கு சீர் செய்யப்படும். மனதைப் பிழிந்து சிந்தனையை குழப்பும் இந்தவிதமான பெருந்தொகை புள்ளிவிபரக் கணக்குகளின் தரவுகள் வெறுமனே சாதாரண பொது மக்களை மட்டுமல்லாது பொறுப்புமிக்க அனுபவமும் மிக்க அமைச்சர்களையும் ஏன் விவேகமான அமைச்சு அதிகாரிகளையுங்கூட குழப்புபவையாகவே இருக்கின்றன.

பாரிய கடன்களில் சிக்கிக்கொள்ளும் விதத்தில் பயங்கரமானதொரு கடன்பொறியை நோக்கிய ஒரு சறுக்கும் பாதை வழியாக நாடு துரிதகதியில் கீழ்நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் கடந்தகால மற்றும் தற்போதைய அரசியல்வாதிகள் தமது சொந்த அரசியல் நலன்களுக்காக கடன் என்றதொரு துருப்புச் சீட்டை வைத்து ஒருவரையொருவர் சீண்டுவதும் தாக்குவதும் தற்போதைய நிலையில் நெருப்புடன் விளையாடுவது போன்றதேயாகும். இதுவே நாட்டிற்கு உச்சக்கட்ட தீமை விளைவிப்பதாக இருக்கும். விடயங்கள் இப்படியிருக்கும்போது அரசாங்கமோவென்றால் வெளிப்படைத்தன்மையற்ற மற்றும் சொந்த நலன்கள் மட்டில் மறைமுக எதிர்பார்ப்பைக் கொண்டிருப்போர் போன்ற சிலரது கையில் நாட்டின் எதிர்காலத்தை விட்டு வைத்திருப்பதுடன் நாட்டினது பொருளாதாரத்தை சீர்குலைத்து நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதாக ஏனையோரை குற்றஞ்சாட்டும் அதே நேரம் தாங்களும் அதையே தான் செய்து கொண்டுமிருக்கிறார்கள்.

**தமிழில் - யோகர்**

# வடகொரியாவை வதைக்கும் இயற்கைப் பேரிடர்



## 133 பேர் உயிரிழப்பு! 395 பேர் மாயம்



(பியாங்கியாங்)

**வடகொரியாவில் ஏற்பட்ட மழை, வெள்ளத்துக்கு இதுவரை 133 பேர் பலியாகியுள்ளனர். 395 பேர் காணாமற்போயுள்ளனர்.**

வடகொரியா நாட்டில் கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. மழையினால் பல்வேறு இடங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

தாழ்வான பகுதிகள் தண்ணீரில் மிதக்கின்றன.

வெள்ளம் காரணமாக அந்நாட்டு மக்கள் பலத்த இடர்பாடுகளுக்கு உள்ளாகியுள்ளனர்.


வெள்ளத்திற்கு இதுவரை 133 பேர் பலியாகியுள்ளனர். சுமார் 395 பேர் வரை காணாமற்போயுள்ளனர்.

வெள்ளத்தால் சுமார் 35,500 வீடுகள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து 1,07,000 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர் என்றும் மனிதநேய விவகாரங்களுக்கான ஐ.நா. அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த 70 வருடங்களில் இல்லாத பேரழிவை வடகொரியா தற்போது சந்தித்துள்ளது என்றும், மீட்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருவதாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-7-10)

# துறைமுகம், விமான நிலையம் என்பவற்றை இந்தியாவிற்கு தாரைவார்ப்பதற்கு முயற்சி

## மகிந்த அணி எம்.பி. வாசு குற்றச்சாட்டு



இலங்கையின் துறைமுகங்களையும் விமான நிலையங்களையும் இந்தியாவுக்கு தாரைவார்ப்பது இலங்கையின் அரசியலமைப்பை மீறும் என்பது இறையாண்மையை பாதிக்கும் செயலாகும் என கடும் ஆட்சேபனையை மகிந்த அணி ஆதரவு எம்.பி. வாசுதேவ நாணயக்கார வெளியிட்டுள்ளார்.

தெற்காசியாவை தனது கட்டுப்பாட்டுக்குள் தக்க வைத்துக்கொள்ளும் முயற்சிகளை இந்தியா முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக எம்.பி. வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவின் பொருளாதாரத்தை இலங்கைக்கு முன்பதாக விஸ்தரிப்பதில் அதிக நாட்டம் கொண்டு தற்போது நடவடிக்கைகள் முடக்கி விடப்பட்டுள்ளது.

அதேவேளை எமது நாட்டின் துறைமுகங்களையும் விமான நிலையங்களையும் இந்தியாவிற்கு வழங்கவுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

துறைமுகங்கள், விமான நிலையங்கள் என்பன நாட்டின் இறையாண்மை மற்றும் தேசிய பாதுகாப்புடன் தொடர்பு பட்டவையாகும்.

எனவே அவற்றின் நிர்வாகம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும். அதனை வேறொரு நாட்டிற்கு வழங்கக்கூடாது.

இலங்கையில் அவ்வாறு எடுக்கப்படும் நடவடிக்கைகளானது இறையாண்மைக்கும் சுயாதீனத்திற்கும் ஆபத்தாக அமையும்.

அது மட்டுமல்ல இச்செயற்பாடானது எமது நாட்டின் அரசியலமைப்பை மீறுவதாக அமையும். தேசிய பாதுகாப்பிற்கும் பாதகமாக அமையும். மறுசீரமைப்பு என்ற செயலில் அரசு வளங்களையும் நாட்டின் தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்ட முக்கிய பொருளாதார மையங்களையும் இந்தியாவுக்கும் வேறு பல நாடுகளுக்கும் வழங்கும் கொள்கையையே முன்னெடுக்கிறது.

தெற்காசியாவை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வரும் தமது பாதுகாப்பை உறுதிபடுத்திக்கொள்ளும் முயற்சிகளை இந்தியா முன்னெடுக்கின்றது. நேபாளம், பூட்டான், மாலைதீவு மற்றும் இலங்கை என தனது பொருளாதாரத்தை விஸ்தரித்து முழு தெற்காசியாவிலும் தனது பலத்தை பலப்படுத்திக்கொள்ளவே இந்தியா முயற்சிக்கின்றது. இதனை கடுமையாக எதிர்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# சிறைக்கைதிகள் தினக்கொடி ஜனாதிபதிக்கு அணிவிப்பு



சிறையிடப்படுபவர்களின் நலனோம்புகையை நோக்காகக்கொண்டு ஆண்டுதோறும் செப்டெம்பர் மாதம் 12ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் தேசிய சிறைக்கைதிகள் தினத்தையொட்டிய கொடிவாரத்தை ஆரம்பித்து, அதன் முதலாவது கொடியினை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அணிவிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்றது. சிறைக்கைதிகள் நலன்புரி சங்கத்தின் தலைவர் பீ.கே. கிரிவந்தெனியவினால் ஜனாதிபதி கொடி அணிவிக்கப்பட்டது.

சிறையிடப்பட்டுள்ள சிறைக்கைதிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்கு நிதி சேகரிப்பதற்காக இலங்கை சிறைக்கைதிகள் நலன்புரி சங்கத்தினால் வருடாந்தம் இக்கொடி வாரம் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

சிறைக்கைதிகளுக்கான மருத்துவ சிகிச்சை, மூக்குக் கண்ணாடி விநியோகம், துப்புரவேற்பாட்டு வசதிகளை அபிவிருத்தி செய்தல் உள்ளிட்ட நிகழ்ச்சித்திட்டங்கள், சிறைக்கைதிகளின் குடும்பங்களுக்கான பல்வேறு சமூக நலத்திட்டங்களை முன்னெடுத்தல் ஆகியன இதன்மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்நிகழ்வில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நிஷான் தனசிங்க, சங்கத்தின் உப தலைவர் ஓய்வுபெற்ற சிறைச்சாலைகள் ஆணையாளர் லயனல் வீரசிங்க, வளவாளரான சூலா சமரவிக்கிரம ஆகியோர் உள்ளிட்ட நிறைவேற்றுக் குழுவினர் கலந்துகொண்டனர். (இ-7-10)

# இந்தியாவிற்கு எதனையும் வழங்க மாட்டோம் அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் விமான நிலையங்கள், துறைமுகங்களை இந்தியாவிற்கு வழங்கும் முடிவெதனையும் அரசாங்கம் எடுக்கவில்லை.

அது தொடர்பில் வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை என நிராகரிக்கும் அரசாங்கம். "எட்கா" உடன்படிக்கை இறுதி வடிவம் பெற்றதும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும். அதன் பின்னரே கையெழுத்திடப்படுமென்றும் அறிவித்தது.

இது தொடர்பாக அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய அரசாங்கம் எதைச் செய்தாலும் அதனை வெளிப்படைத் தன்மையாகவே மேற்கொள்ளும். நாட்டுக்கும் மக்களுக்கும் அனைத்தையும் அறியத்தருவோம்.

கட்டுநாயக்க விமான நிலையத்தையோ அல்லது இலங்கையின் வேறெந்த விமான நிலையங்களையோ அல்லது துறைமுகங்களையோ இந்தியாவுக்கு வழங்குவதற்கான எந்த முடிவையும் அரசு எடுக்கவில்லை.

அனைத்தும் அரசின் நிர்வாகத்தின் கீழேயே இருக்கும். இது தொடர்பாக வெளியான, வெளியாகிக் கொண்டிருக்கும் செய்திகளில் எவ்விதமான உண்மைகளும் இல்லை.

பொது எதிர்க்கட்சியினர் எனக் கூறிக்கொள்வோரும் அவர்களுக்கு ஒத்து ஊதுபவர்களும் இதுபோன்ற கட்டுக்கதைகளைப் பரப்பி அரசாங்கத்தை நெருக்கடியில் தள்ளுவதற்கு முயற்சிக்கின்றனர்.

இன்றைய இணக்கப்பாட்டு தேசிய அரசாங்கத்தில் நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் விடயங்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை **யாழ்.பிரதேசத்தில்** அச்செழு பிரதேசம், மாவிட்டபுரம், கொல்லன்கலட்டி, மாவைகலட்டி, நகுலேஸ்வரம், கீரிமலை, நகுலேஸ்வரம்கோவில், கறுக்காய் பிரதேசம், வாழைத்தோட்டம், கீரிமலை கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** தோணிக்கல் சிவன் கோவில் பிரதேசம், குட்செட் வீதி, குருமன்காடு சந்தியிலிருந்து குருமன்காடு பிள்ளையார் கோவில் வரை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# கொழும்பில் காசநோய் பரவல்

காற்றுமூலம் பரவும் காசநோய், தற்போது கொழும்பிலுள்ள சில நகர்ப்பகுதிகளில் பரவி வருவதாக, கொழும்பு மாநகர சபையின் தலைமை மருத்துவ அதிகாரி, டாக்டர் ருவான் விஜேமுனி, நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெரிவித்தார். கொழும்பின் வடக்குப் பகுதியிலும் மாளிகாவத்தை பகுதியிலும் இந்நோய் பரவி வருவதாக அவர் தெரிவித்தார். இந்த வருடத்துக்குள் மாத்திரம் குறித்த பகுதியில் இருந்து 20 காசநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் இது கடந்த வருடத்தை விட அதிகமான தொகையாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேலும், இந்நோய் குறித்து முன்னெச்சரிக்கையாக இருக்குமாறு, குறித்த பகுதியிலுள்ள மக்களுக்கு விழிப்புணர்வுகள் வழங்கப்படுவதாகவும் இதற்கான சிகிச்சைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டு வருவதாக்வும் அவர் தெரிவித்தார். பாதுகாப்பற்ற தும்மல், ஒருவர் முகத்தில் மற்றொருவர் மூச்சுவிடுவது போன்ற காரணங்களினாலேயே இந்நோய் பரவும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். காச நோய் என்பது, நுரையீரலை பாதிக்கக்கூடிய நோய் என்றும் உடலில் எந்தவொரு பாகத்தையும் இது தாக்கக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7-10)

## 09.2016 14 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1829 - உதுமானியப்பேரரசு உருசியாவுடன்அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டது. உருசிய- துருக்கியப் போர் முடிவுக்கு வந்தது.
- 1846 - யாங் பகதூர் ராணாவும் அவரது சகோதரரகளும் நேப்பாளத்தின் பிரதமர் உட்பட 40 அரச குடும்பத்தினரைப் படுகொலை செய்தனர்.
- 1847 - மெக்சிக்கோ நகரத்தை "வின்ஃபீல்ட் ஸ்கொட்" தலைமையிலான அமெரிக்கப் படைகள் கைப்பற்றினர்.
- 1886 - தட்டச்சுப் பொறியின் நாடா கண்டு பிடிக்கப்பட்டது.
- 1901 - அமெரிக்க அதிபர் வில்லியம் மக்கின்லி செப் 6இல் இடம்பெற்ற கொலைமுயற்சியின் பின்னர் இறந்தார்.
- 1917 - உருசியா அதிகாரபூர்வமாகக் குடியரசானது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: மாஸ்ட்ரிக்ட் நேச நாடுகளால் விடுவிக்கப்பட்ட முதலாவது டச்சு நகரம் ஆனது.
- 1954 - சோவியத் ஒன்றியம் அணுவாயுதச் சோதனையை மேற்கொண்டது.
- 1959 - சோவியத்தின் லூனா 2 விண்கலம் சந்திரனில் மோதியது. சந்திரனில் இறங்கிய மனிதனால் அமைக்கப்பட்ட முதலாவது விண்கலம் இதுவே.
- 1960 - எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு (ஓப்பெக்) உருவாக்கப்பட்டது.
- 1982 - லெபனானின் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பசீர் ஜெமாயெல் படுகொலை செய்யப்பட்டார்.
- 1984 - ஜோ கிட்டிங்கர் வளிமக் கூண்டில் அத்திலாந்திக் பெருங்கடலைத் தாண்டிய முதல் மனிதர் என்ற பெருமையைப் பெற்றார்.
- 1999 - கிரிப்பட்டி, நௌரு, டொங்கா ஆகியன ஐநா அவையில் இணைந்தன.
- 2000 - எம்எஸ் டொஸ் கடைசித் திருத்தம் வெளியிடப்பட்டது.
- 2000 - விண்டோஸ் மில்லேனியம் வெளியிடப்பட்டது.
- 2003 - சுவீடனில் இடம்பெற்ற மக்கள் வாக்கெடுப்பில் யூரோ நாணயத்தை ஏற்றுக் கொள்ளும் தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.
- 2003 - ஐரோப்பிய ஒன்றியத்தில் எசுத்தோனியா இணைவதற்கு அந்நாட்டில் இடம்பெற்ற பொது வாக்கெடுப்பில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.
- 2005 - நடிகர் விஜயகாந்த் தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் என்ற புதிய அரசியற் கட்சியை ஆரம்பித்தார்.
- 2008 - உருசியாவின் ஏரோபுளொட் விமானம் பேர்ம் கரை விமான நிலையத்தில் விபத்துக்குள்ளாகியதில் அனைத்துப் 88 பயணிகளும் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

- 1853 - சேர் பொன் அருணாசலம், இலங்கையின் தேசியத் தலைவர். (இ. 1924)
- 1939 - சோ. பத்மநாதன், ஈழத்து எழுத்தாளர்.
- 1965 - திமித்ரி மெட்வெடெவ், ரஷ்யாவின் மூன்றாவது அதிபர்.
- 1973 - நாஸ், அமெரிக்க ராப் இசைக் கலைஞர்.

### இறப்புகள்

- 407 - யோவான் கிறிசோஸ்தோம், பைசாந்தியப் பேராயர் . (பி. 347)
- 1852 - ஆர்தர் வெல்லஸ்லி, முதலாம் வெல்லிங்டன் பிரபு, ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர். (பி. 1769)
- 1965 - ஜே. டப்ளியு. ஹர்ண், ஆங்கிலேயத் துடுப்பாட்ட வீரர். (பி. 1891)
- 2015 - கௌதம நீலாம்பரன், தமிழக எழுத்தாளர் . (பி. 1948)
- 2015 - இந்திக குணவர்தனா, இலங்கை இடதுசாரி அரசியல்வாதி. (பி. 1943)

### சிறப்பு நாள்

- அனைத்து நாடுகள் கலாசார ஒற்றுமை நாள்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 40 | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 85 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 65 | 70 | 120 | 100 |
| தக்காளி | 60 | 50 | 55 | 50 | 80 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 50 | 70 | 100 | 60 | 80 |
| கோவா | 60 | 80 | 55 | 80 | 80 | 80 |
| கரட் | 80 | 120 | 80 | 100 | 120 | 100 |
| பூசணி | 40 | 40 | 20 | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 40 | 20 | 40 | 50 | 50 |
| வாழைக்காய் | 100 | 80 | 60 | 50 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 85 | 100 | 100 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 80 | 100 | 60 | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 40 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | — | 120 | 120 | 100 |
| பயற்றங்காய் | 40 | 80 | 20 | 50 | 40 | 60 |
| லீக்ஸ் | 140 | 80 | 80 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 40 | 40 | 35 | 40 | 40 | 40 |
| கறிமிளகாய் | 120 | 100 | 80 | 120 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 160 | 200 | 140 | 200 | 120 | 160 |
| போஞ்சி | 200 | 200 | 140 | 180 | 200 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 20 | 30 | 50 | 40 | 50 |
| கீரை - 1பிடி | 40. | 20 | 30 | 40 | 20 | 30 |
| தேசிக்காய் | 250 | 300 | 220 | 280 | 200 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-30 | 50 | 20-30 | 40 |
| இராசவள்ளி | — | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 80 | — | — | 180 | 160 | 140 |
| முள்ளங்கி | 60 | — | 25 | 40 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 30 | 50 | 30 |
| வல்லாரை | 15 | 10 | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 40 | 30 | 30 | 50 | 80 | 70 |

# தமிழ் சினிமா வரலாறு

## ராமேஸ்வரம் புயலில் சிக்கி ஜெமினி, சாவித்திரி உயிர் தப்பினர்! 250

இரவு 8 மணிக்கு நான் படுத்துத் துங்கி விட்டேன்.

இவ்வாறு ஜெமினிகணேசன் கூறியதும் நடிகை சாவித்திரி குறுக்கிட்டு அதன் பிறகு நடந்ததை நான் கூறுகிறேன் என்று கூறி பேட்டியைத் தொடர்ந்தார்.

### புயலின் பயங்கரம்

இரவு 8.30 மணிக்கு புயல் அடிக்க ஆரம்பித்தது. ஓ...! என்ற சத்தத்துடன் காற்று சுழன்று சுழன்று அடித்தது. காற்று இவ்வளவு பலமாக இருக்கிறதே என்ன ஆகுமோ! என்று நானும் வைத்தியர்களும் கவலையோடு பேசிக்கொண்டோம்.

இரவு முழுவதும் நான் துங்கவில்லை.வரவர புயல் அதிகமாகியது. அவர் (ஜெமினிகணேசன்) விழித்துக்கொண்டார். அதிகாலை 3 மணி இருக்கும். நரிகள் கூட்டமாக சேர்ந்து ஊளையிட்டன. அதிகாலை நேரத்தில் பயங்கர சூறாவளியுடன் நரிகளின் ஊளைச் சத்தமும் சேர்ந்து எங்களை நடுங்கச் செய்தன. சினிமாவில் வருவது போன்ற பயங்கர சம்பவம் வாழ்க்கையிலும் நடக்கிறதே என்று எண்ணினேன்.


அதிகாலை 3.30 மணிக்கு புயல் உச்சகட்டத்தை அடைந்தது. 4.30 மணி வரையில் வார்த்தையால் விபரிக்க முடியாத அளவுக்கு பயங்கர புயல் வீசியது. ராமேஸ்வரம் ரயில் நிலையத்தின் அருகில் உள்ள பிரயாணிகளின் பங்களாவில் நாங்கள் தங்கி இருந்தோம். புயலில் அதன் கூரைகள் பறந்து விட்டன.

ஒருவாறாக பொழுது விடிந்தது. நாங்கள் பங்களாவுக்கு வெளியே வந்தோம். எங்கும் ஒரே வெள்ளக்காடாக கிடந்தது.

நாங்கள் 1,000 ரூபா கொண்டு போயிருந்தோம். அதை அங்கு வீடு வாசல் இழந்து தவித்தவர்களுக்கு பகிர்ந்து கொடுத்தோம். வீடுகள் இடிந்து விழுந்ததால் பலர் காயம் அடைந்து கிடந்தனர். அவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு போய் சேர்க்க என் வீட்டுக்காரர் உதவினார். அன்று முழுவதும் ராமேஸ்வரத்தில் தங்கி இருந்தோம்.

### ரயில் வண்டி

25ஆம் திகதி காலை எழுந்ததும் எப்படி ஊர் திரும்புவது என்ற கவலை ஏற்பட்டது. ராமேஸ்வரத்தில் ஒரு ரயில் என்ஜின் மட்டும் நின்று கொண்டு இருந்தது. அதில் ஒரே ஒரு



ராமேசுவரத்தில் புயலில் சிக்கி உயிர்தப்பிய ஜெமினி கணேசனும், சாவித்திரியும் மகள் விஜயாவுடன் காமராஜரை சந்தித்தனர். புயல் நிவாரண நிதிக்கு ரூ.5 ஆயிரத்தை காமராஜரிடம் விஜயா கொடுத்தபோது எடுத்த படம்.

பெட்டியை மட்டுமாவது சேர்த்து எங்களை பாம்பனில் கொண்டு போய் விடும்படி நாங்கள் சாரதியிடம் கேட்டுக் கொண்டோம்.

ரயிலை ஓட்டுவதற்கு நிலக்கரி இல்லை. நான் பாம்பன் போய் கொண்டு வருகிறேன் என்று கூறிவிட்டு அவர் பாம்பன் போனார். வெகு நேரம் ஆகியும் அவர் திரும்பி வரவில்லை.

### கக்கன் வந்தார்

மாலை 4 மணிக்கு பாம்பனில் இருந்து ரயில் வண்டி வந்தது. அதில் அமைச்சர் கக்கன் வந்தார். புயலில் வீடு வாசல் இழந்தவர்களுக்கு சாப்பாடு பொட்டலங்கள் கொடுத்தார். விமானத்திலிருந்தும் சாப்பாடு பொட்டலங்கள் போட்டார்கள்.

26ஆம் திகதி காலை 8.30 மணிக்கு அமைச்சர் கக்கன் வந்த ரயிலில் ஏறி நாங்கள் பாம்பன் போய் சேர்ந்தோம். அங்கிருந்து மோட்டார் படகில் ஏறி மண்டபத்தை அடைந்தோம் . மண்டபத்தில் எங்களுக்காக கார் காத்து இருந்தது. அதில் ஏறி மதுரை சென்றோம். மாலையில் விமானத்தில் ஏறி சென்னை வந்து சேர்ந்தோம்.

இவ்வாறு சாவித்திரி கூறினார்.

### காமராஜரிடம் நிதி

புயல் விழுங்கிய தனுஷ்கோடி சீரமைப்புக்காக நிதி திரட்டப்பட்டது. ஏராளமானவர்கள் நன்கொடை வழங்கினார்கள். (தொடரும்)

தன்னுடன் வேகமாக ஓடி வெற்றிகாண போட்டிக் குதிரைகள் இருப்பதால்தான், ஒரு குதிரை வேகமாக ஓடுகிறது. – ஓவிட்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்களைக் காப்பாற்றுவதை விட அரசைக் காப்பாற்றுவதா முதற்பணி?

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்னரும் இந்த நாட்டில் ஒரு பெரும் தமிழின அழிப்பு நடவடிக்கை தொடர்ந்தது.

அப்போது ஆட்சிப்பீடத்தில் இருந்தவர்கள் எதுவும் செய்வார்கள் என்ற ஏக்கம் தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமன்றி தென்பகுதி மக்களிடமும் இருந்தது என்பது உண்மையே.

இத்தகையதோர் சூழ்நிலையில்தான் ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. உலக நாடுகளின் ஊக்கமும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க போன்றவர்களின் கூட்டும் சேர தமிழ் மக்கள் வழங்கிய ஆதரவோடு மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி ஆகினார்.

எனினும் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி ஆனதும் ஒரு பெரிய பிரச்சினை முடிந்து போனதாக அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் உணர்ந்து கொண்டமைதான் மிகப்பெரும் துரதிர்ஷ்டம் ஆகிற்று.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இருந்து தமிழ் மக்கள் நியாயமான விடயங்களை எதிர்பார்த்தனர். இருந்தும் அவை இன்றுவரை சாத்தியமற்றே காணப்படுகின்றது.

உண்மையில் ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மைத்திரிபால சிறிசேனவுடன் உடன்படிக்கை ஒன்றை செய்திருக்க வேண்டும். அவ்வாறானதொரு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தால், தமிழ் அரசியல் கைதிகள் இன்று விடுதலை பெற்றிருப்பர். இதுபோல பல்வேறு பிரச்சினைகளுக்கு முடிவுகட்டியிருக்க முடியும்.

இருந்தும் அதை நாம் செய்யாதது எங்கள் அரசியல் பலவீனம் என்றே கூறவேண்டும்.

ஏனெனில் இதுவிடயத்தில் முஸ்லிம் அரசியல் தலைமை மிகவும் நுணுக்கமாகச் செயற்பட்டதுடன் இன்று அமைச்சர் றிசாத் பதியுதீன் மன்னார் மாவட்டத்தில் இருந்துகொண்டு செய்கின்ற அத்தனை இராஜதந்திரங்களும் ஜனாதிபதித் தேர்தலின் போது அவர்கள் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கை தான்.

என்ன செய்வது எங்களிடம் எதிலும் இராஜதந்திர நுட்பம் இல்லை என்பதை நாம் ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

இருந்தும் மற்றவர்களிடம் படித்தல் என்ற விடயத்திலேனும் நாம் கவனம் செலுத்தியிருக்கலாம். ஆனால் எங்கள் தமிழ் அரசியல் தலைமையானது தமிழ் மக்களைக் காப்பாற்றுவது என்பதை விட தற்போதைய அரசைக் காப்பாற்றுவதே தனது கடமை என்பது போல செயற்படுவதைக் காணும் போது இதென்ன நாசகாரம் என்று எண்ணத் தோன்றுகிறது.

நல்லாட்சிக்கு எதிராக நாம் அகிம்சை வழிப் போராட்டம் நடத்துவது போல ஆகாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை நினைக்கிறது.

தாம் அகிம்சை வழிப் போராட்டம் நடத்தினால் அதனைப் பயன்படுத்தி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்துவிடுவார் என்று கூட்டமைப்புக் கூறுவது மகா தவறு.

மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிக்கு வருவதைத் தடுக்கின்ற பொறுப்பு தற்போதைய ஜனாதிபதி மைத்திரியிடமும் பிரதமர் ரணிலிடமுமே உள்ளது.

முன்னைய ஆட்சியில் எத்தனையோ சட்ட விரோதச் செயல்கள் உள்ளதாக அரசு கூறும்போது; புதிய அரசியல் கட்சியை மகிந்த ஆரம்பித்தால் அவரின் சாயத்தை வெளுக்கச் செய்வேன் என்று ஜனாதிபதி மைத்திரி கூறும் போது, மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வந்து விடுவார் அதற்கு நாம் விடக்கூடாது என்று நம் அரசியல் தலைமை நினைப்பது, அவ்வாறு கருத்துரைப்பது தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான ஒன்றே அன்றி வேறில்லை எனலாம்.

எனவே தமிழ் அரசியல் தலைமையின் முதல் பணி தமிழ் மக்களை பாதுகாப்பதாகவே இருக்கும். இதற்காக அகிம்சை வழிப் போராட்டத்தை முன்னெடுப்பது தவிர்க்க முடியாதது.

இந்நிலையில் இந்தத் தார்மீக கடமையை உணர்ந்து இனியும் விட்டால் நிலைமை மோசமாகும் என்பதை அறிந்து தமிழ் மக்கள் பேரவை எதிர்வரும் 24–ம் திகதி அகிம்சை வழியில் முன்னெடுக்கவுள்ள மாபெரும் பேரணிக்கு தங்கள் பூரண ஆதரவை வழங்குவது தர்மத்தை நிலைநாட்டும் உன்னத கடமையாகும்.

# பௌத்தம் பாதுகாக்கப்படும்

## ஜனாதிபதி மைத்திரி வாக்குறுதி

பௌத்த மதம் என்ற ரீதியில் திட்டமிடப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் ஆண்டாக எதிர்வரும் ஆண்டினைத் திட்டமிடுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தேரவாத பௌத்தத்தின் தலைமையகமாக இலங்கையை மாற்றுவதற்காக நடைமுறைப்படுத்தப்படும் மகா தர்ம பரப்புரை நிகழ்ச்சித்திட்டமானது, முப்பீடங்களின் தேரர்கள் உள்ளிட்ட மகாசங்கத்தினரின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின் கீழ் எதிர்வரும் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுமென ஜனாதிபதி நேற்று முன்தினம் பிற்பகல் அம்பலாங்கொடை பொல்வத்த ஸ்ரீஅக்காராம விகாரையில் இடம்பெற்ற புண்ணிய நிகழ்வின்போது தெரிவித்தார்.

அமரபுரம் மகா நிக்காயாவின் கல்யாணிவன்ச பீடத்தின் அநுநாயக்கர் பதவியில் அமர்த்தப்பட்ட கலை பட்டதாரி சங்கைக்குரிய நிந்தானே வஜிரஞான நாயக்க தேரருக்கு உறுதிப்பத்திரம் வழங்கும் பொருட்டு இந் நிகழ்வு நடைபெற்றது.

புதிதாக அநுநாயக்க தேரருக்கு சன்னஸ் பத்திரம் மற்றும் விஜினி பத்திரம் ஆகியவற்றை இதன்போது ஜனாதிபதி வழங்கி வைத்தார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி, கல்விகற்ற பௌதத தேரர்களின் சேவையினை இன்று எமது நாடு பெரிதும் எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

வாணிப உலகில் நாளுக்கு நாள் பாதிப்புக்குள்ளாகும் சமூகத்தை குணப்படுத்துவதற்கான ஒரேயொரு வழியாக பௌத்த சிந்தனை உள்ளதென்பதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, எதிர்வரும் ஆண்டில் இலங்கையில் நடைபெறும் சர்வதேச வெசாக் உற்சவத்தினை வெகு விமர்சையாக கொண்டாடுவதாகவும் இதற்கு உலகின் அனைத்து பௌத்த நாடுகளினதும் தலைவர்களுக்கு அழைப்பு விடுப்பதாகவும் தெரிவித்தார். (இ-7-10)

# காவிரியால் கலவரபூமியானது கர்நாடகம்; வன்முறையாளர்களை கண்டதும் சுட உத்தரவு

(டில்லி)

தமிழர்களுக்கு எதிரான வன்முறைப் போராட்டங்கள் காரணமாக கர்நாடகத்தில் பதற்றம் நீடிக்கிறது. வன் முறையாளர்களை கண்டதும் சுட உத்தரவிடப்பட்டுள் ளது.

காவிரியில் இருந்து தமிழ்நாட்டுக்கு 15 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்து விடுமாறு உச்ச நீதிமன்றம் கடந்த 5 ஆம் திகதி உத்தரவிட்டதால் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து கர்நாடாகாவில் கன்னட அமைப்புகள் தொடர் போராட்டம் நடத்தின.

இந்த சூழ்நிலையில் நேற்று முன்தினம் நண்பகல் உச்ச நீதி மன்றம் காவிரியில் இருந்து தமிழ் நாட்டுக்கு 20ஆம் திகதி வரை தினமும் விநாடிக்கு 12 ஆயிரம் கனஅடி தண்ணீரை திறந்து விட வேண்டும் என்று புதிய உத் தரவு ஒன்றை பிறப்பித்தது. இது கன்னட அமைப்பினரிடம் மேலும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. உடனடியாக அவர்கள் வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டனர்.

பெங்களூர், மைசூர், மாண்டியா, ஹாசன், யாதகிரி, தாவணகெரே, விஜயபுரா, தார்வாட் உட்பட கர்நாடகத்தின் பல்வேறு பகுதிகளில் வன்முறை வெடித்தது. கல்வீச்சு, தீவைப்பு சம்பவங்கள் அடுத்தடுத்து நடந்தன. இதையடுத்து பதற்றம் உருவானதால் பெங்களூர் உட்பட பல பகுதிகளில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இருப்பினும் கன்னட அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கும்பல், கும்பலாக வந்து தாக்குதல்களில் ஈடுபட்டனர். பெங்களூர் பேருந்து நிலையத்தில் இருந்த தமிழ்நாட்டை சேர்ந்தவரின் உணவகம் அடித்து நொறுக்கப்பட்டது. பொலிஸாரால் கலவரக்காரர்களை கட்டுப்படுத்த இயலவில்லை.

இதேவேளை நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பெங்களூர் பொலிஸ் ஆணையா மேகரிக் மற்ற உயர் பொலிஸ் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். தமிழர்கள் வாழும் பகுதிகளில் கூடுதல் பாதுகாப்பு அளிக்கப்பட்டு இருப்பதாகவும், தேவைப்பட்டால் கூடுதல் இடங்களில் ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்படும் என்றும் கூறினார்.

இதற்கிடையே ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ள 16 பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் யாராவது வன்முறையில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். கலவரக்காரர்களை கண்டதும் சுட்டுத்தள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

இன்று புதன்கிழமை மாலை வரை இந்த ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பண்டவப்புரா, மாண்டியா, மைசூர் பகுதிகளிலும் சில இடங்களில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

காவிரியில் தண்ணீர் திறந்து விடப்படும் 4 அணைப் பகுதிகளிலும் ஊரடங்கு கொண்டு வரப்பட்டுள்ளது. (இ-7)

# அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது முடக்கப்படுகின்றன

## பந்துல குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் தற்போது அபிவிருத்தி நடவடிக்கைகள் பாதிப்படைந்திருப்பதாகவும், கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது முடக்கப்பட்டுள்ளதாக முன்னாள் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வீதி அபிவிருத்திகளுக்காக வேலையில் ஈடுபட்டிருந்த வாகனங்கள் தற் போது வீதியோரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதனால் மக்களுக்கு பெரிதும் பாதிப்பாக உள்ளதாகவும் குற்றம் சுமத்தினார்.

மேலும் புகைத்தல் தொடர்பான பொருட்களுக்கு 20 ரூபாவை வரியாக சேர்த்தால் இதிலிருந்து கிடைக்கும் வருமானங்களே ஏராளம்.

இதைக் கொண்டு அபிவிருத்தியை அடைய முடியும், ஜனாதிபதி இன்று நினைத்தால் கூட இந்த விடயம் சாத்தியப்படும். ஆனால் ஜனாதிபதி இதை செயற்படுத்துவாரா என பந்துல கேள்வியெழுப்பினார்.

கடந்த கால கடனை அடைப்பதற்காகவே தற்போதைய நல்லாட்சி வரிகளை அதிகரித்துள்ளதாக கூறி வருகின்றது.

ஆனால் இந்த அரசு வரியைக் கூட்டினாலும் வருமானம் 220 பில்லியனே உள்ளது. ஆனால் கடந்த காலத்தில் 275 பில்லியன் வருமானம் காணப்பட்டது.

ஆகவே இந்த வரி அதிகரிப்பு என்பது பொருத்த மற்ற ஒன்று எனவும் தெரிவித்தார். (இ-7-10)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### அறிவால் மேம்படுங்கள்



✦ கடவுள் மீது பக்தி செலுத்துங்கள். எதிலும் மூடத்தனமாக இருக்காதீர்கள். அறிவால் வாழ்வில் மேம்படுங்கள்.

✦ பனி, தண்ணீர், நீராவி மூன்றும் ஒரே பொருளின் வெவ்வேறு வடிவங்களே. ஒரே கடவுள் பல வடிவில் இருக்கிறார்.

✦ உலக விடயங்களில் இருந்து மனதை விடுவிக்காமல் கடவுளை சென்றடைய முடியாது.

✦ முத்தின் வளர்ச்சிக்கு சிப்பி உதவுவது போல சடங்கு, சம்பிரதாயம் ஆன்மிக வளர்ச்சிக்கு உதவுகின்றன.

✦ அடிக்கடி கோபத்திற்கு ஆளாவதால் நல்லது, கெட்டதை பகுத்தறியும் தன்மை இல்லாமல் போகும்.

# மெலிஞ்சிமுனை இருதயராஜாவை வீழ்த்தி சம்பியனாகியது துறையூர் ஐயனார்



தீவக லீக்கின் அனுமதியுடன் ஊர்காவற்றுறை அண்ணா சன சமூக நிலையத்தின் ஆதரவுடன் ஊர்காவற்றுறை அண்ணா முன்னேற்ற விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகம் islands king football champions பட்டம் பெற்று முதல் இடத்தினை பெற்றுக் கொண்டுள்ளது.

முதலாம் இடத்திற்கான வெற்றிக்கேடயத்தினை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் வழங்கி கௌரவித்ததுடன், விளையாட்டில் வெற்றிபெற்ற அனைவருக்கும் பதக்கம் அணிந்தும் கௌரவித்தார்.

கடந்த மூன்று தினங்கள் (10-11-12.09.2016) நடைபெற்ற போட்டியில் நேற்று முன்தினம் 12.09.2016 இறுதிப் போட்டிக்கு மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழகமும், துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகமும் தெரிவு செய்யப்பட்டன. விறுவிறுப்பான ஆட்டத்தின் இதில் முதல் பாதி ஆட்டத்தில் துறையூர் ஐயனார் அணி ஒரு கோல்களைப் போட்டது. இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணியும் கோல்கள் அடிக்க முனைந்தும் எதுவித கோல்களும் போடாத நிலையில் போட்டி நிறைவில் துறையூர் ஐயனார் அணி 0:1 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று islands king football champions பட்டத்தினையும், 25000 ரூபா பெறுமதியான பணத்தினை யும், வெற்றிக்கேடயத்தினையும் பெற்றுக் கொண்டது. சிறந்த விளையாட்டு வீரனாக துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகத்தினை சேர்ந்த தனபாலசிங்கம் விதுசன் தெரிவு செய்யப்பட்டார். இரண்டாமித்தினை பெற்ற மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக்கழகத் திற்கு வெற்றிக்கேடயமும், 15000 ரூபா பணப்பரிசிலும் வழங்கப்பட்டது. (க)

## இறுதிப்போட்டியில் கொக்குவில் A,B

கொம்மாந்துறை விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 6 பேர் 5 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் கொக்குவில் A,B விளையாட்டுக்கழகம் முதலாவது போட்டியில் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக்கழகத்தையும் இரண்டாம் போட்டியில் இணுவில் கலை ஒளி விளையாட்டு கழகத்தையும் அரையிறுதியில் பொற்பதி இந்து விளையாட்டுக்கழகத்தையும் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு நுழைந்துள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# தீருவில் விளையாட்டுக்கழக சுழல் கிண்ண உதைபந்து



வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழகம் வருடா வருடம் நடத்தி வரும் சுழல் கிண்ணத்திற்கான உதைபந்து போட்டிகள் தற்பொழுது வல்வை தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதன் வரிசையில் அண்மையில் நடைபெற்ற லீக் பிரிவிற்கான ஆட்டத்தில் வல்வை உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. ஆட்ட நேர முடியும் வரை இரு அணிகளும் சமபலத்துடன் காணப்பட்டதுடன் கோல்கள் எதனையும் பெறாத காரணத்தால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (க)

# தேசிய மட்ட கபடிப் போட்டிகள் வடக்கு பாடசாலைகள் வெற்றி



தேசிய மட்ட கபடிப் போட்டிகள் - வட கிழக்கு பாடசாலை அணிகள் சாதனை வெற்றி. மாத்தறை பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற தேசிய மட்ட கபடி போட்டியில் 18 வயது ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை மன்னார் கட்டை அடம்பன் RCTMS பாடசாலை பெற்றது. 2 ஆம் இடத்தை கேகாலை புனித மரியாள் பாடசாலையும் 3 ஆம் இடத்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் பெற்றுக்கொண்டது.


15 வயது பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையும் 2 ஆம் இடத்தை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் 3 ஆம் இடத்தை ஹரண தக்சிலா மகாவித்தியாலயம் பெற்றது.

19 வயது ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தை கேகாலை புனித மரியாள் வித்தியாலயமும் 2 ஆம் இடத்தை மட்டக்களப்பு கிரான் மத்திய மகா வித்தியாலயமும் 3 ஆம் இடத்தை அநுராதபுரம் மதுலாகம மகாவித்தியாலயமும் தமதாக்கின.

19 வயது பெண்கள் பிரிவு முதலாம் இடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையும் 2 ஆம் இடத்தை மட்டக்களப்பு பளுகாமம் மகாவித்தியாலயமும் 3 ஆம் இடத்தை ஹொரண தக்சிலா மகா வித்தியாலயம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மொத்தம் 12 வெற்றியில் 7வெற்றியை தமிழ் பாடசாலைகள் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அதிலும் வடமாகாண பாடசாலை அணிகள் 5 வெற்றியையும் கிழக்கு மாகாண பாடசாலை அணிகள் 2 வெற்றியையும் பெற்றமை சிறப்பம்சமாகும். (க)

# பத்மநிதர்சன் வெற்றிக்கோல்; யாழ். பல்கலை சம்பியன்








அனைத்து பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான 12 ஆவது விளையாட்டு நிகழ்வில் இடம்பெற்ற உதைபந்தாட்ட இறுதி ஆட்டத்தில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணிகள் மோதின. ஆட்ட நேரமுடிவில் யாழ்.பல்கலைக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று 2016 இன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. யாழ்.பல்கலைக்கழக சார்பில் வெற்றிக் கோலினை பத்மநிதர்சன் பெற்றுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# நீதிமன்ற வளா...

படி மூவரும் கைது செய்யப்பட்டு கொழும்பு அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

எஸ்.கேதீஸ்வரன், ரி.அஜந்தன், வி.அகிலன் ஆகிய மூவரையுமே கொழும்பு குற்றப் புலனாய்வு துறையினர் கைது செய்து வானில் அழைத்து சென்றுள்ளனர். இதன்போது ஏன் கைது செய்கின்றீர்கள் என மற்றவர்கள் வினவிய போது விசாரணைக்காக பிடிப்பதாக வெள்ளை வானில், வந்த கொழும்பு குற்றப்பிரிவினர் கூறியுள்ளனர். இதனால் பதற்றமடைந்த ஏனையவர்கள் அந்த இடத்தில் இருந்து பயந்து விலகியுள்ளனர்.

எனினும் நீதிமன்றத்தின் உரிய அனுமதிபெறப்பட்டே மூவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. நீதிமன்ற தாக்குதல் குறித்து மூவர் மீதும் மேலும் அறிக்கை தாக்கல் செய்யப்படவுள்ளதாக கூறப்பட்டு நீதிமன்றில் கைது செய்வதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

கடந்த மே மாதம் 20 ஆம் திகதி வித்தியாவின் படுகொலை சம்பவத்தின் பின்னர் நடைபெற்ற கலவரத்தின் போது, யாழ்.நீதிமன்ற கட்டட தொகுதி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்றைய தினம் யாழ்.நீதிமன்றில் நடைபெற்றதுடன், யாழ்.நீதிவான் நீதிமன்றில் குறித்த வழக்கு விசாரணைக்காக 74 பேர் ஆஜராகியிருந்தனர்.

வழக்கு விசாரணை நடைபெற்று வழக்கிற்கு சமுகமளிக்காத நபர் ஒருவருக்கு நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், ஏனையோரின் வழக்கு விசாரணையினை எதிர்வரும் நவம்பர் மாதம் 28 ஆம் திகதி யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.சதீஸ்தரனால் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

மேற்படி வழக்கு நிறைவடைந்த பின்னர் 74 பேரும் நீதிமன்றத்திற்கு வெளியில் வரும் போதே கொழும்பு குற்றப் பிரிவினர் நீதிமன்றத்தின் முன்பாக வைத்து வெள்ளைவானில் மூவரை பிடித்து சென்றுள்ளனர். (செ-4-9)

# முத்தமிழ் விழா...

ஈழத்தமிழ் மக்களின் பாரம்பரிய கலை, கலாசார பண்பாடுகள் அழிவடைந்து செல்லாமல் இருப்பதற்காகவும் அவற்றை வரலாற்று ரீதியில் திறம்பட வெளிப்படுத்துவதற்காகவும் தமிழ் மக்கள் பேரவையின் கலை, கலாசார உப குழுவின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாநகரில் நடைபெறவுள்ள முத்தமிழ் விழா நான்கு வகையான நிகழ்வுகளை கொண்டதாக 3 நாட்களுக்கு காலை, மாலை நிகழ்வுகளாக நடைபெறவுள்ளன.

அந்த வகையில் அரங்க நிகழ்வுகள் தினமும் மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை பாட்டாளி விளையாட்டரங்கிலும் கள நிகழ்வுகளான வடமோடி, தென்மோடி கூத்துக்கள், புலிக் கூத்து, பறைச்சமர், சிறுவர் கலை விளையாட்டு நிகழ்வுகள், தமிழர் உணவுகள், ஓவியக்காட்சி, குறும்படம் மற்றும் ஆவணப்படக் கண்காட்சிகள் உள்ளடங்கிய பல கள நிகழ்வுகள் தினமும் மாலை 5 மணி முதல் நள்ளிரவு வரை பாட்டாளி விளையாட்டரங்கத்தை சூழவுள்ள கோட்டை சிறுவர் பூங்கா பகுதியிலும் காலை உள்ளக நிகழ்வான தமிழ் சார்ந்த ஆய்வரங்கம் மட்டு மாநகராட்சி மன்ற கேட்போர் கூடத்திலும் காலை நிகழ்வாக பல்வேறுபட்ட அருகிவரும்தொன்மை வாய்ந்த தமிழ் கலைஞர்களுக்கிடையிலான கலந்துரையாடல்கள் (அண்ணாவியார்கள், மருத்துவிச்சிகள், புலவர்கள் போன்றோர்) மட்டு வாவிக்கரை மரத்தடி நிழலிலும் நடைபெறவுள்ளது.

முத்தமிழ் விழாவின் முதலாம் நாள் நிகழ்வில் தமிழர் கலை கலாசாரத்தை சித்தரிக்கும் பலவித ஊர்திகள்,நடனங்களுடனான பண்பாட்டு ஊர்வலம் மாலை 4 மணிக்கு கல்லடி பாலத்தில் இருந்து ஆரம்பமாகி பாட்டாளி விளையாட்டரங்கை அடையவுள்ளது.

அதனை தொடர்ந்து பிரதான நிகழ்வுகளான கிராமிய நடனங்கள், மிருதங்க இசை, வில்லுப் பாட்டு வயலின் இசை, பரதநாட்டியம், பட்டிமன்றம், இசைவிருந்து என்பன மாலை 5 மணியளவில் பாட்டாளி விளையாட்டரங்கம் அதனை சூழவுள்ள மட்டு வாவிகரை, சிறுவர் பூங்கா, கோட்டைப்பகுதியில் அமைந்துள்ள சுவாமி விபுலானந்தர் அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் மா. உதயகுமார ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

முத்தமிழ் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகளான கிராமிய நடனம், புல்லாங்குழல் இசை, கவியரங்கு, பரதநாட்டியம், நாடகம், இசைவிருந்து என்பன மாலை 5 மணியளவில் பேராசிரியர் வித்தியானந்தன் அரங்கில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பேராசிரியர் சி.மௌனகுரு, சிறப்பு விருந்தினராக மட்டக்களப்பு முன்னாள் மேலதிக அரச அதிபர் ரி.அருணகிரிநாதர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

முத்தமிழ் விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வுகளான கிராமிய நடனம், வீணாகான வாத்திய விருந்து, இசைவிருந்து, பரதநாட்டியம், நாதஸ்வர கானம், நாடகம் என்பன தவத்திரு தனிநாயகம் அடிகள் அரங்கில் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அகமது, சிறப்பு விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆகியோர் கலந்து சிறப்பிககவுள்ளனர். (செ-9)

# கொலை செய்த...

விமல் விக்கிரம என்ற குறித்த இராணுவ உறுப்பினர் தனது கடமையைச் செய்துள்ளதாகவும், எனினும் அவருக்கு எதிராக சாட்சியங்கள் உருவாக்கப்பட்டு குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன குற்றம்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் உக்கிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இராணுவத்தில் இணைந்து பணியாற்றி தற்போது ஓய்வில் சென்றுள்ள விமல் விக்கிரம என்ற இராணுவ உறுப்பினருக்கு தற்போது ஒரு பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த தற்கொலைதாரி ஒருவரை கைது செய்து தடுத்து வைத்திருந்ததோடு, அவர் தப்பித்துச் செல்ல முற்படுகையில் அவரை சுட்டுக்கொன்றார். சர்வதேச நியமங்களுக்கு அமைய யுத்தம் முன்னெடுக்கப்பட்டதால் அவரை குற்றவாளியெனக் குறிப்பிட்டு வடக்கில் வழக்கு விசாரணைகளை முன்னெடுத்ததோடு, சாட்சிகளை உருவாக்கி கொழும்பிலும் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இறுதியில் தீவிரவாதியை சுட்டுக்கொன்றமை குற்றமென அறிவித்ததோடு, ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதிக்கு முன்னர் 20 இலட்ச ரூபாயை உயிரிழந்த நபரின் நெருங்கிய உறவினர்களுக்கு வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. 22 வருடங்கள் இராணுவ சேவையாற்றிய ஒருவருக்கே இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இதனால் நாடு எமக்கு சாபமிடும். இந்த பணத்தை அரசாங்கம் செலுத்தப்போவது இல்லை. நாம் ஒன்றிணைந்து பணத்தை சேர்ப்பதற்கான முயற்சியில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம் என பந்துல குணவர்த்தன குறிப்பிட்டார்.

கடந்த 1998ஆம் ஆண்டு பேதுருதுடுவ இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் தப்பிச் செல்ல முற்பட்டதாக கூறப்படும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சந்தேகநபர் ஒருவரை, துப்பாக்கியால் சுட்டு அவரது மரணத்துக்கு காரணமானதாக இருந்ததாக இராணுவத்தைச் சேர்ந்த முன்னாள் லெப்டினட் தர உறுப்பினர் ஒருவருக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

குறித்த இராணுவ உறுப்பினருக்கு எதிராக சட்ட மாஅதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில், வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நீண்ட காலமாக இடம்பெற்றுவந்த வழக்கு விசாரணைகளின் நிறைவில் கடந்த மாதம் 31ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரோஜினி குசலா வீரவர்தன, குறித்த முன்னாள் இராணுவ வீரரை குற்றவாளி என அறிவித்தார்.

10ஆயிரம் ரூபாய் அபராதமும் உயிரிழந்த நபரின் நெருங்கிய உறவினருக்கு 20 இலட்சம் ரூபாய் நட்டஈடு வழங்குமாறும் நீதிபதி உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(செ-11)

# சம்பூரில் அனல்....

ராஜரட்ணம் இந்த விடயம் குறித்து தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர் மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் தீர்மானம் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த மனு மீதான விசாரணை முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

சம்பூரில் இந்தியாவின் உதவியுடன் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டிருந்த அனல் மின் நிலையத்திற்கு உள்ளூர் மக்களும் பல்வேறு சிவில் அமைப்புக்களும் தொடர்ச்சியாக எதிர்ப்பு தெரிவித்து வந்திருந்தனர்.

சுற்றாடலுக்கும் மக்களுக்கும் பாதிப்பு ஏற்படும் எனத் தெரிவித்தே குறித்த அனல் மின் நிலையத்திற்கு தொடர்ச்சியாக எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில், குறித்த திட்டம் முன்னெடுக்கப்படமாட்டாது என மின்சக்தி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சம்பூரில் அனல் மின் நிலையத்தை நிர்மாணிப்பது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் 2011 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 6 ஆம் திகதி ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

512 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 500 மெகா வோட்ஸ் மின் உற்பத்தி செய்யும் இலக்குடன், குறித்த அனல் மின் நிலையத்தை நிர்மாணிப்பதற்கென 540 ஏக்கர் காணி அடையாளம் காணப்பட்டிருந்தது.

யுத்தத்தின் போதான காலப் பகுதியில் குறித்த பகுதியில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்திருந்த நிலையில், அனல் மின் நிலையத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

எனினும் குறித்த பகுதியில் மீள் குடியேற்றப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், குறித்த அனல் மின் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு எதிராக பிரதேச மக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது (செ-11)

# இலங்கை குறி...

ஜெனிவாவில் ஆரம்பமான நிலையில் ஆரம்ப உரையை நிகழ்த்திய மனித உரிமை ஆணையாளர் செய்ட் அல்ஹூசேன் இலங்கை குறித்து எதனையும் பிரஸ்தாபிக்கவில்லை.

இலங்கைக்கு கடந்த வருடம் விஜயம் செய்திருந்த பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஐக்கிய நாடுகளின் செயற்குழு தமது அறிக்கையை வெளியிட்டுள்ள நிலையிலும் அதற்கு இலங்கை பதிலளித்துள்ள சூழலிலும் அது தொடர்பில் எந்தவொரு விடயத்தையும் செய்ட் அல் ஹூசேன் நேற்றுக் குறிப்பிடவில்லை.

நேற்றைய உரையில் நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்த செய்ட் அல் ஹூசேன் பல்வேறு நாடுகளின் மனித உரிமை நிலைமைகள் குறித்து சுட்டிக்காட்டியிருந்தார். எனினும் இலங்கை தொடர்பில் ஹூசேன் எதனையும் பிரஸ்தாபிக்கவில்லை. (செ-11)

# காணாமல் போ...

இடம்பெறவுள்ளது.

இந்நிலையில், இலங்கையில் மூன்று பத்தாண்டுகளாக நடந்த போரில் காணாமற்போகச் செய்யப்பட்டோர் விவகாரம் தொடர்பாக நாளை நடைபெறும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அமர்வில், ஆராயப்படவுள்ளது.

பலவந்தமாக காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா பணிக்குழு, 2015ஆம் ஆண்டு இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்தின் போது கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பாக நாளை நடக்கவுள்ள, கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

இதற்கு முன்னதாக, இலங்கை அரசாங்கம் பேரவைக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும் என்றும் தெரியவருகிறது.

காணாமற்போனோர் தொடர்பான பணியகம் உருவாக்கப்படவுள்ளமை உள்ளிட்ட மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், ஜனநாயக நடைமுறைகள், நல்லாட்சியை ஏற்படுத்தவும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாகவும், இந்த அறிக்கையில் விளக்கிக் கூறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, பலவந்தமாக காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா பணிக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராய்வதாகவும், இந்தக் குழுவுடன் இணைந்து செயற்படுவது தொடர்பாக ஆலோசிப்பதாகவும், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளருக்கு இலங்கை அரசாங்கம் ஏற்கெனவே தெரியப்படுத்தியிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-11)

# பேரறிவாளன்...

என்ற கைதியே இந்த தாக்குதலை நடத்தியுள்ளார்.

இந்த தாக்குதலில் பேரறிவாளனுக்கு கையில் பலத்த காயமும், தலையில் சிறிய காயமும் ஏற்பட்டது.

இதையடுத்து சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு, மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

பேரறிவாளானின் கையில் ஏற்பட்ட காயங்களுக்கு ஆறு தையல்கள் போடப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கான காரணம் குறித்து எதுவும் சரிவரத் தெரியவில்லை என்று பேரறிவாளனின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார். (செ-11)

# வலம்புரி செய்...

பதில் அளித்திருந்தார்.

இறுதி போரின் போது வடக்கில் இராணுவத்தினர் வசம் 11 ஆயிரத்து 269 ஏக்கர் நிலம இருந்ததாகவும் அதில் 7 ஆயிரத்து 210 ஏக்கர் காணி வரையில் உரிமையாளர்களிடத்தில் கையளிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் 27 ஆயிரத்து 259 ஏக்கர் காணி இராணுவத்தினரிடம் இருந்தது. அதில் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 21 ஆயிரத்து 134 ஏக்கர் காணி பொதுமக்களிடம் 11 தடவைகளாக கையளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பலாலியில் இராணுவம் இல்லாத பிரதேசமும் விடுவிக்கப்படவுள்ளது.

மேலும் காணி இல்லாதவர்களுக்கு காணி வீடு வழங்குவதற்கும் தேசிய பாதுகாப்பு கருதி தேவையான காணிகளை எம் வசம் வைத்திருந்து அந்தக்காணிக்குரிய நட்டஈட்டினை உரிமையாளர்களுக்கு வழங்கவும அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு ள்ளது.

தற்போது நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கு குறித்த விடயம் தொடர்பாக 3 பிரிவான கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளது என கட்டளைத் தளபதி தெரிவித்தார் என அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

# இரணைதீவு மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, இரணைதீவு பகுதியில் மீனவர்கள் தங்கியிருந்து மீன்பிடிப்பதற்கு கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் சில தினங்களுக்கு முன்னர் அங்கு விஜயம் செய்து மீனவர்களது குறைபாடுகள் குறித்து ஆராய்ந்திருந்தார். இதன்போது இரணைதீவுப் பகுதியில் தங்கியிருந்து மீன்பிடிக்க அனுமதி பெற்றுத்தர வேண்டுமென்று மீனவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மீனவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவுக்கு இணங்க இரணைதீவு பகுதியில் தங்கியிருந்து மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு தற்போது கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

சிறுத்தீவு பகுதியில் மீனவர்கள் தங்கியிருந்து மீன்பிடிப்பதற்கு அனுமதி கோரியிருந்த நிலையில் அதற்கான அனுமதியையும் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் பெற்றுக்கொடுத்திருந்தார். இந்நிலையிலேயே தற்போது இரணைதீவு மீனவர்களும் தங்கியிருந்து மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. (செ)

## காணி விற்பனைக்கு உண்டு

பூநகரி முக்கொம்பனில் முக்கொம்பன் பாடசாலைக்கு அண்மித்த தூரத்தில் நல்லூர் முக்கொம்பன் பிரதான வீதியில் காணி விற்பனைக்கு உண்டு.

(C-5052) தொடர்பு :- 0767762475


## மோ.சைக்கிள் விபத்து...

கட்டுப்பாட்டை இழந்து வீதிக்கு அருகில் நீண்ட தூரம ஓடிய நிலையில் விபத்திற் குள்ளாகியது.

இதன் போது குறித்த இளைஞன் மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கி எறியப்பட்டு கடுமையான காயங்களுக்கு உள்ளானார்.

உடனடியாக அப் பாதையூடாக வந்த முச்சக்கர வண்டியில் குறித்த இளைஞன் ஏற்றப்பட்டு மன்னார் பொது வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் குறித்த இளைஞன் பரிதாபகரமாக உயிரிழந்தார். இளைஞனின் சடலம் தற்போது மன்னார் பொது வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துதொடர்பான விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-4)

## கேணல்...

பாணை விடுத்துள்ளனர்

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வட போர்முனையின் கட்டளைத் தளபதிகளில் ஒருவராக இருந்து மரணமடைந்த கெங்காதரன் எனும் லெப் கேணல் கலையழகனின் மனைவி விடுதலைப்புலிகள் அமைப்பில் ஏழு வருடங்கள் இருந்ததாகவும், கலையழகன் பயன்படுத்திய கைத்துப்பாக்கியைப் தற்போதும் வைத்திருப்பதாகவும், புலம்பெயர் தமிழர்களுடன் தொடர்புகளை பேணுவதாகவும் கூறி அவரை பல தடவைகள் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரித்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அவரது கிளிநொச்சி விநாயகபுரம் வீட்டுக்குச் சென்ற பயங்கரவாத தடுப்பு பிரிவினர் நாளை 15 ஆம் திகதி கொழும்பு இரண்டாம் மாடிக்கு வாக்குமூலம் ஒன்று அளிப்பதற்காக வருகை தருமாறு அழைப்பாணை வழங்கியுள்ளனர். (செ-312)


## V2 TRAVELS

குறைந்த விலையில் சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்.

- வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு.
- வெளிநாட்டு விசா (UK,கனடா,சுவிஸ்,ஜேர்மனி,பிரான்ஸ்) விண்ணப்ப படிவம்(Online form) நிரப்புதல்.
- இந்தியா, தாய்லாந்து, மலேசியா விசாக்கள்.

தொடர்புகளுக்கு: 0768226240

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- நெல்லியடி
- வல்வெட்டித்துறை

(C-5736)



## 2016 ல் A/L எடுத்தவரா? 6மாத இலவச பயிற்சி நெறி

உங்கள் பரீட்சை பெறுபேறுகள் வரும்வரை 6 மாதங்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய இலவச கற்கை நெறி



- விமான பயணச்சீட்டு பதிவுகள்
- MS Office
- Photoshop
- அலுவலக முகாமைத்துவம்

ஊக்கத்தொகை வழங்கப்படும்

0768226243

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி - நெல்லியடி பருத்தித்துறை - வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-5750)



## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



அழையுங்கள் - 077 29 31 062

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

(C-5740)



## சுகாதார துறையில் இணைந்து கொள்வதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம் உலக அங்கீகாரம் பெற்ற தொழில்சார் பயிற்சி பாடநெறிகள்



Study in Australia

யாழ்ப்பாணத்தில்

Apply with G.C.E.(O/L).
Course fee starts from 8000 AUD$

*Pathway to be a Qualified Nurse at*

JTI
Job Training Institute

கல்லூரி பிரதிநிதிகளைச் சந்திக்கும் வாய்ப்பு யாழ்ப்பாணத்தில்

Sep 14th
Tilko City Hotel

Meet JTI Marketing Manager
MS.Anne Theodore
9.00am to 3.00pm

Sep 18th Colombo The Kingsbury Hotel

Sep 16th -17th Ethics Office Negombo

அனுமதி இலவசம்

ETHICS INTERNATIONAL
No. 28, 2nd Floor, Keells Super Building, Colombo Road, Negombo.
Hot Line 0773 849399
Jaffna - 077 250 3598

(C-5740)



# சீரடிபாபா தரிசனம்

### ஐந்து ஜோதிலிங்கங்கள் ஒரே தடவையில் தரிசனம்

மும்பாய் நாசிக் பஞ்சவடி சீரடிப்பாபா 2 நாள் தரிசனம். ஜோதிலிங்கங்கள் 1.பீமாசங்கர் 2. திரியம்பகேஸ்வரர் 3. பரனிவைத்தியநாதம் 4.கிருஸ்ணேஸ்வரர் 5. அவுண்டநாகநாகநாதம். கணபதி கோவில் சனிசிங்கனாப்பூர் பண்டரிபுரம் நாராயணர், துல்ஜாப்பூர் துர்க்கா கோவில் அக்கல்கோட் சுவாமி சமத்தர், எல்லோரா சிற்பக் கலைக்கூடம். பத்ரமாருதி ஆஞ்சினேயர் உட்பட. ஆரம்பம் 04.10.2016. நாட்கள் 09. எமது சேவை இருவழி விமான டிக்கெட். மூன்று வேளை மடப்பள்ளி சமையல் ஆட்கள் சமைத்த சுத்தமான சைவ உணவு. மினரல் வாட்டர், சுற்றிப்பார்க்க AC வாகன வசதி, விமான நிலையம் போகவர வாகன வசதி உட்பட விபரங்களை கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.

விபரங்கட்கு கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் T.P:-0777680102
யாழ்ப்பாணத்தில் S.B. ரவல்ஸ் சுஜன் 212. கஸ்தூரியார் றோட் யாழ்ப்பாணம்.
T.P:- 077 1083483 076 6911090

facebook :-
sridevisriranganathan thuraiappa

(C-5746)



## BRITISH COLLEGE OF HIGHER STUDIES வழங்கும்

# After AL What Next ?

உங்களின் கனவும் பெற்றோரின் ஆசைகளும் நிறைவேற

பல்கலைக் கழகமா? உயர்கற்கை நெறியா? புதிய தொழில் வாய்ப்பா?

உங்களின் ஆங்கில அறிவை நனவாக்குவதே ஒரே வழி
அதை மேம்படுத்துவதே எமது நோக்கு

## Spoken English with Grammar 1½ Months

100% பயிற்சி

சர்வதேசத் தரம் கொண்ட பாடத்திட்டங்களை உள்ளடக்கி மிகவும் இலகுவான விளக்கங்களுடன் அனைவருக்கும் பயனுள்ள வகையில் கற்பிக்க வகை செய்திருக்கின்றோம். ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே இந் நெறி நடாத்தப்படுகிறது. மாணவர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும்ஆங்கிலம் கற்க

100% வெற்றி

## Diploma In English 2½ Months

ஒரு தொழில் தேடுவதாயினும், உயர் கல்வியினைத் தொடருவதாயினும், ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதுள்ளது. இவை யாவையும் கருத்தில் கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கபடுகிறது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

- ★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
- ★ எமது கற்கை நெறிகள் Reading,Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
- ★ Excellent Teachers' Panel & Individual Attention
- ★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.
- ★ ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்கட்கு தனிப்பட்ட கவனமும், கூடுதல் பயிற்சிகளும் வழங்கப்படும்

| Spoken English with Grammar | | Diploma in English | |
|---|---|---|---|
| ~~Rs.10'000~~ | Rs.7'500 | ~~Rs.14'000~~ | Rs.9'500 |

Batches Start On
14.09.2016 @ 9.00 am
16.09.2016 @ 9.00 am
19.09.2016 @ 9.00 am
21.09.2016 @ 9.00 am

BCHS
No.15, CSirambiyady Lane (off Stanley Road), Jaffna (Near Ariyakulam & Above Sathosa SM)
T.P :- 021 222 4550 / 0777 304 545

(C-5744)



## கிளிநொச்சியில் வீட்டில் இருந்தவாறே மாத வருமானம்

ரூபா 11,680 தொடக்கம் ரூபா 21,900 வரை வேண்டுமா?

இவ் ஆண்டு உயர்தரத்திற்கு தோற்றிய கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாணவர்களுக்கு மாத்திரமே !

100 Seats ONLY



## கருத்தரங்கு மற்றும் வேலைவாய்ப்பு

17.09.2016 (சனிக்கிழமை)

ESOFT METRO COLLEGE - KILINOCHCHI

### பல்கலைக் கழக பேராசிரியர்களுடன் இணைந்து

உள்நாட்டு, வெளிநாட்டு உயர்கல்வி வாய்ப்புக்கள் தொழில் வழிகாட்டல் போன்ற ஆலோசனைகள், இணையத்தள வேலை வாய்ப்புக்கள் தொடர்பான வழிகாட்டல்களை துறைசார்ந்த நிபுணத்துவம் பெற்றவர்களின் மூலம் பெற்றுக் கொள்ளமுடியும்

- ஆசன எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
- இலவச நுழைவுச் சீட்டு.
- துறைசார் நிபுணர்களைத் தனியாக சந்திக்கும் வாய்ப்பு.

பங்குபற்றுபவர்களுக்கான சான்றிதழ் வழங்கப்படும்

### இன்றே விரையுங்கள்.....! இறுதிச் சந்தர்ப்பம்...!!!

இணையத்தளத்தினூடான வேலை வாய்ப்பை எம்முடன் சேர்ந்து உறுதிப்படுத்துங்கள்.

Fast Trrack SMS
OLJB என குறிப்பிட்டு உங்களது பெயர் விபரங்களை 0778842423 அனுப்பி வையுங்கள்

ESOFT Shaping Lives, Creating Futures.

ESOFT METRO COLLEGE - KILINOCHCHI
No. 01,Kanagapuram Road, Kilinochchi Sri Lanka
Hotline : 077 8842423 | Tel : 021 228 5444

இலங்கையின் மிகப்பெரிய உயர்கல்வி வலையமைப்பு

(C-5745)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.